கல்கி



KALKI

ஜூன் 8,1952

4 அணா



பற்களை சுத்தம் செய்வது பாதி வேலை தான் . . .
தினமும் ஈறுகளைப் பாதுகாப்பது அந்த வேலையை பூர்த்திசெய்கிறது!
உங்கள் பற்கள் ஒழுங்காகவும் ஆரோக்கியத்துடனும் இருந்தாலுங்கூட ஈறுகள் பலமற்றோ அல்லது நோயுற்றோ போனால் அவைகளை வெகு எளிதில் இழக்க நேரிடும். ஆகவே இந்த ஆபத்துக்குள்ளாகாதீர்கள்! தினமும் இருமுறை கிப்ஸ் எஸ். ஆர். டூத்பேஸ்ட் உபயோகியுங்கள். பல்வைத்தியர்கள் ஈறுகளை சிகிச்சை செய்ய உபயோகிக்கும் ஸோடியம் ரிஸினோலியேட் இதில் அடங்கியுள்ளது. மேலும் இது பற்களை பளிச்சென்று வெண்மையாக சுத்தம் செய்கிறது.
கிப்ஸ்
எஸ்.ஆர். டூத்பேஸ்ட்
பற்களை பளிச்சென்று வெண்மையாகவும் ஈறுகளை ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது.
S.R. TOOTHPASTE
for teeth and gums
S.R. TOOTHPASTE
for teeth and gums

GSR. 89-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 11
இதழ் 45

1952 ஜூன் 8

நந்தன ௵
வைகாசி 26

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



ஜுபிடர்
..தயாரிப்பு..
ராணி
சென்னை
பாரகன், ஸ்ரீ கிருஷ்ணா, சயானி
மற்றும் தென்னாடெங்கும் நடைபெறுகிறது
டைரக்‌ஷன்: பிரசாத்.. ஸ்டுடியோ: சென்ட்ரல், நெப்ட்யூன்

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 45

முடிந்தது; ஆனால் முடியவில்லை!

இலங்கையில் பொதுத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. ஸ்ரீ டட்லி சேன நாயகா வெற்றி அடைந்தார். அவருடைய யு. என். பி. கட்சியும் கணிசமான பெரும்பான்மையுடன் வெற்றி அடைந்தது. அதாவது இலங்கை பார்லிமெண்டின் 95 ஸ்தானங்களில் 54 ஸ்தானங்களை அரசாங்கக் கட்சி கைப்பற்றி விட்டது.

இது ஸ்ரீ டட்லி சேன நாயகாவுக்கு வெற்றி; அவருடைய காலஞ்சென்ற தந்தை ஸ்ரீ ஸ்டீபன் சேன நாயகாவுக்கு அமோகமான வெற்றி. இன்னும் ஐந்து வருஷங்களுக்கு ஸ்ரீ டட்லி சேன நாயகாவைத் தலைவராகக் கொண்ட யு. என். பி. கட்சியார் இலங்கை அரசாங்கத்தை நடத்துவார்கள். ஸ்ரீ டட்லி சேன நாயகாவே நீடித்து முதன் மந்திரி பதவி வகித்து வரக்கூடும்.

எதிர்பார்த்தபடியே இந்த முடிவு ஏற்பட்டது என்று சொல்வதில் தவறில்லை. இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளுக்குள் யு. என். பி. கட்சிதான் சிங்கள மகா ஜனங்களுக்குள்ளே செல்வாக்குப் பெற்றிருக்கும் கட்சியாகும். காலஞ் சென்ற பெரிய ஸ்ரீ சேன நாயகா இலங்கையின் முன்னேற்றத்துக்குரிய பல சேவைகளை அவருடைய காலத்தில் புரிந்தவர். தனிப்பட்ட வேறு எந்தச் சிங்களத் தலைவரும் அவ்வளவு பொதுத் தொண்டு செய்ததில்லை. உலகத்து நாடுகளுக்கு முன்னிலையிலும் பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளுக்கு இடையிலும் சிறிய நாடாகிய இலங்கைக்குப் பெரிய அந்தஸ்தைக் காலஞ்சென்ற ஸ்ரீ சேன நாயகா தேடிக் கொடுத்தார். அதையெல்லாம் சிங்கள மக்கள் எளிதில் மறந்துவிட முடியாது. அவர் குதிரையினின்று விழுந்து திடீர் மரணம் எய்தியது சிங்கள மக்களிடையே பெரிதும் மனக் கிளர்ச்சியை உண்டாக்கிற்று. அந்த மனக் கிளர்ச்சி அவருடைய புதல்வரிடம் அநுதாபமாக மாறியது. இவ்வளவும் பொதுத் தேர்தலுக்குச் சற்று முன்பே நடந்தது. எனவே சிங்கள மக்களில் பெரும்பாலோர் ஸ்ரீ டட்லி சேன நாயகாவையும் அவருடைய யு. என். பி. கட்சியையும் ஆதரித்ததில் வியப்பு ஒன்றுமில்லைதானே?

* * *


இலங்கை மக்களில் சிங்களவர்கள் பெரும்பான்மையோர். சிங்களவர்களுக்கு அடுத்த படியாக பழைய இலங்கைத் தமிழர்கள் (யாழ்ப்பாணம்—மட்டக்களப்பு—முதலிய பகுதிகளில் வசிப்பவர்கள்) சுமார் எட்டு லட்சம் பேர். இவர்கள் சென்ற பொதுத் தேர்தலில் யு. என். பி. கட்சியை எதிர்த்து நின்ற தமிழ் காங்கிரஸ் கட்சியை ஆதரித்தார்கள். சென்ற தேர்தலுக்குப் பிறகு இந்தத் தமிழ் காங்கிரஸ் கட்சி பிளவு பட்டது. ஸ்ரீ பொன்னம்பலம் தலைமையில் ஒரு பகுதியார் ஸ்ரீ சேன நாயகாவுடன் ஒத்துழைக்கத் தொடங்கினார்கள். மந்திரி பதவியும் ஒப்புக் கொண்டார்கள்.

இந்தப் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தமிழர்களின் மனப்பான்மை சர்க்கார் கட்சியுடன் ஒத்துழைக்கும் துறையில் மாறியிருப்பதாகத் தெரிகிறது.

ஒத்துழைக்கத் தீர்மானித்த தமிழ் காங்கிரஸ் பிரிவினர், ஸ்ரீ பொன்னம்பலம் கோஷ்டியார், வெற்றி அடைந்திருக்கின்றனர்.

ஒத்துழைக்க மறுத்து, தமிழர் வசிக்கும் பகுதிக்குத் தனி அரசு கேட்ட ஸ்ரீ செல்வநாயகம் கோஷ்டியார் தோல்வி அடைந்தனர்.

இது மட்டுமல்ல; ஸர் பொன்னம்பலம் ராமநாதனின் மருகரும் சிறந்த தமிழன்பருமான ஸ்ரீ எஸ். நடேசன் சர்க்கார் யு. என். பி. கட்சியின் உபதலைவர். இவர் சென்ற பொதுத் தேர்தலில் தோல்வி அடைந்தார். யாழ்ப்பாணத் தமிழர்களின் உணர்ச்சி அப்போது அவ்வாறு இருந்தது. இம்முறை ஸ்ரீ எஸ். நடேசன் மீண்டும் தேர்தலுக்கு நின்றபோது அவருடைய நண்பர்கள் பலரும் "அடடா! எதற்காக இவர் நிற்கிறார்?" என்று அநுதாபப் பட்டார்கள். அத்தகைய நண்பர்கள் பெரு வியப்பும் மகிழ்ச்சியும் அடையும்படியாக ஸ்ரீ எஸ். நடேசன் இம்முறை தேர்தலில் வெற்றி அடைந்திருக்கிறார்.



ஸ்ரீ டட்லி சேனநாயகா

ஸ்ரீ எஸ். நடேசன் அவர்களுக்கு நம் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் ஸ்ரீ சேன நாயகாவின் யு. என். பி. கட்சியைச் சேர்ந்தவராயினும், அக் கட்சிக்குள் தம் செல்வாக்கைப் பூரணமாகப் பயன்படுத்தி, வாக்குரிமை பறிக்கப்பட்ட எட்டு லட்சம் இந்தியர்களுக்கு நீதி வழங்கப் படுவதற்கு பெரு முயற்சி செய்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

* * *

ஆம்; இலங்கைத் தேர்தல் முடிந்துதான் விட்டது. ஆனல் இலங்கை - இந்தியர் பிரச்னை முடியவில்லை. நியாயம் பிறக்கும் வரையில் முடியவும் முடியாது.

இந்தப் பொதுத் தேர்தலில் நடந்த பெரும் அநீதி என்னவென்பதை நேயர்களுக்கு நினைவூட்டுகிறோம். சென்ற நூறு வருஷ காலத்தில் இலங்கைக்குச் சென்று, தேயிலை ரப்பர் தோட்டங்களில் உழைத்து, இலங்கை வளங் கொழிக்கும் நாடாவதற்கு முக்கிய காரணமாயிருந்த எட்டு லட்சம் இந்தியர்கள் அந்நாட்டில் வசித்து வருகிறார்கள். சர்வ தேசிய சட்டங்கள்—தர்ம நீதிகளின் பிரகாரம் அவர்கள் உண்மையில் இலங்கைப் பிரஜைகளே யாவர். சென்ற பொதுத் தேர்தலில் அவர்களில் சுமார் இரண்டு லட்சம் பேருக்கு வாக்குரிமை இருந்தது. இந்தப் பொதுத் தேர்தலில் அவர்களில் இரண்டாயிரம் பேருக்குக் கூட வாக்குரிமை இல்லை!

தலவாக்கலி என்பது ஒரு தேர்தல் தொகுதி. இத்தொகுதியில் சென்ற பொதுத் தேர்தலில் 19,000 வாக்காளர்கள் இருந்தார்கள். இவர்கள் பெரும்பாலும் இந்தியர்கள்.

அத் தொகுதியின் விஸ்தீரணம் இம்முறையும் அப்படியே இருக்கிறது. மொத்த ஜனத்தொகை இன்னும் கொஞ்சம் அதிகமாகியிருக்கிறது ஆனல் இம்முறை வாக்காளர்களின் தொகை எவ்வளவு தெரியுமா! மொத்தம் 2,000 பேர்தான்!

மற்றப் பதினேழாயிரம் பேரின் வாக்குரிமை பறிக்கப்பட்டு விட்டது.

காரணம், அவர்கள் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளவில்லை என்பது!

உரிய காலத்தில் அவர்கள் விண்ணப்பம் என்னமோ போட்டிருக்கிறார்கள். ஆனல் வண்ணப்பங்கள் பைஸல் செய்யப்படவில்லை. ஆகையால் அவர்களுடைய பெயர்கள் வோட்டர் ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட்டு விட்டன!

மேற்படி தொகுதியில் பத்தொன்பதினாயிரம் வோட்டர்கள் இருந்தபோது இலங்கைப் பார்லிமெண்டுக்கு இந்தியர் ஒருவர் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

இம்முறை இரண்டாயிரம் வோட்டர்களும் சிங்களவர்கள்; ஆகையால் சிங்களப் பிரதிநிதி பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

இவ்வாறு இன்னும் ஆறு தொகுதிகளில் நடந்திருக்கிறது. எனவே, சென்ற பார்லிமெண்டில் ஏழு இந்தியர்கள் அமர்ந்திருந்த ஸ்தானங்களில் இப்போது ஏழு சிங்களப் பிரதிநிதிகள் அமர்ந்திருக்கிறார்கள்.

இது சிங்களவர்களுக்கு ஒரு பெரிய நன்மை—லாபம்—அநுகூலம் என்பதாக ஸ்ரீ டட்லி சேனநாயகா சொல்வதிலும் வியப்பில்லை; அதைப் பெரும்பாலான சிங்கள சகோதரர்கள் நம்புவதிலும் ஆச்சரியமில்லை.

ஆனல் விஷயம் இத்துடன் முடிந்து விட்டதாகாது என்பது நிச்சயம்.

இலங்கை வளம் பெறுவதற்கு முக்கிய காரணமாயிருந்த எட்டு லட்சம் இந்தியர்களுக்குப் பிரஜா உரிமையும் வாக்குரிமையும் மறுக்கப்பட்டதை நாகரிக உலகம் ஒப்புக் கொள்ளாது; இந்தியா தேசம் ஒப்புக் கொள்ளாது: இந்திய மக்கள் நாற்பது கோடி பேர் ஒருகாலும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

உலகத்து அரசியலில் எந்தவிதமான அநீதியும் வெகு காலத்துக்கு நீடித்திருக்க முடியாது. முடிந்து போன விஷயமாகவும் கருதப்பட மாட்டாது.

அநீதியான ஏற்பாட்டைப் பிடிவாதம் பிடித்து நிலைநாட்ட எண்ணினல் அதிலிருந்து எதிர்பாராத வேறு பல விபரீதங்கள் ஏற்பட்டே தீரும்.

உலகத்தின் பழைய சரித்திரத்திலும் நமது காலத்துச் சரித்திரத்திலும் இதற்கு எத்தனையோ சான்றுகள் எடுத்துக் காட்டலாம்.

* * *

இலங்கை இந்தியர் விஷயமாக நம் தீர்க்க தரிசனம் வாய்ந்த தலைவர் ராஜாஜி கூறியதை நினைவூட்ட விரும்புகிறோம்.

"இலங்கையில் குடியேறிய இந்தியர்கள் அந்த நாட்டுப் பிரஜைகளேதான். அவர்களை ஒரு நாளும் இந்தியாவுக்கு நாம் திருப்பி அழைத்துக் கொள்ள முடியாது. ஒன்று இலங்கை இந்தியர்கள் அங்கே பூரண உரிமை பெற்ற நல்ல பிரஜைகளாக வாழ வேண்டும்; அல்லது உரிமை பெறாதவர்களாய் இலங்கை சர்க்காருக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டு வாழ வேண்டும்!"

இந்தத் தீர்க்க தரிசன வாக்கை இலங்கை சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று கோருகிறோம்.

இலங்கை இந்தியத் தலைவர்கள் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து சர்க்காருக்குத் தொல்லை கொடுப்ப

தாக ஸ்ரீ சேன நாயகா போன்றவர்கள் புகார் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். இது வெறும் பிரசாரத்தைத் தவிர வேறொன்றுமில்லை. ஸ்ரீ பெரிசுந்தரம், ஸ்ரீ தொண்டமான், ஸ்ரீ ராஜலிங்கம் முதலியவர்கள் காந்தியத்தில் பூரண நம்பிக்கை கொண்டவர்கள். அஹிம்சை நெறியை விட்டு அவர்கள் ஒரு நாளும் விலக மாட்டார்கள்.

இலங்கை இந்தியர்கள் எட்டு லட்சம் பேர் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்வதா யிருந்தால், அது இலங்கை சர்க்காரின் குறுகிய நோக்கமுள்ள காரியங்களின் பலனாகவே இருக்க வேண்டும்.

ஜனநாயக வெள்ளம் அலை மோதிப் பரவும் இந்தக் காலத்தில் வாக்குரிமையை அனுபவித்து வந்த லட்சக் கணக்கான மக்களுக்குத் திடீரென்று வாக்குரிமை மறுத்தால், அவர்கள் மனம் கொதிப்படைவது இயற்கை.

அந்த நிலைமையில் அவர்கள் கம்யூனிஸ்ட் பிரசாரத்துக்கு எளிதில் வசப்படுவதும் சாத்தியமாகும்.

சிறிய தேசமாகிய இலங்கைக்கு இது எவ்வளவு பெரிய ஆபத்தா யிருக்கும் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. அரசியல் அறிந்தவர்கள் எவரும் எளிதில் ஊகித்தறியலாம்.

அத்தகைய விபரீத நிலைமை ஏற்படுவதை ஸ்ரீ டட்லி சேனநாயகாவும் அவருடைய சகாக்களும் ஒருநாளும் விரும்ப மாட்டார்கள்.

எட்டு லட்சம் இந்தியர்களை இலங்கையின் நல்ல பிரஜைகளாக வைத்துக்கொள்ள விரும்புவார்களே யன்றிச் சர்க்காருக்குத் தொல்லை கொடுப்பவர்களாக வைத்துக் கொள்ளச் சிங்களத் தலைவர்கள் ஒருகாலும் ஆசைப் படமாட்டார்கள்.

மொத்தம் 95 ஸ்தானங்கள் உள்ள பார்லிமெண்டில் ஏழு ஸ்தானங்களை இந்தியப் பிரதிநிதிகள் வகிக்கும்படி கொடுப்பதினால் இலங்கைக்கு நஷ்டம் ஒன்றும் ஏற்படப் போவதில்லை; எல்லாவிதத்திலும் நன்மைதான் ஏற்படும்.

ஆகையால், இந்தியரின் பிரஜா உரிமை விஷயமும் வாக்குரிமை விஷயமும் முடிந்துபோய்விட்டதாக யாரும் கருத வேண்டாம்.

இலங்கை இந்தியத் தலைவர்கள் பொறுமையைக் கடைப் பிடித்துக் காந்தி மகான் காட்டிய அஹிம்சா நெறியில் நடந்து வருவார்களாக.

இன்று இல்லாவிட்டால் நாளை, அவர்கள் நிச்சயம் வெற்றி காண்பார்கள்.

"தர்மமே ஜயம்" என்பது வெறும் வார்த்தை அல்லவே! நம் கண் முன்னால் அனுபவத்தில் காணும் உண்மை அல்லவா!

கோவை ஜில்லாவுக்கு ஒரு சோதனை

சென்ற முப்பது ஆண்டு காலமாகக் கோயமுத்தூர் ஜில்லா தேச விடுதலைப் போரின் முன்னணியில் நின்று வந்திருக்கிறது. காங்கிரஸ் பக்தியில் தலைசிறந்த ஸ்தானத்தை அந்த ஜில்லா வகித்து வந்திருக்கிறது.

மற்ற ஜில்லாக்களில் ஏற்பட்ட காங்கிரஸ் ஸ்தாபனப் போராட்டங்கள் கோவையில் தலைகாட்டவில்லை. தலைவர்களுக்குள்ளும் தொண்டர்களுக்குள்ளும் அங்கே சண்டை சச்சரவே இல்லை. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் சமரசமாகக் காங்கிரஸ் வேலைகளைத் தீவிரமாக நடத்தி வந்திருக்கிறார்கள்.

பொதுமக்கள் காங்கிரஸைப் பெருமிதமாக ஆதரித்திருக்கிறார்கள். ஏழைகள், பணக்காரர்கள், முதலாளிகள், பாட்டாளிகள் அனைவரும் ஆதரித்திருக்கிறார்கள்; சாதி வேற்றுமை, சமய வேற்றுமை இன்றி ஆதரித்திருக்கிறார்கள்.

சிறிய குற்றங்கள் ஏதேனும் நடந்துவிட்டாலும் பொருட்படுத்தாமல் காங்கிரஸை ஆதரித்து வந்திருக்கிறார்கள். குறைகளைப் பிற்பாடு தீர்த்துக் கொண் டிருக்கிறார்கள்.

சென்ற பொதுத் தேர்தலில் மற்ற ஜில்லாக்களில் காங்கிரஸ் வண்டி குடை சாய்ந்தபோதும் கோவை ஜில்லா மட்டும் உறுதியாக நின்று காங்கிரஸுக்குப் பெருமித வெற்றி அளித்தது.

அதனாலேயே சென்னையில் ராஜாஜி மந்திரி சபை ஏற்படுவது சாத்தியமாயிற்று. அதற்குக் கோவை காங்கிரஸ் தலைவர்கள் பெரும் பிரயத்தனம் செய்தார்கள். அவர்களுடைய முயற்சி இல்லாதிருந்தால் ராஜாஜி மந்திரி சபை ஏற்பட்டிராது. இம்மாகாணம் இப்போது இவ்வளவு சந்தோஷமாக இருந்திருக்க முடியாது. இவ்வளவு நம்பிக்கையுடன் வருங்காலத்தை இம் மாகாண மக்கள் எதிர்பார்க்கவும் முடியாது.

அத்தகைய கோவை ஜில்லாவுக்கு இப்போது ஒரு சோதனை. ராஜாஜி மந்திரி சபை ஏற்பட்ட பிறகு முதல் பொதுத் தேர்தல் அந்த ஜில்லாவில் நடக்கிறது. கோவையில் ஒரு பகுதியும் நீலகிரியும் சேர்ந்த தொகுதிக்குப் பார்லிமெண்டு தேர்தல் நடைபெறுகிறது. காங்கிரஸின் சார்பாக நீலகிரியைச் சேர்ந்த ஸ்ரீ என். எம். லிங்கம் அபேட்சகராக நிறுத்தி வைக்கப்பட் டிருக்கிறார். அவர் பிற்பட்ட சமூகங்களில் ஒன்றைச் சேர்ந்தவர். நீலகிரியில் பெரும்பான்மை வகுப்பாரான கவுடர் வகுப்பைச் சேர்ந்தவர். நீண்ட காலமாக நல்ல காங்கிரஸ் வாதியாக இருந்து வருகிறவர். தக்க கல்வியும் மற்ற யோக்கியதைகளும் படைத்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக, ராஜாஜியின் ஆதரவைப் பெற்று ஸ்ரீ என். எம். லிங்கம் இத் தேர்தலில் நிற்கிறார்.

அவருக்குப் பெருமிதமான வெற்றி அளிப்பது கோயமுத்தூர்-நீலகிரி வாக்காளர்களின் கடமையாகும். அத்தகைய வெற்றிக்கு வேலை செய்வது கோவை ஜில்லாவிலுள்ள எல்லாக் காங்கிரஸ் ஊழியர்களின் கடமையுமாகும்.

குறுகிய ஜில்லாப் பற்றுக் காரணமாகவோ, சாதிப் பற்றுக் காரணமாகவோ ஸ்ரீ லிங்கம் அவர்களுக்குப் பெருமிதமான வெற்றி கிடைக்காமற் போனால், அது கோவை ஜில்லாவின் நல்ல பெயரை என்றென்றைக்கும் பாதித்து விடும்.

கோவை ஜில்லா காங்கிரஸ் தொண்டர்கள் உடனே திரண்டு எழுவார்களாக. மாகாணக் கமிட்டியின் பொறுப்பு என்றோ, ஜில்லாக் கமிட்டியின் பொறுப்பு என்றோ நினைக்க வேண்டாம். தலைவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று காத்திருக்க வேண்டாம்.

கோவை ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு தேச பக்தரும் காங்கிரஸ்வாதியும் தொண்டரும் தத்தம் கடமையாகக் கருதி முழு மூச்சுடன் இத்தேர்தலில் வேலை செய்ய வேண்டும்.

கோவை - நீலகிரி உப தேர்தலில் காங்கிரஸின் அமோக வெற்றி தமிழ் நாட்டுக்கும் சென்னை மாகாணத்துக்கும் புத்துயிர் தரக் கூடியதா யிருக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

ராஜாஜியாலும் முடியாது!

மத குரு ஒருவர் சமயப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். சொர்க்கத்தின் இனிய சுகங்களையும் நரகத்தின் பயங்கரத் துன்பங்களையும் பற்றி விஸ்தாரமாக எடுத்துச் சொன்னார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த சபையோர்களில் ஒரு சிறுவன் எழுந்து நின்றான். மதகுரு அவனைப் பார்த்து "அப்பனே! நீ சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறாயா! நரகத்துக்குப் போக விரும்புகிறாயா!" என்று கேட்டார்.

அந்தச் சிறுவன் உடனே பளிச்சென்று பதில் சொன்னான்.

"குருவே! நான் சொர்க்கத்துக்குப் போகவும் விரும்பவில்லை; நரகத்துக்குப் போகவும் விரும்பவில்லை. மூன்றரை மணி ஸினிமாவுக்குப் போக விரும்புகிறேன்!" என்று சொல்லிவிட்டு, கடையைக் கட்டினான்.

மதகுரு சபையோரைப் பார்த்து, "பிரசங்கம் இத்துடன் முடிந்தது. அந்தச் சிறுவனைப் பின் தொடர்ந்து சென்று அவனைக் காப்பாற்றும்படி என் மனச்சாட்சி வற்புறுத்துகிறது!" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார்.

சிறுவனைப் பின் தொடர்ந்தார். சிறுவன் அவரிடம் அகப்படாமல் ஓடினான். கடைசியாகக் குரு அவனைப் பிடித்து விட்டார். மிக்க பயத்துடன் அண்ணாந்து நோக்கிய சிறுவனைக் கருணையுடன் அவர் பார்த்து, "அப்பனே! எந்த ஸினிமாவுக்கு நீ போகிறாய்! நானும் வருகிறேன்; அழைத்துப் போ!" என்றார்............

இப்படி ஒரு கதை ஸினிமாவின் சக்தியை எடுத்துக் காட்டுவதற்காகச் சொல்லப் படுவதுண்டு.

ராஜாஜி சமீபத்தில் ஒரு கூட்டத்தில் பேசும் போது "ஸினிமாவுக்குப் போகாதீர்கள்!" என்று சொன்னாராம்.

இதைக் குறித்து ஆங்காங்கே பல படாதிபதிகளும் நட்சத்திரங்களும் ஸினிமா ரஸிகர்களும் குறைப்பட்டுக் கோபமும் வருத்தமும் தெரிவித்திருக்கிறார்கள்.

அவர்கள் கோபப்பட வேண்டியதுமில்லை; கவலைப்படக் காரணமும் இல்லை.

ஏனெனில், ராஜாஜியினால் கூட முடியாத காரியம் இந்த உலகத்தில் ஒன்று உண்டு என்றால், அது நம் ஜனங்களை ஸினிமாப் பார்க்கப் போகாமல் தடுத்து நிறுத்துவதுதான்.

நகையை விற்று வரி கொடுத்தாலும் கொடுப்பார்கள்; ஸினிமாப் பார்க்கப் போகாமல் இருக்க மாட்டார்கள்.

ஆகையால் படாதிபதிகளும், நட்சத்திரங்களும், ஸினிமா ரஸிகர்களும் வீண் பீதி அடைய வேண்டியதில்லை.

"ராஜாஜி இப்படிச் சொல்லி விட்டாரே!" என்று கோபமோ கவலையோ படுவதற்குப் பதிலாக,—ராஜாஜி ஏன் அப்படிச் சொன்னார் என்று சிந்தித்துப் பார்ப்பது உபயோகமாயிருக்கும்.

ராஜாஜி போன்றவர்கள் "ஸினிமாப் பார்க்கப் போங்கள்!" என்று சொல்ல முன் வரும்படியான முறையில் நல்ல படங்கள் வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

சில நாளைக்கு முன்னால்தான் இந்தச் சென்னை மாநகரில் படாதிபதி சண்டுலால்ஷா "காலிகளை அடைத்துப் போட்டு வைப்பதற்காகப் படம் எடுக்கிறோம்!" என்ற அற்புதமான கருத்தை வெளியிட்டார்.

இந்தக் கருத்தை மறுப்பதற்கு வேறு எந்தப் படாதிபதியோ, கலைஞரோ, ஸினிமா ரஸிகரோ, ரஸிகர் சங்கமோ இதுவரை முன்வரவில்லை!

ராஜாஜி "ஸினிமாப் பார்க்காதீர்கள்!" என்று சொன்னதிலே மட்டும் இவர்களுக்குப் பொத்துக் கொண்டு போய் விட்டது!

நல்ல வேடிக்கை அல்லவா இது!

<u>அட்டைப்பட விளக்கம்</u>

குஷி பிறந்து விட்டது!

"நாடு செழிக்க வேணும்
நல்ல மழை பெய்ய வேணும்"

என்று முதன் மந்திரி ராஜாஜியும் மற்றும் பலரும் செய்த பிரார்த்தனை ஓரளவு பலித்திருக்கிறது.

இம் மாகாணத்தின் பல பகுதிகளில் நல்ல மழை பெய்து, ஆறு, குளம், குட்டை எல்லாம் நிரம்பிவிட்டன என்று செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

இனி, இறைவனைப் பணிய விரும்பும் ஆஸ்திகர்களின் பாடு யோகந்தான். தடாகங்களில் அமுங்கிக் குளித்து அனுஷ்டானம் செய்து ஆண்டவனைத் தொழலாம்.

பெண்களின் பாடும் யோகந்தான். ஒரு குடம் தண்ணீர் எந்தக் கிணற்றில் கிடைக்கும் என்று ஏங்கி நீண்ட நெடுந்தூரம் போகாமல் ஊர்த் தெப்பக்குளத்திலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்லலாம்—கூட்டங் கூடி வம்பர் மகா நாடுகளும் நடத்தலாம்.

சிறுவர்களின் யோகத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. நீராழி மண்டபத்திலிருந்தும் மரக் கிளைகளிலிருந்தும் தண்ணீரில் தடால் என்று குதித்து நீந்தி மகிழலாம்.

மயிலாப்பூரில் உள்ள அழகிய தெப்பக்குளம் இந்த வருஷம் கோடை காலத்தில் அடியோடு வறண்டு போய்ப் பார்ப்பவர்களுக்கு மிக்க வேதனை அளித்து வந்தது. அதனால் இந்த வருஷம் தெப்போற்சவம் கூட நடைபெறவில்லை.

சமீபத்தில் பெய்த மழையினால் அந்தத் தெப்பக் குளத்தில் தண்ணீர் ததும்பி நின்றதைப் பார்த்த நம் சித்திரக்காரருக்குக் 'குஷி' பிறந்து விட்டது! அதன் பயனாக நமது இந்த வாரத்துக் "கல்கி" இதழ் அட்டைப் படமும் பிறந்தது.

நேயர்களுக்கு நமது நன்றி

“கல்கி” பத்திரிகை ஆரம்பித்து ஏறக்குறையப் பதினொரு ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் காலத்தில் தமிழ் மக்கள் இப்பத்திரிகையின் மீது காட்டி வந்திருக்கும் அன்பையும் ஆதரவையும் எண்ணிப் பார்க்கும் போது அவற்றுக்கு ஈடுமில்லை இணையுமில்லை என்று சொல்லத் தோன்றுகிறது.

அவ்வப்போது ஒரு சாராருக்குப் பிடிக்காத அபிப்பிராயங்களை இப் பத்திரிகையில் வற்புறுத்தி வெளியிட்டு வந்திருக்கிறோம். அதன் பொருட்டுப் பெருங் கண்டனங்களுக்கும் வசைமாரிகளுக்கும் உள்ளாகி யிருக்கிறோம். ஆயினும் நாம் உண்மையென்று கருதியவற்றையே உறுதியாகச் சொல்லி வந்திருக்கிறோம்.

நமது அபிப்பிராயங்களில் தவறு என்று கண்டவற்றைத் திருத்திக் கொள்ள நாம் பின்வாங்கியதில்லை. ஆனால் பெரும் எதிர்ப்புகளுக்கிடையில் நாம் வற்புறுத்திக் கூறிய கருத்துக்கள் பெரும்பாலும் பிற்காலத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைக் “கல்கி” நேயர்கள் கண்டு மகிழ்ந்திருக்கிறார்கள்.

‘கல்கி’ பத்திரிகையிடம் நேயர்கள் அபிமானம் பலமுறை சோதனைக்கு உள்ளாக நேர்ந்திருக்கிறது.

பத்திரிகை ஆரம்பித்த நாளிலிருந்து காகிதப் பஞ்சமும் விடாமல் தொடர்ந்து வந்து தொல்லை கொடுத்திருக்கிறது. பெரிய முதலாளிப் பத்திரிகைகளுக்கு வெளி நாடுகளிலிருந்து கப்பல் கப்பலாகக் காகிதம் தருவிக்கும் வசதிகள் உண்டு.

நமக்கு அத்தகைய வசதிகள் இல்லை. அரசாங்கத்திடம் விசேஷ அநுகூலங்கள் நாம் கோரியதும் இல்லை. ஆதலின் சென்ற ஆண்டில் காகிதப்பஞ்சம் நம்மை வெகுவாகப் பாதித்தது. சில மாதங்களில் 52 பக்கங்களே கொண்ட இதழ்கள் வெளியிடும் படியும் நேர்ந்து விட்டது. இவ்வளவு குறைவான பக்கங்களோடு “கல்கி” வெளியான போதும் நேயர்கள் இப்பத்திரிகையை ஆதரித்தார்கள் என்பதை எண்ணும் போது, அவர்களுக்கு எந்த விதத்தில் நமது நன்றிக் கடனைத் தீர்க்க முடியும் என்று வியக்க வேண்டி வருகிறது.

*　　*　　*

“கல்கி” பத்திரிகையின் சர்க்குலேஷன் (அதாவது இதழ்வாரி விற்பனை) குறித்து இன்னொரு பக்கத்தில் வெளியாகி யிருக்கும் புள்ளி விவரங்களை நேயர்கள் கவனிக்க வேண்டுகிறோம்.

மூன்று வருஷங்களுக்கு முன்னால் ஆடிட் பியூரோ சர்க்குலேஷன் என்னும் பெயருடன் இந்திய தேசத்தில் ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டது. இதில் இந்தியாவிலுள்ள எல்லாப் பிரபல பத்திரிகைகளும் முக்கியமான விளம்பர ஸ்தாபனங்களும் அங்கத்தினர்களாயின. பத்திரிகைகளின் விற்பனை பற்றிய உண்மையான, சந்தேகத்துக்கிடமில்லாத, நிச்சயமான விவரங்களைத் தெரிந்து கொள்வதற்காகவே மேற்படி ஏ. பி. ஸி. ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. இந்த ஸ்தாபனத்தார் ஆறு மாதத்துக்கு ஒரு முறை எல்லாப் பத்திரிகைகளின் விற்பனை பற்றிய கணக்குகளையும் சோதித்து அத்தாட்சிப் பத்திரம் அளிக்கிறார்கள்.

1951-ம் ஆண்டின் பிந்தைய ஆறு மாதத்துக்கு அத்தகைய கணக்கு இந்தியாவிலுள்ள எல்லா முக்கிய பத்திரிகைகளுக்கும் ஏ. பி. ஸி. ஸ்தாபனத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.

அதன் பிரகாரம், தென்னிந்தியாவில் ஆங்கிலம்-தமிழ்—தெலுங்கு பாஷைகளில் வெளியாகும் எல்லாப் பத்திரிகைகளுக்குள்ளேயும் “கல்கி” முதன்மை ஸ்தானத்தை வகிக்கிறது என்பதைத் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அகில இந்தியாவிலும் உள்ள ஆங்கில—தேச பாஷைப் பத்திரிகைகளிலே “கல்கி” ஆறாவது ஸ்தானத்துக்கு வருகிறது.

அகில இந்தியாவிலும் தேச பாஷைகளிலே வெளியாகும் வாரப் பத்திரிகைகளை மட்டும் எடுத்துக் கொண்டு பார்த்தால், உங்கள் “கல்கி” பத்திரிகையே முதன்மையாக நிற்கிறது.

இந்த விவரங்கள் “கல்கி”யிடம் இணையற்ற அபிமானம் காட்டி வந்திருக்கும் நேயர்களுக்குப் பெருமித மகிழ்ச்சியை அளிக்கும் என்று நம்புகிறோம்.

குறிப்பிட்ட விளம்பரப் பக்கத்தில், மாநிலவாரி விற்பனை விவரத்துக்கு மேலே, சில கட்டங்களுக்குள் ‘Nil’ ‘Nil’ என்று அச்சிட்டிருப்பதை நேயர்கள் கவனிப்பார்கள்.

பத்திரிகைகளின் விற்பனையை அதிகப் படுத்துவதற்கு அதிர்ஷ்டப் பரிசு, போட்டிப் பந்தயங்கள் முதலிய சாதனங்களைக் கையாளுவது உலகமெங்கும் நடைபெற்று வருகிறது. இந்தியாவிலும் பல பத்திரிகைகள் அம் முறைகளைக் கையாண்டு வருகின்றன.

அத்தகைய விசேஷ சாதனம் எதையும் இன்று வரை நாம் கையாண்டது கிடையாது. ஏன், பல தடவை பலர் கேட்டும், வார நட்சத்திர பலன்கள் கூட நாம் வெளியிட்டதில்லை.


அப்படி யிருந்தும், “கல்கி” பத்திரிகை தென்னிந்தியாவில் முதன்மையாக இருந்து வருகிறது என்பது நேயர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தரக் கூடியதல்லவா!


*　　*　　*

தமிழ் மக்களின் இத்தகைய பேரபிமானத்துக்குக் “கல்கி” பத்திரிகை என்றைக்கும் உரியதாக இருக்க வேண்டும் என்பது தான் நம் மனோரதமாகும்.

“கல்கி”யின் அபிவிருத்தி குறித்து நேயர்கள் சிலர் அவ்வப்போது யோசனைகள் தெரிவிப்பது உண்டு. அவற்றையெல்லாம் நாம் சிரத்தையுடன் படித்துக் கூடுமான வரையில் நிறைவேற்றி வந்திருக்கிறோம். இனியும் அத்தகைய முயற்சியில் பின் வாங்க மாட்டோம் என்று நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புது டில்லி நிகழ்ச்சிகள்!





சுபிட்சம்
ஐந்து வருஷத் திட்டம்
4 உணவு மந்திரி கித்வாய்
உணவுப் பிரச்னையின்
வேரைக் கெல்லிப்
பார்க்கிறார்
5 திட்ட மந்திரி நந்தா
சுபிட்ச உலகத்துக்கு ஏணி
வைக்கிறார்...
6 ...பிரஜா கட்சியும் சோஷலிஸ்ட்
கட்சியும் ஒன்று சேர்ந்து அரசியல்
பந்தயத்தில் ஜெயிக்கப்
பார்க்கின்றன !!
7 ஐயோ, பாவம்! கம்யூனிஸ்ட்
கட்சியினரோ தங்கள்
கால்களிலேயே தாங்கி
நிற்க முயல்கின்றனர்.
எதையும்
எதிர்ப்போம்



பூர்வ கதை

இராஜ ராஜ சோழன் என்று சரித்திரப் புகழ் பெற்ற அருள்மொழிவர்மன் இளம் பிராயத்தில் இலங்கையில் நடந்த போருக்குச் சென்றிருந்தான். அவனுடைய தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தி

அருள்மொழி வர்மனை உடனே தாய் நாட்டுக்கு வந்து சேரும்படி இரண்டு இடத்திலிருந்து செய்திகள் வந்தன. ஆதித்த கரிகாலன் அவனைக் கையோடு



பூர்வ கதை

இராஜ ராஜ சோழன் என்று சரித்திரப் புகழ் பெற்ற அருள்மொழிவர்மன் இளம் பிராயத்தில் இலங்கையில் நடந்த போருக்குச் சென்றிருந்தான். அவனுடைய தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தி தஞ்சையில் நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையா யிருந்தார். அவனுடைய தமையனும் பட்டத்து இளவரசனுமான ஆதித்த கரிகாலன் காஞ்சியில் வடதிசைச் சேனாதிபதியாக இருந்து வந்தான். இவன் வீராதி வீரன். மிக இளம் வயதில் மதுரை வீர பாண்டியனைப் போரில் கொன்று, 'வீர பாண்டியன் தலை கொண்ட கோப்பர கேசரி' என்ற பட்டம் பெற்றவன்.

சுந்தர சோழரின் பெரிய தந்தை கண்டராதித்த சோழரின் குமாரன் மதுராந்தகன் இளம் பிராயத்தில் சிவபக்தியில் ஈடுபட்டிருந்தான். பிறருடைய தூண்டுதலினால் அவனுக்குச் சோழ சிம்மாசனம் ஏறவேண்

அருள்மொழி வர்மனை உடனே தாய் நாட்டுக்கு வந்து சேரும்படி இரண்டு இடத்திலிருந்து செய்திகள் வந்தன. ஆதித்த கரிகாலன் அவனைக் கையோடு காஞ்சிக்கு அழைத்து வரும்படி தன் நண்பனை பார்த்திபேந்திரனை அனுப்பி யிருந்தான். சுந்தர சோழரின் செல்வப் புதல்வியும், சோழ நாட்டில் செல்வாக்கு மிகுந்த சீமாட்டியுமான குந்தவைப் பிராட்டி அருள்மொழி வர்மனைப் பழையாறைக்கு அழைத்து வருவதற்கு வந்தியத்தேவன் என்னும் வாணர் குலத்து வீர வாலிபனை அனுப்பி யிருந்தாள்.

இதற்கிடையில் பழுவேட்டரையர்கள் இளவரசன் அருள்மொழிவர்மன் இலங்கைச் சிம்மாதனத்தைக் கவர எண்ணியதாகக் குற்றம் சாட்டி அவனைச் சிறைப் படுத்திக் கொண்டுவர இரண்டு கப்பல்களையும் அவை நிறைய வீரர்களையும்

னிடம் சொல்லி அனுப்பினான். சேந்தன் அமுதனும் பூங்குழலியும் அருள்மொழி வர்மனை நாகைப் பட்டினத்திலிருந்த புத்த விகாரத்துக்குக் கால்வாய் மூலமாகப் படகில் அழைத்துச் சென்றார்கள்.

வந்தியத்தேவன் கோடிக் கரையிலிருந்து பழையாறைக்கு வரும் வழியில் கொல்லன் பட்டறை ஒன்றில் அதிசயமான வாள் ஒன்றைப் பார்த்தான். அதன் அடிப் பகுதியில் பாண்டிய குலத்தின் மீன் சின்னம் மங்கலாகத் தெரிந்தது.

பிறகு அதே வாளைப் பெரிய பழுவேட்டரையரின் இளைய மனைவி நந்தினியிடம் அவன் கண்டான். வீர பாண்டியனுடைய ஆபத்துதவிப் படையைச் சேர்ந்தவர்கள் சிலர் சோழ நாட்டில் பரவியிருந்து பழிக்குப் பழிவாங்கும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி யிருந்தார்கள் என்பது வந்தியத்தேவனுக்கு முன்னமே தெரிந்திருந்தது. நந்தினியும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவள் என்னும் சந்தேகம் வந்தியத் தேவனுக்கு உறுதிப்பட்டது.

குந்தவையும் வந்தியத்தேவனும் ஒருவருக்கொருவர் உள்ளங்களைப் பறிகொடுத்திருந்தார்கள். வந்தியத்தேவன் இலங்கைப் பிரயாணத்தில் தான் கண்டது, கேட்டது எல்லாவற்றையும் குந்தவையிடம் கூறினான். பழுவூர் இளைய ராணி நந்தினியைப் போல் அதே தோற்றமுடைய ஊமை ஸ்திரீ ஒருத்தியை இலங்கையில் பார்த்தது பற்றியும் தெரிவித்தான். அந்த ஊமை ஸ்திரீ சுந்தர சோழ சக்கரவர்த்தியினால் இளம் பிராயத்தில் காதலிக்கப்பட்டவள் என்பதைக் குந்தவை அறிந்திருந்தாள். அவள் கடலில் விழுந்து உயிரை விட்டு விட்டாள் என்ற எண்ணத்தினால் தன் தந்தை மன அமைதி இழந்து தவிக்கிறார் என்பதும் குந்தவைக்குத் தெரிந்திருந்தது. சோழ ராஜ்யத்துக்கு ஏற்பட்டிருந்த அபாயங்களினால் குந்தவையின் உள்ளம் பெரிதும் கவலையில் ஆழ்ந்திருந்தது. அதுவரை அவள் துவேஷித்து வந்த நந்தினி ஒரு வேளை தன் தமக்கையாயிருக்கலாம் என்ற எண்ணம் அவள் மனத்தை மேலும் கலங்கச் செய்தது.

இளவரசன் அருள்மொழி வர்மன் குழந்தையாயிருந்தபோது காவேரி வெள்ளத்தில் மூழ்கி விட்டான். அவனை ஒரு ஸ்திரீ எடுத்துக் காப்பாற்றி விட்டு உடனே மறைந்தாள். காவேரி அம்மன் தான் குழந்தையைக் காப்பாற்றியதாக அனைவரும் நம்பினார்கள். இதனால் 'பொன்னியின் செல்வன்' என்னும் காரணப் பெயர் அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

பொன்னியின் செல்வன் சோழ நாட்டு மக்களின் இதயத்தில் இடம் பெற்றிருந்தான். அவன் கடலில் மூழ்கி இறந்தான் என்னும் செய்தி கேட்டதும் சோழ நாடெங்கும் ஜனங்கள் கொதித்து எழுந்தார்கள். பழையாறை மக்கள் அரண்மனை முற்றத்தில் வந்து ஆரவாரம் செய்தார்கள். அச்சமயம் அங்கு வந்திருந்த இளவரசன் மதுராந்தகன் மீது தங்கள் ஆத்திரத்தைக் காட்ட எண்ணினார்கள்.

பொன்னியின் செல்வன் பத்திரமாயிருக்கும் செய்தியைக் குந்தவை வெளியிட விரும்பவில்லை. அது பழுவேட்டரையர்களுக்கும் நந்தினிக்கும் தெரியக்கூடாது என்று எண்ணினாள். எனினும் ஜனங்களைச் சமாதானப் படுத்துவதற்காக "பொன்னியின் செல்வனைச் சமுத்திர ராஜன் காப்பாற்றி யிருப்பான்! நீங்கள் கவலைப் படவேண்டாம்!" என்று ஆறுதல் வார்த்தை கூறினாள்.

இச்சமயத்தில் பழையாறை வைத்தியர் மகன் பினாகபாணி வந்தியத்தேவன் மீது "பழுவேட்டரையர்களின் ஒற்றன்" என்று குற்றம் சாட்டினான். இருவருக்கும் துவந்த யுத்தம் ஆரம்பமாகி நடந்தது.

அதே சமயத்தில் முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் அங்கு வந்து சேர்ந்தார். சண்டையிட்ட இருவரையும் சிறைப்படுத்தக் கட்டளை யிட்டார். ஜனங்களையும் கலைந்து போகச் செய்தார்.

முதன் மந்திரி அன்பில் அநிருத்தர் சுந்தர சோழரின் இளம்பிராயத் தோழர். சோழ சாம்ராஜ்யம் மகோந்நதம் அடைந்து இலங்கை முதல் இமயம் வரையில் பரவ வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் பாடுபட்டு வந்தார். அவரிடம் குந்தவைக்கு மிக்க மரியாதை உண்டு. ஆயினும் அவரை எவ்வளவு தூரம் நம்பலாம் என்று நிச்சயிக்க முடியவில்லை. சோழ குலத்து நன்மையைக் காட்டிலும் சோழ சாம்ராஜ்யத்தின் நலத்தையே அவர் முக்கியமாகக் கருதக் கூடும் என்று குந்தவை ஐயுற்றாள்.

வந்தியத்தேவனைச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று குந்தவை கூறிய போது, "அவனிடம் அவ்வளவு நம்பிக்கை உனக்கு இருந்தால், அவனிடம் ஓலை கொடுத்து ஆதித்த கரிகாலனிடம் உடனே அனுப்பி வைக்க வேண்டும்!" என்றார் முதன் மந்திரி.

பெரிய பழுவேட்டரையர் முதுமைப் பிராயத்தில் மணந்து கொண்ட நந்தினியிடம் அபூர்வமான வசீகர சக்தி இருந்தது. எத்தகைய மனோபலம் படைத்தவர்களையும் அவள் தன் இஷ்டப்படி ஆட்டி வைக்கும் சக்தி பெற்றிருந்தாள். இப்போது சோழ நாட்டில் ஏற்பட்டிருந்த அரசுரிமைத் தகராறை நல்லபடி தீர்த்து வைக்கும் முயற்சியில் அவள் ஈடுபட்டிருந்தாள். சோழ ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்துக் காவேரிக்குத் தெற்கேயுள்ள பகுதியை

மதுராந்தகனுக்கும் வடக்கேயுள்ள பகுதியை ஆதித்த கரிகாலனுக்கும் கொடுத்து விடுவதென்றும் யோசனை கூறினான். இதை முடிவு செய்வதற்காகக் கொள்ளிடத்துக்கு வட கரையிலுள்ள கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு ஆதித்த கரிகாலன் வரவேண்டுமென்று அவனுக்குச் சொல்லி அனுப்பினான்.

முதன் மந்திரி அநிருத்தருக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. இராஜ்யத்தைப் பிரித்தால் அதன் பலம் சிதறிப் போய்ச் சோழ நாடு பழைய ஈன ஸ்திதிக்கு வந்து விடும் என்று அவர் அஞ்சினார்.

ஆகையால் ஆதித்த கரிகாலன் நந்தினியைச் சந்திப்பதைத் தடுக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். இதைச் சாதிக்கும் பொருட்டு வந்தியத்தேவனையும் தமது அந்தரங்கச் சீடனாகிய ஆழ்வார்க்கடியானையும் அநிருத்தர் காஞ்சிக்கு அனுப்பக் கருதினார்.

இதைக் குந்தவையும் ஒப்புக் கொண்டாள். சிறைக்குச் சென்று வந்தியத்தேவனை விடுதலை செய்தாள். "ஆனால் என் இதயச் சிறையிலிருந்து உமக்கு என்றும் விடுதலை கிடையாது!" என்று கூறி, காஞ்சிக்குப் பிரயாணப் படுத்தினாள்.

அத்தியாயம் 31

பசும் பட்டாடை

மறுநாள் மாலையில் வந்தியத்தேவன் முதன் மந்திரி அநிருத்தரின் ஓலையுடன் அரிசிலாற்றங் கரையோடு குடந்தை நகரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். குதிரையை விரட்டாமல் மெள்ளச் செலுத்திக் கொண்டு இரு புறமும் தோன்றிய இனிய காட்சிகளைப் பார்த்துக் கொண்டு போனான்.


ஐப்பசி மாதத்தின் ஆரம்பத்தில் சோழ வளநாடு பூரணப் பொலிவுடன் விளங்கிற்று. இயற்கை அரசி பச்சைப் பட்டாடை உடுத்தி நவ யௌவன சௌந்தரியத்துடன் திகழ்ந்தாள். அந்தப் பச்சைப் பட்டாடையில்தான் எத்தனை வித விதமான பசுமைச் சாயல்கள்! கழனிகளில் கதிர் விடுவதற்குத் தயாராயிருந்த நெற் பயிர்கள் ஒரு சாயல்; நடவு நட்டுச் சில காலமாகியிருந்த இளம் பயிர்கள் இன்னொரு சாயல்; அப்போதுதான் நடவாகியிருந்த பசும் பொன்னிறப் பயிர்கள் வேறொரு சாயல்! ஆலமரத்தில் தழைத்திருந்த இலைகள் ஒரு பசுமை; அரச மரத்தில் குலுங்கிய இலைகள் இன்னொரு விதப் பசுமை; தடாகங்களில் கொழு கொழுவென்று படர்ந்திருந்த தாமரை இலைகளின் மோகனப் பசுமை; வாழை இலைகளின் கண் கவரும் பசுமை; தென்னங் குருத்துக்களின் தந்த வர்ணப் பசுமை; பூமியில் இளம் புல்லின் பசுமை; ஓடைகளில் தெளிந்த நீரின் பசுமை; நீரில் அங்குமிங்கும் தத்திப் பாய்ந்த தவளைகளின் பசுமை.

இவ்வளவு விதவிதமான சாயல்கள் வாய்ந்த பச்சைப் பட்டாடையின் அழகைத் தூக்கிக் காட்டுவதற்கென்று நட்சத்திரப் பொட்டுக்கள் பதித்தது போல் குவளைகளும் குமுதங்களும் செந்தாமரை மலர்களும் செங்கழுநீர்ப் பூக்களும் ஆங்காங்கு ஜொலித்துக் கொண்டிருந்தன.

இந்த அழகையெல்லாம் வந்தியத்தேவன் இரு கண்களாலும் பருகிக் கொண்டு பிரயாணம் செய்தான். ஆடி மாதத்தில் அந்த வழியாக அவன் சென்ற போது பார்த்த காட்சிகளுக்கும் இப்போது காணும் காட்சிகளுக்கும் உள்ள வேற்றுமையை அவன் உணர்ந்திருந்தான். ஆடி மாதத்தில் ஆற்றில் புது வெள்ளம் நொங்கும் நுரையுமாகப் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்தது. இப்போதோ பிரவாகத்தின் வேகமும் கோபமும் தணிந்து, செந்நிறம் மாறி, பளிங்கு போல் தெளிந்து, உல்லாஸமாகப் பவனி சென்றது. புது வெள்ளத்தின் 'ஹோ' என்ற இரைச்சலும், மேலக் காற்று மரக்கிளைகளைத் தாக்கிய போது உண்டான பேரோசையும், ஆயிரமாயிரம் புள்ளினங்களின் கோலாகலத் தொனிகளும் அப்போது ஒரு மாபெருந் திருவிழாவின் ஆரவாரத்தைப் போல் கேட்டன. இன்றைக்கோ குளிர்ந்த வாடைக் காற்றில் இலைகள் அசைந்த மர்மர சத்தமும், மடைகளில் தண்ணீர் பாய்ந்த சலசலப்பு ஓசையும், மழையை எதிர் பார்த்த மண்டூகங்களின் சுருதி பேதக் குரல்களும், பலவகைச் சில்வண்டுகளின் ஸ்வர பேத ரீங்காரங்களும் சேர்ந்து இயற்கை மாதரசியின் சோக சங்கீத கோஷ்டி கானத்தைப் போல் ஒலித்துக் கொண்டிருந்தன.

வந்தியத்தேவனுடைய உள்ளத்திலும் அப்போது ஏதோ ஒருவகையான இனந் தெரியாத சோகம் குடி கொண்டிருந்தது. இதன் காரணம் என்னவென்று யோசித்து யோசித்துப் பார்த்தும் அவ


னுக்குப் புலப்படவில்லை. உண்மையில் அவன் அபரிமிதமான உற்சாகம் கொள்வதற்கு வேண்டிய காரணங்கள் இருந்தன. இந்த வழியாக இரண்டு மாதங்களுக்கு முன்னால் போனபோது என்னென்ன மனோராஜ்யங்கள் செய்தானோ, அவ்வளவும் நிறைவேறி விட்டன. அவன் கனவிலும் நடக்கும் என்று கருதாத காரியங்களும் நடந்தேறி விட்டன. சுந்தர சோழ சக்கரவர்த்தியைத் தரிசித்தாகி விட்டது. தஞ்சாவூர், பழையாறை, மாதோட்டம், அநுராதபுரம் முதலிய மாபெரும் நகரங்களைப் பார்த்தாகி விட்டது. சோழநாட்டின் கண்ணுக்குக் கண்ணாக விளங்கிய பொன்னியின் செல்வனுடைய சிநேகம் கிடைத்து விட்டது; அந்த வீர இளவரசனுக்கு, உதவி புரியும் பேறும் கிடைத்து விட்டது. தமிழகத்தின் அழகுத் தெய்வமும், சோழர் குல விளக்குமான அரசிளங்குமரி குந்தவையை ஒரு முறை பார்ப்பதற்கே எத்தனையோ தவம் செய்திருக்க வேண்டும். அப்படியிருக்க அவளுடைய தூய இதயத்தின் நேயத்தைப் பெறுவதென்பது எத்தகைய பெறற்கரும் பாக்கியம்? அதை எண்ணியபோது அவன் உள்ளம் பெருமிதத்தினால் பொங்கியது. ஆனால் அந்தப் பெருமித குதூகலத்துடனே ஏதோ ஒரு வேதனையும் தொடர்ந்து வந்தது. அவ்வளவு பெரிய பாக்கியத்துக்கு நான் உண்மையில் உரியவன்தானா? அது நிலைத்து நிற்குமா? கைக்கு எட்டியது வாய்க் கெட்டுவதற்குள் எவ்வளவோ தடங்கல்கள் ஏற்படக் கூடும் அல்லவா?



ஆகா! தடங்கல்களுக்கு என்ன குறைவு? உலகமே தடங்கல் மயந்தான்! ரவிதாஸனைப் போன்ற மாய மந்திரவாதிகளும், நந்தினியைப் போன்ற மாய மோகினிகளும், பழுவேட்டரையர்களைப் போன்ற சதிகாரர்களும், கந்தமாறனையும் பார்த்திபேந்திரனையும் போன்ற சிநேகத் துரோகிகளும், பூங்குழலியையும் வானதியையும் போன்ற பித்துக் கொள்ளிப் பெண்களும், வீர வைஷ்ணவ ஒற்றர்களும், காளாமுக சைவர்களும், கொள்ளிவாய்ப் பேய்களும், ஆழந் தெரியாத புதைசேற்றுக் குழிகளும் நிறைந்த உலக மல்லவா இது? கடவுளே! மேற்கூறிய அபாயம் ஒவ்வொன்றிலிருந்தும் எப்படியோ இதுவரை தப்பித்து வந்து விட்டேன்! அவை எல்லாவற்றையும் விடப் பெரும் அபாயகரமான காரியத்தில் இப்போது முதன் மந்திரி அநிருத்தர் என்னை ஏவியிருக்கிறார்! ஒரு பக்கத்தில், எளிதில் மூர்க்காவேசம் கொள்ளக் கூடிய ஆதித்த கரிகாலர்; மற்றொரு பக்கத்தில் பெரிய பழுவேட்டரையரைப் பொம்மையைப் போல் ஆட்டி வைக்கும் மாய சக்திவாய்ந்த மோகினி;— இவர்களுடைய நோக்கத்துக்குக் குறுக்கே நின்று நான் தடை செய்து வெற்றி பெற வேண்டுமாம்! இது நடக்கக் கூடிய காரியமா? அந்தப் பிரம்மராயருடைய மனதில் என்னதான் உண்மையில் எண்ணியிருக்கிறாரோ தெரியாது! அரசிளங் குமரியிடமிருந்து என்னைப் பிரித்து விடுவதே அவருடைய நோக்கமாயிருக்கலாம் அல்லவா? ஆழ்வார்க்கடியான் வழியில் வந்து சேர்ந்து கொள்வான் என்று இருவரும் சொன்னார்கள்! அவனையும் இது வரையில் காணோம்! அந்த வீர வைஷ்ணவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் இது வரையில் எனக்கு ஒரு கெடுதலும் செய்ததில்லை; பல முறை உதவிதான் புரிந்திருக்கிறான். அவனுடன் சேர்ந்து பிரயாணம் செய்தால், ஏதாவது உற்சாகமாகப் பேசிக் கொண்டிருப்பான். பிரயாணத்தில் அலுப்புத் தட்டாமல் இருக்கும். இனி எங்கே வந்து அவன் நம்முடன் சேர்ந்து கொள்ள முடியும்? அவனுக்காக எத்தனை நேரந்தான் இந்தக் குதிரையை இழுத்துப் பிடித்து மெள்ளச் செலுத்திக் கொண்டுபோவது?......

ஆகா! அதோ கும்பலாயிருக்கும் மரங்கள்! நதி வெள்ளத்தில் முதலைகளைப் போல் கிடக்கும் அந்த வேர்கள்! இங்கேதான் பொம்மை முதலைமீது வேல் எறிந்த படலம் நடைபெற்றது! வாரிணியும் தாரகையும் செந்திருவும் மந்தாகினியும் நம்முடைய வீரச் செயலைப் பார்த்துக் கல கலவென்று சிரித்தது இவ்விடத்திலேதான்! அரசிளங்குமரி நமக்குப் பரிந்து அந்தப் பெண்களை அதட்டியதும் இதே இடத்தில்தான்! சற்று இங்கே நின்று பார்க்கலாம்!......

வந்தியத்தேவன் குதிரை மீதிருந்து இறங்கி நதிக் கரையின் ஓரமாகச் சென்று நின்றான். மரத்தின் வேர்களைச் சுற்றிச் சுழற்றிக் சுழலிட்டுக் கொண்டு ஓடிய தெளிந்த நீர்ப் பிரவாகத்தைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்......ஆகா! அந்தச் சுழலில் ஒரு முகம் தெரிகிறது! அது யாருடைய முகம்? சொல்ல வேண்டுமா? அரசிளங்குமரி குந்தவைப் பிராட்டியின் இன்பப் பொன் முகந்தான்!......



"கண்டேன் கண்டேன் கண்டேன்
கண்ணுக்கினியன கண்டேன்!"

என்று பாடிய குரலைக் கேட்டு வந்தியத்தேவன் திடுக்கிட்டு அண்ணாந்து பார்த்தான். உன்னதமான மரத்தின் உச்சாணிக் கிளை ஒன்றில் ஆழ்வார்க்கடியான் அமர்ந்திருப்பது தெரிந்தது.

"ஓகோ! வீர வைஷ்ணவரே! நான் உம்முடைய திருக் கண்களுக்கு அவ்வளவு இனியவனாக இருக்கிறேனா? நானும் உம்மைச் சிறிது நன்றாகப் பார்க்கிறேன். கீழே இறங்கி வருக!" என்று சொன்னான் வந்தியத் தேவன்.

வீர வைஷ்ணவன் மரத்திலிருந்து இறங்கிய வண்ணம், "நான் உன்னைச் சொல்லவில்லை, அப்பனே! உடையில் வாளும் கையில் வேலும் ஏந்திய நீ என் கண்ணுக்குப் பயங்கரமாக அல்லவோ புலப்படுகிறாய்?" என்றான்.

"பிறகு, யாரைப் பற்றிச் சொன்னீர், வைஷ்ணவரே!"

"முழு முதற் கடவுளாகிய திருமால் வாமனவதாரம் எடுத்து வந்து வானத்தை அளப்பதற்காக ஒரு பாதத்தைத் தூக்கியபோது உங்கள் சிவபெருமானுடைய கண்களுக்கு......"

"வைஷ்ணவரே! நிறுத்தும்! இம்மாதிரி யெல்லாம் சிவனைத் தாழ்த்திக் கூறுவதை நிறுத்திவிடும். இல்லாவிடில் பெரிய அபாயத்துக்கு உள்ளாவீர்!"

"என்ன அபாயம், அப்பனே! முதலையைக் கொன்று யானையைக் காத்த பெருமானின் சக்கரம் இருக்கும்போது என்னை யார் என்ன செய்ய முடியும்?"

"நான் சொல்வதைச் சொல்லி விட்டேன். அப்புறம் உமது இஷ்டம்."

"எனக்கு என்ன அபாயம் வருகிறது என்று சொல், தம்பி!"

"பழையாறையில் ஜனங்கள் கொந்தளித்து அரண்மனை வாசலுக்கு வந்தார்கள் அல்லவா? அப்போது சில காளாமுகர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டேன்."

"என்ன பேசிக் கொண்டார்கள்?"

"சோழ நாட்டில் பெருகி வரும் வீர வைஷ்ணவர்களை மகா காளிக்குப் பலி கொடுத்து, அவர்களுடைய மண்டை ஓடுகளைக் குவித்து அடுக்கி, அவற்றின்

பேரில் நின்று ஆனந்தத் தாண்டவம் ஆடவேண்டும் என்று சொன்னார்கள்!"

ஆழ்வார்க்கடியான் தன் மண்டையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு, "இது கெட்டியாகத் தானிருக்கிறது! காளாமுக தாண்டவத்தைத் தாங்கக் கூடியதுதான்" என்றான்.

"நான் கேள்விப்பட்டதற்குத் தகுந்தாற்போல் இன்றைக்கு நான் வரும் வழியெல்லாம் காளாமுகர்கள் மண்டை ஓடுகளையும் சூலாயுதங்களையும் தாங்கிக் கொண்டு அலைகிறார்கள். நீர் சிவனே என்று இந்த முன் குடுமி வேஷத்தை மாற்றிக் கொண்டு......"

"முடியாது, அப்பா, முடியாது!"

"என்ன முடியாது?"

"நீ சொன்னாயே, அந்த பெயரைச் சொல்ல முடியாது. 'விஷ்ணுவே!' என்று சொல்லி எனது வேஷத்தை மாற்றிக் கொண்டாலும் மாற்றிக் கொள்வேன்......அதோ பார்!"

ஆற்றங்கரைச் சாலையில் அப்போது ஒரு பல்லக்குப் போய்க் கொண்டிருந்தது. அதற்குள் ஒரு பெண்மணி இருப்பது தெரிந்தது. ஆனால் யார் என்று தெரியவில்லை. யாரோ ராஜகுலத்துப் பெண்ணாகத்தானிருக்க வேண்டும். யாரா யிருக்கும்? பல்லக்குச் சுமப்பவர்களைத் தவிர ஒரு தாதிப் பெண் பக்கத்தில் போய்க் கொண்டிருந்தாள். ஒருவேளை அரசிளங் குமரியா யிருக்கலாமோ! அப்படி யிருக்க முடியாது.

"வைஷ்ணவரே! அந்தப் பல்லக்கில் இருப்பது யார், தெரியுமா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"தம்பி! நான் சொல்வதைக் கேள். உனக்குச் சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிட்டுக் கொள்ளாதே! அதனால் பல தொல்லைகளை நீ ஏற்கெனவே அநுபவித்திருக்கிறாய் அல்லவா! வழியோடு எத்தனையோ பேர் போவார்கள்; உனக்கு என்ன அதைப்பற்றி? குதிரை மேலேறிக்கொள்; தட்டிவிடு!" என்றான்.

"ஓகோ! அப்படியா சமாசாரம்? வீர வைஷ்ணவர் இப்போது பெரிய வைராக்கியசாலி ஆகி விட்டதாகத் தோன்றுகிறது. வீர நாராயண புரத்தில் நடந்ததை மறந்து விட்டீரா? அங்கே மூடு பல்லக்கில் சென்ற பெண்ணுக்கு ஓலை ஒன்றைச் சேர்ப்பிக்கும்படி நீர் எனக்குச் சொல்லவில்லையா?"

"அதெல்லாம் பழைய கதை! இப்போது எதற்கு எடுக்கிறாய்?"

"போனால் போகட்டும். நீர் என்னோடு வழியில் வந்து சேர்ந்து கொள்வீர் என்று சொன்னார்கள். உமக்காகவே இத்தனை நேரம் மெள்ள மெள்ளக் குதிரையைச் செலுத்திக் கொண்டு வந்தேன். இனியாவது என்னோடு வரப் போகிறீரா, இல்லையா?"

"நீ குதிரையில் போகிறாய்! நான் கால் நடையாக வருகிறேன். நாம் எப்படிச் சேர்ந்து பிரயாணம் செய்ய முடியும். நீ கொள்ளிடக் கரையில் போயிரு. அங்கே நாளைக் காலையில் உன்னுடன் வந்து சேர்ந்து கொள்கிறேன்."

ஆழ்வார்க்கடியான் வேறொரு இரகசிய வேலையில் ஈடுபட்டிருக்கிறான் என்றும், தன்னுடன் வரமாட்டான் என்றும் வந்தியத்தேவன் நிச்சயமடைந்தான். "சரி! உமது இஷ்டம்!" என்று கூறிக் குதிரை மீது தாவி ஏறிக்கொண்டான். தான் போக வேண்டிய திசையை நோக்கினான். வட கிழக்குத் திசையின் அடிவாரத்தில் கரிய மேகங்கள் திரள்வதைக் கண்டான்.

"வைஷ்ணவரே! இன்று மழை பெய்யுமா?" என்று கேட்டான்.

"அப்பனே! எனக்கு என்ன ஜோசியமா தெரியும்? ஐப்பசி பிறந்து விட்டதல்லவா? மழை பெய்தாலும் பெய்யும். நீ எல்லாவற்றுக்கும் சீக்கிரமாகக் குதிரையைத் தட்டி விட்டுக் கொண்டு போ! இராத்திரி தங்குவதற்கு ஏதேனும் ஒரு சத்திரம் சாவடியைப் பார்த்துக்கொள்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

வந்தியத் தேவன் அவ்விதமே குதிரையைத் தட்டி விட்டான். "எனக்கு என்ன ஜோசியமா தெரியும்?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டது அவனுடைய மனதில் பதிந்திருந்தது. அதிலிருந்து குடந்தை சோதிடரின் நினைவு வந்தது. போகும் வழியிலே தான் அந்தச்



சோதிடரின் வீடு இருக்கிறது. அவரைப் பார்த்து விட்டுப் போனால் என்ன? சோழ சிங்காதனம் ஏற ஆசைப்படுகிற வர்களுக்குள்ளே யாருக்கு அந்த அதிர்ஷ் டம் கிடைக்கப் போகிறது? பொன்னி யின் செல்வரைத் துருவ நட்சத்திரத்துக் குச் சமமானவர் என்று குடந்தை சோதிடர் சொன்னாரல்லவா? அவரோ இராஜ்யம் ஆளுவதில் மனதைச் செலுத் தவே மறுக்கிறார்! இலங்கைச் சிம்மா தனத்தையும் மணி மகுடத்தையும் எவ் வளவு அநாயாசமாக மறுதளித்தார்? அவருக்குப் பல கண்டங்கள் நேரிடு மென்று சோதிடர் கூறியது ஓரளவு பலித்துத் தானிருக்கிறது. அதுபோலவே வருங்காலத்தில் அவர் மகோந்நதம் பெற்று விளங்குவார் என்பதும் பலிக் குமா? அது எப்படிச் சாத்தியமாகக் கூடும்?...என்னுடைய வாழ்க்கைக் கனவுகள் தான் எவ்வளவு தூரம் பலிக் கப் போகின்றன? என் முன்னோர்கள் காலத்தில் இழந்துவிட்ட இராஜ்யம் திரும்பக் கிடைக்குமா? நான் இப்போது எதற்காகப் புறப்பட்டிருக்கிறேனோ, அது எவ்வளவு தூரம் நிறைவேறும்? ஆதித்த கரிகாலர், நந்தினி,—இவர்களுக் குக் குறுக்கே நின்று தான் எந்தக் காரி யத்தையும் சாதிக்க முடியுமா? இது வரையில் இரண்டு மூன்று தடவை நந்தினியிடம் சிக்கிக் கொண்டு தப்பிப் பிழைத்தோம்! மறுபடியும் அது முடி யுமா? பழுவூர் இளைய ராணியை எண் ணிய போது வந்தியத் தேவனுடைய மன தில் ஒரு திகில் உண்டாயிற்று. அவள் அவனிடம் மிக்க பிரியமும் மரியாதை யும் காட்டிப் பேசியதென்னமோ, உண்மைதான்! ஆனால் அவள் உள் ளத்தை அவனால் அறிய முடியவில்லை. ஏதோ ஒரு முக்கிய காரிய நிமித்தமாக அவனை அவள் விட்டு வைத்திருப்ப தாகவே தோன்றியது. அதனாலேயே வந்தியத் தேவனிடம் அவள் அவ்வளவு பொறுமையாக இருந்திருக்கிறாள். அது என்ன காரியமாக இருக்கும்?

வந்தியத்தேவனுடைய குதிரை சற்று முன் அந்த வழியே சென்ற பல்லக்கைத் தாண்டிச் சென்றது. இம்முறை அவன் பல்லக்கை மோதவும் விரும்பவில்லை. பல்லக்கு அவனை மோதவும் இஷ்டப்பட வில்லை. ஆனால் குதிரை பல்லக்கைத் தாண்டிய போது பல்லக்கின் திரை சிறிது விலகியது. உள்ளே வீற்றிருந்த பெண் கொடும்பாளூர் இளவரசி வானதி என்பதை அறிந்து கொண்டான். குதிரையை நிறுத்தலாமா என்று ஒரு கணம் யோசித்தான். பிறகு அதை மாற்றிக் கொண்டு மேலே சென்றான். வானதியைப் பற்றி இளைய பிராட்டி கூறியது நினைவு வந்தது. நாலு புறமும் அபாயங்கள் சூழ்ந்த இக் காலத்தில் கொடும்பாளூர் இளவரசி தனியாக எங்கே புறப்பட்டாள்? தகுந்த பாது காப்புக் கூட இல்லையே? அதோடு இன் னொரு விசித்திரத்தையும் அவன் கண் டான். சற்றுத் தூரத்திலிருந்து பயங் கரத் தோற்றமுடைய இரண்டு காளா முக சைவர்கள் வானதியின் பல்லக்கை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் எதற்காக அப்படிப் பார்க் கிறார்கள்? அவர்கள் இரண்டு பேரும் யார்? அரிச்சந்திர நதிக்கரையில் தான் படுத்துறங்கிய போது தன் பக்கத்தில் வந்து நின்று பேசியவர்கள் அல்லவா?

வானதியிடம் வந்தியத் தேவனுக்கு அவ்வளவு அனுதாபம் இல்லை யென்பது உண்மையே. பொன்னியின் செல்வ ருடைய உள்ளத்தில் பூங்குழலி பெற வேண்டிய இடத்தை வானதி அபகரிக்க விரும்புவதாகவே அவன் எண்ணினான். அதனால் அவள்பேரில் கோபங் கொண் டிருந்தான். ஆனாலும் இளையபிராட்டி அவளிடம் அளவற்ற அன்பு வைத்திருந் தாள் என்பதை அவனால் மறக்க முடிய வில்லை. எனவே, வானதிக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்தால் இளையபிராட்டி அதனால் அளவில்லாத துன்பம் அடை வாள். ஆனால் அபாயம் எதற்காக நேர வேண்டும்? "சம்பந்தமில்லாத காரியங் களில் தலையிட்டுக் கொள்ளாதே! உன் காரியத்தைப் பார்த்துக் கொண்டு போ!" என்று ஆழ்வார்க்கடியான் கூறிய புத்தி மதி நியாயமானதுதான். ஆயினும், வானதியின் பல்லக்குச் சென்றதைக் காளாமுகர்கள் இருவர் மறைவான இடத்திலிருந்து பார்த்துக் கொண்டு நின்ற காட்சி திரும்பத் திரும்ப அவன் ஞாபகத்திற்கு வந்து கொண்டிருந்தது.

இதோ குடந்தை சோதிடரின் வீடு வந்து விட்டது! எல்லாவற்றுக்கும் அவ ரைக் கேட்டுப் பார்க்கலாம்....அடேடே! இத்தனை நேரம் அந்த விஷயம் மூளைக்கு எட்டவில்லையே? வானதி தேவியும் குடந்தை சோதிடர் வீட்டுக்குத்தான் வருகிறாள் போலும்! பழம் நழுவிப் பாலில் விழுந்தது! வானதி வந்து சேர் வதற்குள் நம்முடைய காரியத்தையும் நாம் பார்த்துக் கொள்ளலாம். இவ்வாறு எண்ணிச் சோதிடர் வீட்டு வாசலில் குதி ரையை நிறுத்தி விட்டு வந்தியத் தேவன் அந்தச் சிறிய வீட்டுக்குள் நுழைந்தான்.


ஜூன் 21ல
வெளிவருகிறது
மாடர்ன் தியேட்டர்ஸ்
கல்யாணி
டைரக்ஷன்
ஆச்சார்யா & மஸ்தான்

பணமும் பாசமும்

அநுத்தமா

அபர்ணாவும் நானும் ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள்தாம். இந்தக் காலத்தில் "அவர்களிருவரும் அக்கா தங்கைபோல் இருக்கிறார்கள்" என்று இருவரைக் குறிப்பிடுவதைக் காட்டிலும் "அவர்கள் இருவரும் இணைபிரியாத நண்பர்கள்" என்று சொல்வதுதான் உறவின் நெருக்கத்தை அதிகப்படியாகக் காண்பிக்கிறது.

அபர்ணாவும் நானும் அக்கா தங்கைதான். எங்களிருவரிடையே இருந்த ரத்த பாசத்தை இன்னமும் உறுதி செய்ய ஆனந்த நட்பு இருந்தது. தோழமை இருந்தது. அன்பு இருந்தது. அவள் சுகம்தான் என் சுகம். என் மகிழ்ச்சிதான் அவளுக்கு இன்பம். இப்படிப் பிரியாமல் இருந்தோம்.

அவள்தான் மூத்தவள். நான் இளையவள். அவள் பெயர் அபர்ணா என்றதால், அதற்குச் சரியாக இருக்க வேண்டுமென்று எனக்கு, சுவர்ணா என்று பெயரிட்டார்கள். அவள் முதல் குழந்தையாக இருந்தாள். உலகத்தில் நிலவி வரும் சாதாரணப் பெயரே அவளுக்குக் கூடாது என்று புதுப் பெயர் வைத்தார்கள். அதை ஒட்டித்தான் என் பெயர் பிறந்தது. அதில் நான் திருப்தியும் சந்தோஷமும் கொண்டேன். எப்பொழுதும், விழிப்பிலும் உறக்கத்திலும் நாங்கள் இருவரும் ஒன்றாகவே இருப்போம்.

"ஏனடி, குட்டிகளா! நீங்கள் இருவரும் ஒருவனையே கல்யாணம் பண்ணிக் கொள்வீர்களோ! நாளைக்கு நீ ஓரிடம் அவள் ஓரிடம் போக வேண்டியவர்கள்தானே! புருஷப் பிள்ளைகளா, இஷ்டப்பட்டால் ஒரே இடத்தில் இருக்கலாம் என்பதற்கு! நீங்களோ பெண்கள்!"

இவ்வாறு சிலர் கூறியும், நாங்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. அவர்கள் சொன்னது போல் பயங்கரமாக இருவரும் ஒருவரையே மணந்து கொள்ளவுமில்லை.

அபர்ணா நல்ல அழகி. பேசும் சாதுர்யமும், ஆடை பணிந்து கொள்ளும் நெளிவும் அவளிடம் இருந்தன. இரண்டு நிமிஷம் எங்காவது தங்கினால் போதும், அவள் இரண்டு புது மனிதர்களைச் சிநேகம் செய்துகொண்டு விடுவாள். கண்களைச் சுழற்றி முத்துப் பற்கள் மின்ன, மோகனமாக ஒரு முறை முறுவலித்தால் போதும், உலகமே அவள் காலடியில் வந்து விழும். நான் சாதாரண அழகுடையவள்தான். என் கண்கள்தாம் தன்னுடையவைகளைக் காட்டிலும் அழகு பொருந்தியவை என்று அபர்ணா கூறுவாள். என் நயனங்கள் அகலமாகத் தெளிந்த நீர்த் தேக்கத்தைப் போல் இருக்கும். அவள் எவ்வளவு குடுகுடுப்பையோ, அவ்வளவு நிதானம் நான். நான் மகா சங்கோஜி. நான்கு முறையாவது பார்த்தால்தான் ஒருவரைக் கண்டு நான் புன்முறுவல் புரிவேன். அவளோ பார்த்த மாத்திரத்தில் அவர்கள் வாழ்க்கைத் திட்டத்தையே வகுத்துக் கையில் கொடுத்து விடுவாள்.

"அபர்ணா, உன் உற்சாகம் ஒருநாள் உன்னைச் சங்கடத்தில் கொண்டு விடும்" என்பேன் நான்.

"போடி சரிதான். உன் நிதானம் உன்னைத்தான் சங்கடத்தில் ஆழ்த்தும். நீ யோசித்து, ஆய்ந்து, ஓய்ந்து, ஒரு காரியத்தில் இறங்கு வதற்குள், அடுத்த யுகம் வந்துவிடும். அப்போது நீ அந்தப் புதுமையிலும் வாழத் தெரியாமல் இந்தப் பழமையிலும் வாழ முடியாமல் தவித்துப் போய் விடுவாய்!" என்பாள்.

நான் கலகலவென்று சிரிப்பேன்.

"காலத்துக்குச் சரியாக நடக்க வேண்டும். வேண்டுமானால் ஓடக்கூட வேண்டும்" என்பாள்.

'சரிதான்' என்று ஆமோதிக்கக்கூட மாட்டேன் நான். அவ்வளவு நிதானம்!

எங்களிருவருக்கும் ஒரே நாளில், ஒரே முகூர்த்தத்தில் மணமாயிற்று. அப்பொழுதுதான் எங்கள் அபர்ணாவின் முகத்திலும், பாவனையிலும் சற்று நிதானம் ஏற்பட்டது. அப்பொழுதுதான் என்னிடத்தில் சிறிது துள்ளல் கண்டது.

"சுவர்ணா, அவர்கள் எப்படி இருப்பார்களோ? நாம் இன்றுவரை இருந்தது போலவே என்றும் இருக்க முடியாமல் போய்விட்டால், என் இருதயம் சுக்கல் சுக்கலாகிவிடும்" என்று தன் மனச் சஞ்சலத்தை என்னிடம் சொல்லி விட்டுக் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்து விட்டாள் அபர்ணா.

நான் அவளைத் திட்டினேன். "அபர்ணா, எனக்கு மட்டும் சந்தோஷமாக இருக்குமா! ஆனாலும், இனிமேல் நீ மனசை அலட்டிக் கொள்வதில் பயனில்லை. இன்று வரை இருந்ததுபோல் நாம் இரண்டு பேரும் இனி ஒரே இடத்தில் இருக்க முடியுமா? பிரிவின் கஷ்டத்தை முதலில் சமாளிக்க வேண்டும். அதன் பிறகு மற்றவை. எதுதான் வந்தாலும், யார் எப்படித்தான் இருந்தாலும், நம் அன்பைப் பிளக்க முடியுமா? அதில் உனக்குச் சந்தேகம் தோன்றுவானேன்! என் வரையில் உன்னைத் தவிர என் உள்ளத்தில் வேறு யாருக்கும் அந்த உரிமையான ஸ்தானம் கிடையாது" என்று நான் கூறின பிறகு அவள் சற்றுச் சாந்தமடைந்தாள்.

அவளிடம் பயம் தலை காட்டியதே எனக்கு வருத்தமாக இருந்தது.

எங்கள் கணவன்மார் இருவரும் ஒரு வாரம் எங்கள் வீட்டிலேயே இருந்தார்கள். மற்றவர்கள் யாவரும் தத்தம் இல்லங்களுக்குச் சென்று விட்டனர். நாங்கள் நான்கு பேரும் சதா ஒன்றாகவே இருந்து வந்தோம். பேசினோம், சிரித்தோம், விளையாடினோம், வெளியே போனோம்.

"பரவாயில்லை, சுவர்ணா! என் கவலை விட்டது. அவர்கள் இருவரும் நம் நட்புக்குக் குறுக்கே நிற்க மாட்டார்கள்" என்றுரைத்து விட்டு அபர்ணா என்னைக் கட்டிக் கொண்டாள். அந்த ஆறுதல் என் கண்களிலும் கண்ணீரை வரவழைத்தது.

என் கணவர் அபர்ணாவைப் போல் சதா குறுகுறுவென்று உற்சாகமே வடிவெனத் திகழ்ந்தார். என் அத்திம்பேர் என்னை ஒத்திருந்தார். அதுவும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. என் தமக்கையின் துள்ளலைப் பிடித்துக் கட்ட ஒருவர் வந்துவிட்டார் என்று அறிந்து, என் பொறுப்பை நான் அவர் கையில் ஒப்படைத்து விட்டேன்.

நானும் அபர்ணாவும் எங்கள் பெட்டியின் எதிரில் உட்கார்ந்துகொண்டு விழித்தோம். இது வரை அவளுக்கு வேறு, எனக்கு வேறு புடவையோ ரவிக்கையோ வாங்கியது கிடையாது. இருவருக்கும் ஒரே அளவு. பொதுவாகச் சில புடவைகளும் சில ரவிக்கைகளும் இருக்கும். இஷ்டமானதைப் போட்டுக் கொள்வோம். அபர்ணாவின் அழகுக்கு ஏற்றவாறு அவள் அலங்காரம் செய்து கொள்வாள். நான் ஏதோ சாதாரணமாக, பகட்டில்லாமல் உடுப்பேன்.

"அபர்ணாவைவிடச் சுவர்ணா சற்றுச் சிவப்பாக இருந்தாலும், அபர்ணாதான் கண்ணைக் கவரும் அழகு. சுவர்ணா ஏதோ பார்ப்பதற்குச் சுமாராக இருக்கிறாள், அவ்வளவுதான்" என்று சொல்வார்கள். அபர்ணாவின் அழகையும் சாதுர்யத்தையும் யாரேனும் புகழ்ந்து விட்டால், எனக்கு உள்ளூற ஆனந்தம் ஏற்படும்.

ஆனால், அபர்ணாவுக்கோ மிகவும் கோபம் வந்து விடும். அவள் அவர்களைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கி விட்டு விடுவாள்.

"அவள் வாய் திறக்காமல் இருக்கிறாள் என்பதற்காக அவளை எது வேண்டுமானாலும் சொல்லி விடுவதா! அவளுக்கு இருக்கும் பொன் மேனிக்கு அவள் மட்டும் சிரத்தையுடன் ஆடை யணிந்து கொண்டால் ராஜாத்திபோல் அல்லவா இருப்பாள்!" என்று ஒரு மூச்சு சண்டை போட்டு விட்டுத்தான் விடுவாள் அவள்.

என் தொண்டை உறைந்தது. அபர்ணாவின் நயனங்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.

"அபர்ணா, சீக்கிரம்! உனக்கு எந்தெந்தப் புடவை பிடிக்கிறதோ எடுத்துக்கொள்" என்று நான் அவளை வேலைமீது முடுக்கிவிட்டேன். அவள் என் மடியில் படுத்துக் கொண்டு விசும்பினாளே தவிர, ஒரு துணிகூட எடுத்து வைக்கவில்லை. நானே அங்கு இருப்பனவற்றில் பளிச்சென்று இருந்தவற்றையும், புதியனவாக இருந்தவற்றையும் எடுத்து அவளுடைய பெட்டியில் வைத்தேன்.

அபர்ணாவின் குணத்திற்கு ஏற்றவாறு அவளுக்குக் கணவரும் புக்ககமும் வாய்த்திருந்தன. என் சுபாவத்தை ஒட்டி எனக்கு வீடு அமைந்திருந்தது. எல்லாம் கடவுளின் பொறுப்பு அல்லவா!

அபர்ணாவின் கணவர் ஒரு கம்பெனியில் வேலையாக இருந்தார். அவர் வெளி தேசங்களுக்குக் கூடப் போக வேண்டியிருந்தது. இப்பொழுது உடனே ஜப்பானுக்குப் போவதாக இருந்தார். அபர்ணாவும் அவருடன் போவது என்று தீர்மானமாயிற்று. அபர்ணாவின் மாமனாரும் மாமியாரும் காஷ்மீரத்தில் இருந்தனர். ஒரே ஒரு நாத்தனார் இருந்தாள். அவள் சிங்கப்பூரில் இருந்தாள்.

"அபர்ணா, உன் மனசுக்கு ஏற்ற மாங்கல்யம் கிடைத்து விட்டது. அந்த ஊருக்கெல்லாம் போனால் என்னை மறந்து விடாதே! அங்கு நீ பார்ப்பதையெல்லாம் எனக்கு விவரமாக எழுது" என்று நான் அவளிடம் கூறின போது அவள் முகம் சட்டென்று வாடி விட்டது.

"நீ இல்லாமல் எனக்கு ஒன்றும் ரஸிக்காது" என்றாள் அவள்.



நான் அதைக் கேட்டுச் சிரித்தேன்.

"என்னடி, ஒருவர் வந்து விட்டதினாலேயே நாம் இத்தனை நாட்கள் பழகியது போய் விடுமா, உன்னோடு பார்த்து, உன்னோடு ரஸித்தவளுக்கு!" என்று கூறுவதற்குள் நான் குறுக்கிட்டேன்.

"உன்னை ஒன்றும் நான் தப்புச் சொல்லவில்லை. அப்படி ஒன்றும் ரஸமற்றுப் போய்விடாது என்று சொன்னேன்" என்று நான் கூறவும் அடிபட்ட நாகம்போல் சீறினாள் அபர்ணா.

"அவ்வளவுதான் நீ வைத்து இருக்கும் அன்பு!" என்றாள் அவள்.

"போடி, அசடு" என்று நான் சுவாதீனமாகத் திட்டிவிட்டுப் போய் விட்டேன்.

★

இன்று அபர்ணா கிளம்புகிறாள். நாளைக்கு நான் கிளம்ப வேண்டும். அம்மா பட்சணங்கள் செய்து கொண்டிருந்தாள். நான் அங்கு சென்று அவளுக்கு உதவி புரிந்தேன்.

"அவர்கள் போகும் இடங்களில் தேன்குழலும் பொருவிளங்காய் உருண்டையும் கொண்டு போனால் நன்றாக இருக்குமா! அபர்ணாவின் மூட்டையில் காசி ஹல்வாவும் காரா பூந்தியும் அதிகமாக வை. உனக்குக் கொடுப்பதில் பொருவிளங்காய் அதிகமாக இருக்கட்டும். நாலு பேருக்கு எடுத்துக் கொடுக்கச் சௌகரியமாக இருக்கும்" என்று அம்மா கட்டளை யிட்டாள்.

நான் என் மனதுக்குள் லேசாகச் சிரித்துக் கொண்டேன். ஆம், அபர்ணாவின் வாழ்க்கை ஹல்வா வாழ்க்கை, என்னுடையது தேன்குழல் வாழ்க்கை. அம்மா எவ்வளவு அழகாகக் கண்பித்து விட்டாள்.

முதல் நாள் அபர்ணாவை விமானத்தில் ஏற்றி விட்டு வந்து, மறுநாள் நாங்கள் கிளம்பினோம். என் புக்ககம் ஒரு கிராமத்தில் இருந்தது. என் அத்திம்பேருக்குப் படிப்பும் பதவியும், என் கணவருக்கு ஆஸ்தியும் இருந்தன.

எங்கள் வீடு பெரியது. அதே போல் குடும்பமும் மிகப் பெரியது. வீட்டில் தானியமும், பழங்களும், காயும், பசுவும், எருமைகளும் ஏராளமாக இருந்தன. சுகமான வாழ்க்கைக்கு வேண்டிய சௌகரியங்கள் இருந்தன. நான் அதில் எளிதில் ஒன்றி விட்டேன்.

"சுவர்ணா, எத்தனையோ யுகங்களாகப் பழக்கப் பட்டவள் போல் இதில் கலந்து விட்டாயே!" என்று என் கணவர் கேட்டார்.

நான்தான் பதில் சொல்லவே பத்து நாட்களாகுமே! பேசாமல் சிரித்தேன்.

என் வாழ்வு பரிபூரணமாக இருந்தது. இந்த இன்பம் தனும்படியான நிறைவு அபர்ணாவின் கடிதங்கள் மூலம் கிடைத்தது. தான் போய்ப் பார்த்த இடங்களைப் பற்றி வானளாவப் புகழ்ந்து எழுதி வந்தாள் அவள்.

"சுவர்ணா, நீ என்னதான் சொல். கிராமாந்திர வீட்டில் நீ குறைவற்ற மகிழ்ச்சியை அடைவதாக எழுதினாலும் இந்தமாதிரி வெளி நாடுகளுக்கு வந்தால்தான்

பூரண அனுபவம் கிடைக்கிறது. உன் கொள்கையை நான் ஆமோதிக்க மாட்டேன்'' என்று அவள் வற்புறுத்தி வந்தாள்.

'' அதையும்தான் பார்த்துவிடுவோமே, சுவர்ணா. அவள் அங்கு இருக்கும்போது காஷ்மீரத்துக்குப் போய்விட்டு வருவோம்'' என்றார் என் கணவர். நாங்கள் போனோம்.

அபர்ணாவும் அத்திம்பேரும் மிகவும் அன்புடன் நடந்து கொண்டார்கள். எனக்குத்தான் எவ்வளவு உயர்ந்த பரிசுகள் அளித்து விட்டாள்!

'' இந்தக் கடிகாரத்தைப் பார்த்தாயா சுவர்ணா? உங்கள் குக்கிராமத்தில் கையில் கடிகாரத்தைக் கட்டிக் கொண்டால்கூட ஏதாவது சொல்வார்கள் அல்லவா! இதைக் கழுத்துச் சங்கிலியில் போட்டுக் கொள்ளலாம். சாதாரண முகப்புப்போல் இருக்கும் இதற்குச் சுங்க வரியே ஐந்நூறு ரூபாய் ஆயிற்று!'' என்று அவள் கூறும்போது எனக்கு ஒருபுறம் மிகப் பெருமையாகவும், மறுபுறம் சற்றுச் சங்கோசமாகவும் இருந்தது.

'' இவ்வளவு பெரிய பரிசு எனக்கு எதற்கு, அபர்ணா? அதில் பத்தில் ஒரு பங்குகூட என்னால் திருப்ப முடியாதே'' என்று கூறி நான் அதை வாங்கத் தயங்கினேன்.

அபர்ணாவின் நயனங்களில் நீர் மல்கியது.

''முன்பெல்லாம் நம் இருவருக்குள் வித்தியாசமே இருந்ததில்லையே!'' என்று அவள் கேட்டாள். நான் மறு பேச்சின்றிக் கடிகாரத்தை வாங்கிக் கொண்டேன்.

நான் கஷ்டப்படாமல் சௌகரியமாக இருந்தேனே தவிர, என் செல்வம் ஒருவிதமாக இருந்தது. அபர்ணாவின் நிலை ஒருவிதமாக இருந்தது. அவள் பளபளவென மின்னும் 'ப்யூக்'கில் பறந்து சென்றாள். எங்கள் வீட்டில் இரண்டு வில் வண்டிகளும், நான்கு நல்ல உயர்ந்த ஜாதி காங்கேயம் காளைகளும், ஒரு வெள்ளைக் குதிரை பூட்டிய ஜட்காவுமே இருந்தன.

அபர்ணா வந்தால் அவளுக்கு நித்தமும் அறுசுவை விருந்து பண்ணி, பழத்தாலும், பட்டிக்காட்டு வேடிக்கைகளாலும், அவளை உபசரிக்க முடியுமே தவிர என்னால் அவளைப்போல் பட்டாலும் பொன்னாலும் பூட்ட முடியாது. அவள் தனி அரசு செலுத்தி வந்தாள். நான் குடும்பத்தில் பெரியவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தேன்.

அவள் வாழ்க்கை காட்டாறுபோல் ஓரிடத்தில் பாறைமீது மோதி, குதித்து, பாடி, கும்மாள மடித்தது. ஓரிடத்தில் சலனமின்றிக் குட்டை போல் தேங்கிற்று. மணலில் சில சமயம் ஊர்ந்து சென்றது. மறுபடியும் கரையை உடைக்கப் பார்த்தது. என் வாழ்வு வெள்ளப் பெருக்கெடுக்காமலும், வற்றிப் போகாமலும் ஒரே சீராகக் கடந்துசென்றது.

என் கணவருக்கும் எனக்கும் இடையே ஆழ்ந்த அன்புப் பிணைப்பு ஏற்பட்டு விட்டது. காலக்கிரமத்தில் குழந்தைகள் பிறந்தன. அவர்களைப் பராமரிப்பதில் நான் அமைதியாக இருந்து வந்தேன்.

வெகு நாட்கள் வரை அபர்ணாவுக்கு மக்கட் பேறு கிடைக்காமலேயே இருந்தது. அப்பொழுதெல்லாம் அதைப் பற்றி அவள் மிகவும் உதாசீனமாகப் பேசுவாள். பிறகு ஒரு மகன் பிறந்தான்.

அதன் பிறகு அவள் பேச்சே அடியோடு மாறி விட்டது. நான் சிரித்துக் கொள்வேன்.

கடவுளும் அவளை ஒரு விதமாகவும் என்னை ஒரு விதமாகவும் நடத்தி வந்தார். அவளுக்கு அழகை அளித்தார், ஐசுவரியத்தைக் கொடுத்தார், அதிகாரத்தைத் தந்தார். அதேபோல் ஒவ்வொரு முறை தாங்காத கஷ்டத்தையும் கொடுத்துப் பரீட்சித்து வந்தார்.

ஒரு நாள் அவளிடமிருந்து கடிதம் வந்தது. சீனாவிலிருந்த அவர்களது கம்பெனி வெள்ளத்தில் அடிபட்டு மூழ்கி விட்டதாகவும், அதனால் அவர்கள் நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டதாகவும், எழுதியிருந்தாள். நான் அவளை உடனே புறப்பட்டு வரும்படி தந்தி அடித்து, முடையாக இருக்குமோ என்று பணமும் அனுப்பியிருந்தேன். அவள் எங்கள் பெற்றோர் ஊருக்கு வந்தாள். நானும் போய் அவளுடன் இருந்து விட்டு வந்தேன். என் குழந்தைகள் அவளிடம் ஒட்டிக் கொண்டன.

''பெரியம்மாவை நம் ஊருக்கு அழைத்துப் போகலாமே'' என்று அவர்கள் நச்சரித்தார்கள். ஆனால் அபர்ணா வருவதற்கு மறுத்து விட்டாள்.

''என்னை மன்னித்து விடு, அபர்ணா. அந்தப் பட்டிக்காட்டில் வந்து என்னால் இருக்க முடியுமா!'' என்றாள் அவள். உயிருக் குயிராய்ப் பழகிய தங்கையின் வீட்டுக்குப் போக மறுக்கிறோமே என்றுகூட அவளுக்குத் தோன்றவில்லை. என் கணவர் அவளை அழைக்கும்படி சொன்னதற்கு நானே சமாதானமாக, ''அவளுக்கு இப்பொழுது மனம் சரியாக இல்லை'' என்றேன். அவரும் பேசாமல் இருந்தார்.

என் பெண்ணுக்கு நகை செய்வதற்காக நான் சேர்த்து வைத்திருந்த ஆயிரம் ரூபாயை அபர்ணாவிடம் கொடுத்தேன்.

''சே, இதென்ன! நான் எப்படி வாங்கிக் கொள்வேன்'' என்று அவள் கேட்டாள். முன்பு அவள் கூறியதை நான் இப்பொழுது சொன்னேன்.





“இதற்கு முன்னால் என்னென்ன வேலைகள் செய்திருக்கிறாய்?”

“நான்தானுங்க எல்லா வேலையுமே செய்யறது?”

“அப்படின்னா, எனக்குப் புரிய வில்லை! விவரமாகச் சொல்லு!”

“அந்த ஆபீஸிலே எஜமானுக்கு ஏதாவது காரியம் ஆகணும்னா மானேஜரைக் கூப்பிடுவாரு, மானேஜர் எட்டினார்க்கை கூப்பிடுவாரு, அவரு அட்டெண்டரைக் கூப்பிடுவாரு, அட்டெண்டர் என்னைக் கூப்பிடுவாரு.. எனக்குக் கீழே ஒருத்தரும் இல்லாததாலே அதை நானே செய்திடுவேனுங்க!”

“நம்மிடையே வித்தியாசமா!” என்று நான் கேட்டதும் அவள் அதைப் பெற்றுக் கொண்டாள். ஒரு மாதத்திற் கெல்லாம் அவள் தன் கணவனைச் சேர்ந்து விட்டாள். அவர் கம்பெனி அவரை மறுபடியும் அழைத்துப் பழைய வேலையைக் கொடுத்தது. எனக்கும் அப்பொழுதுதான் மனம் நிம்மதி யடைந்தது.

ஊருக்குப் போன அபர்ணா ஒரே ஒரு கடிதம் எழுதினாள். அதன் பிறகு ஒன்றும் வரவில்லை. நான் அவளிடம் நூறு தடவை கேட்டுக் கொண்டிருந்தேன்.

“எனக்கு மிகவும் கவலையாக இருக்கும். அவ்வப்போது ஏற்படும் நிலைமையைப் பற்றி உடனே எழுது” என்று நான் பலமுறை கூறி அவளுக்கு வழி அனுப்பினேன்.

ஆனால் அவளிடமிருந்து ஒன்றும் விவரம் வரவில்லை. நான் கவலையுடன் சதா உருகிக் கொண்டிருந்தேன்.

“ஏதாவது பிசகாக இருந்தால் உனக்கு எழுதாமலா இருப்பாள் அவள்? பைத்தியம் போல் உடலை மாய்த்துக் கொள்கிறாயே! அவள் மனசு உற்சாகமற்று இருக்கும், அவ்வளவுதான்” என்று என் கணவர் எனக்கு ஆறுதல் கூறி வந்தார்.

“என்ன கஷ்டப்படுகிறாளோ!” என்று சதா என் உள்ளம் உளைந்துக் கொண்டே இருந்தது. வெகு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் ஒரு தந்தி வந்தது. அவள் நிலைமை பழையபடி ஆகி விட்டதாகவும் ஊராருக்குப் போவதாகவும் அதில் கண்டிருந்தது. அதன் பிறகு நான் தெளிவுடன் நடமாடி வந்தேன். நான்கு மாதங்கள் சென்றன. எனக்கு இப்பொழுது ஒரு பையன் பிறந்தான். அவன் அச்சு அபர்ணாவின் பிள்ளையைப் போலவே இருந்தான். அவள் அவனைப் பார்க்க முடியாமல் எங்கோ இருக்கிறாளே என்று என் மனம் தவித்தது. அதைப் பற்றிப் பக்கம் பக்கமாக அவளுக்கு எழுதித் தள்ளினேன். ஆனால் அவளிடமிருந்து ஒருவித பதிலும் வராதது எனக்கு ஏமாற்றமாகத் தான் இருந்தது.

“கண்ணை விட்டு மறைந்தால் அன்பு கூடக் குறைந்து விடும்போல் இருக்கிறது. அபர்ணா குழந்தையைப் பற்றித் தன் சந்தோஷத்தைக் கூடத் தெரிவித்துக் கொள்ள வில்லையே!” என்று நான் அங்கலாய்த்தேன்.

“போமா, பைத்தியம். முதல் குழந்தை, இரண்டாம் குழந்தை என்றால் எல்லோரும் அமர்க்களப் படுத்தினார்கள். நான்காவது குழந்தைக்கு உடல் மறந்து உற்சாகம் காண்பிப்பார்களா, யாராவது! இனிமேல் இப்படித்தான் இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை சுவர்ணாவுக்கு ஒரு பெண்ணோ, பிள்ளையோ பிறக்கும் என்றுதான் பேசாமல் இருப்பார்கள். அத்துடன் அவள் எங்கெல்லாமோ, புதிய புதிய விநோதங்களைக் கண்டு கொண்டிருப்பாள். என்ன வேலையோ, ஏதோ! அபர்ணாவுக்கு உன் குழந்தையிடம் ஆசை யில்லாவிட்டால் யாருக்குத்தான் இருக்கும் சொல்” என்று என் கணவர் கூறினார்.

ஏனோ அவர்மீது எனக்கு மிகவும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

“உங்களுக்கும் என்னைக் கண்டால் அப்படித் தான் சலித்து விட்டதா!” என்று கேட்டேன் நான்.

“எப்படித்தான்!”

“அதுதான். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை......”

“நீ புத்திசாலி என்றல்லவா நான் நினைத்துக் கொண்டிருந்தேன்!” என்று அவர் என்னைப் பார்த்து ஏளனமாகக் கூறிவிட்டு அப்பால் அகன்று விட்டார்.

அவர் கூறுவதில் உண்மை இருக்கலாம் என்று பிறகு எனக்குத் தோன்றிற்று. ஆயினும் ஒரே உயிர்போல் பழகி அனுபவித்த கட்டுக்காக என் மனம் ஏங்கியது. என் சுபாவத்தையும் மீறி நான் இதைக் குறித்து விவரமாகக் கடிதம் எழுதினேன் அவளுக்கு. அவளிடமிருந்து கிடைத்த பதில் மௌனம்தான். மிஞ்சினால் பொம்மை போட்ட ஒரு கார்டில் நான்கு வரி. நான் என் மனத்தை அடக்கிக் கொண்டே வந்தேன். அபர்ணாமீது எனக்குக் கோபமும், சிறிது கசப்பும் தோன்ற ஆரம்பித்தன. இனி அவளுக்குக் கடிதம் எழுதி அவமானப் படவேண்டாம் என்று நான் சங்கல்பம் செய்து கொண்டேன்.

ஆனால் அதற்காக எனக்குச் சவுக்கடி கொடுப்பதுபோல் ஒரு விபரீதம் நேர்ந்து விட்டது. அபர்ணாவின் ஒரே மகன் வஸந்தன் திடீரென்று படுத்த படுக்கையாகி விட்டான் என்ற தந்தி வந்தது. நான் இடியால் பெரிதும் தாக்குண்டவன்போல் தடுமாறினேன்.

“உடனே புறப்பட்டு வா” என்று தந்தி அடித்தேன். என் தாயுள்ளம் பதறியது. என் அபர்ணாவின் ஒரே குழந்தையைக் காப்பாற்றும்

படி இரவும் பகலும் கடவுளைப் பிரார்த்தித்தேன். 'அதற்குப் பதில் உன் குழந்தைகளில் ஒருவரைக் கொடு' என்று யாரேனும் கேட்டிருந்தாலும் கொடுக்க நான் தயாராக இருந்தேன். அதன் பிறகு மாதம் இரண்டாயிற்று. ஒரு தகவலும் வரவில்லை. தந்திமேல் தந்தி அடித்தோம். ஒரு நாள் பதில் வந்தது. அவன் பூரண குணமடைந்து பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருந்தாலும். ஒரு போட்டோவும் அனுப்பினான். அதை நான் என் தலையணையில் வைத்துக் கொண்டிருந்தேன்.

ஒருமுறையாவது அவனை அழைத்துக் கொண்டு வந்து எங்களுடன் கொஞ்ச நாட்கள் இருந்து விட்டுப் போகும்படி எழுதினேன் நான். வழக்கம் போல் மௌனம், மௌனம், மௌனம்தான்.

* * *

இப்பொழுது வருஷம் இரண்டு கழிந்து விட்டது. இன்னமும் என் அசட்டு உள்ளம் என் தமக்கையின் கடிதமோ, வருகையோ ஏதேனும் ஒன்று நேராதோ என்று ஏங்கியபடியே இருந்தது.

நாங்கள் என் பெற்றோர் இருக்குமிடத்திற்குச் சென்றிருந்தோம். குழந்தைகள் விடுமுறை நாட்களில் தங்களுடன் இருக்க வேண்டும் என்று அம்மா எழுதியிருந்தாள்.

"நாமும் போவோமே, சுவர்ணா. உனக்கும் கொஞ்சம் மனமாற்றமாக இருக்கும்" என்றார் என் கணவர்.

"அங்கே போனாலா! நானும் அவனும் விண்டாலும் பிரியாமல் கழித்த நாட்களை நினைவு மூட்டும் அந்த இடத்திலா எனக்கு மனமாற்றமாக இருக்கும்!" என்று நான் கேட்டேன்.

"உன் தாயாருக்கு எப்படி இருக்கும்! நாம் போவோம். அபர்ணா அப்பாவுக்கு எழுதுவதை யாவது நீ பார்க்கலாம் அல்லவா!" என்று என்னைக் கட்டி இழுத்துச் சென்றார் அவர்.

ஆனால் அங்கு போயும் என் மனம் நிம்மதியடையவில்லை. சற்றும் வித்தியாசமில்லாமல் ஒன்றிப் பழகிய இன்ப நாட்களை நினைத்து நினைத்து உருகினேன் நான். அப்பா அதைக் கவனித்து என்னைவிட அதிகமாகக் கவலைப்பட்டார்.

"சுவர்ணா, பையன்களுக்குப் பாடம் சொல்லிக் கொடு. எழுந்திரு" என்று அவர் என்னை எழுப்பிக் கடமைகளில் என் நினைவைத் தள்ளினார்.

"அம்மா, இதற்கு என்ன, அம்மா, அர்த்தம்!

'அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.'

என்று இருக்கிறதே!" என்று கேட்டுக் கொண்டே என் பெண் வந்தாள்.

அவள் கேட்டதற்குப் பதில் சொல்லாமல், என் மனத்திற்கு விடை கொடுத்துக் கொண்டேன் போலும்.

"உண்டு. உண்டு. அன்புக்கும் உண்டு அடைக்கும் தாழ். அதுதான் பணம்" என்று நான் வறட்சியான குரலில் கூறினேன். குழந்தை விழித்தாள்.

"என்ன சுவர்ணா, இது! பயித்தியம் பிடித்து விடப் போகிறது!" என்று இன்றைக்குச் சற்றுக் கடுமையாகவே அதட்டினார் என் கணவர்.

"இல்லையா, அப்பா! அன்புக்கு இருக்கிறதே தாழ்! அபர்ணாவுக்குக் கஷ்டம் வரும்போது உற்சாகம் குன்றிவிட்டது. கடிதம் எழுத முடியவில்லை. சௌக்கியம் வந்தபோது சுகபோகத்தில் அவகாசம் கிடைக்கவில்லை. அவளைப் போல் நானும் பணமும் பாக்கியமுமாக இருந்திருந்தால் அவள் அன்பு குறைந்து இருக்குமா!" என்று நான் என் வசம் இழந்து என் நிதானம் இழந்து, குழந்தைகள் எதிரே இருப்பதையும் மறந்து கீச்சுக் குரலில் கத்தினேன், பயித்தியக்காரியைப் போல்.

"உனக்கு என்னமா பணத்திற்குக் குறைவு வந்துவிட்டது!" என்று அப்பா என்னை அடக்கினார். தன் மாப்பிள்ளை ஏதேனும் தப்பாக நினைத்துக் கொள்ளப் போகிறாரோ என்ற பயம் போலும்.

"ஏ பயித்தியம்! பேசாமல் இரு. பணக்காரியாம், ஒவ்வொரு சமயம் அபர்ணா கடிதம் எழுத அணாகூட இல்லாமல் தவித்திருக்கிறாள் என்பது உனக்குத் தெரியும், உனக்கு அவள் எவ்வளவு கொடுத்திருக்கிறாள்! அந்தக் கடிகாரம் தனக்குக் கூட வாங்கிக் கொள்ளாமல் உனக்குத்தானே கொடுத்தாள்! அதையெல்லாம் மறந்து போய் விட்டாயா!" என்று என் கணவர் நிதானமாகவே என்னை ஆசுவாசப்படுத்த முயன்றார்.

"நானா மறந்தேன்! நான் ஏன் மறக்கிறேன்! அந்தக் கடிகாரம் என் மார்பில் படும்போதெல்லாம் என்னைச் சுடுகிறதே! அவள் எதற்காக எனக்குக் கொடுத்தாள்! என் அன்புக்காகவா? ஒரு நாளும் இல்லை—தன் பெருமையை எடுத்துக் காட்ட. 'அபர்ணா அவ்வளவு பெரிய பரிசுகளை அனுயாசமாகக் கொடுத்தாளே!' என்று நாலு பேர் சொல்ல வேண்டும் என்பதற்காக. அவளுடைய அகத்தைத் திருப்தி செய்ய, என் இருதயத்தைத் தொடுவதற்கு அல்ல. அன்பு கிடையாது. அப்பா, பணமும் பகட்டும் இருக்கும் வரையில்தான் அன்பு. எந்தச் சமஸ்தானத்து மகாராணிக்கோ குழந்தை பிறந்தது என்று ஏரோப்ளேனில் போய்ப் பார்த்துவிட்டு வந்ததாக உனக்கு எழுதினாளே, அதை எனக்கு எழுதினாளா! அல்லது, என் குழந்தைகள் சௌக்கியமா என்றாவது ஒரு வரி எழுதினாளா!" என்று ஆவேசம் வந்தவள் போல் கத்தினேன் நான்.

என் அப்பா அருகில் வந்து உட்கார்ந்தார். என் முகத்தைத் தடவிக் கொடுத்தார். என் கணவர் தன் கவலை தோய்ந்த முகத்தை நான் காணப் போகிறேனே என்று 'சட்'டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

"அடி சரளா, அம்மாவுக்குக் கொஞ்சம் பால் கொண்டு வா!" என்று அவர் தன் பெண்ணை அனுப்பி விட்டார்.

நான் செய்த அட்டகாசத்தைக் கண்டு மருண்டு அம்மா ஓடி வந்தாள். "போடி, அசடே! உடலை அலட்டிக் கொள்ளாதே. அவள் ஒரு சோம்பேறி. சிரம்பினால் பாலையை மூட மாட்டாள். அந்தந்த நிமிஷம் சந்தோஷமாகக் கழிந்துவிட்டால் கடமையை மறந்து விடுவாள்" என்று சமாதானம் செய்தாள்.

"நீங்களே சொல்லுங்கள், மாமி" என்றார் என் கணவர்.

"அசடே, ரத்த பாசம் கூட மறைந்து விடாது" என்று கூறி என் கையைத் தம் கையில் எடுத்துக் கொண்டார் அவர்.

"நான் நாளைக்கே அவளுக்கு எழுதிப் போடுகிறேன்" என்றார் அப்பா.

"வேண்டாம், அப்பா. என்னை விட்டுவிடுங்கள். யாரிடத்திலும் விலை கொடுத்து அன்பை வாங்கி விட முடியாது, மிரட்டியும் பறிக்க முடியாது" என்றேன் நான் சலிப்புடன்.

அருவிக்கரையில் இனிய திருமணம்

சென்ற மேமாதம் 25-ந் தேதி பொதிகைமலைச் சாரலில் ஓர் இனிய திருமண வைபவம் நடைபெற்றது. சங்கீத கலாநிதி ஆஸ்தான வித்வான் செம்மங்குடி சீனிவாசய்யர் அவர்கள் தமது செல்வக் குமாரி சௌபாக்யவதி சாந்தாவுக்குத் திருக் குற்றாலத்தில் வைத்து விவாக மஹோற்சவம் நடத்தி வைத்தார். மணமகன் மகாதானபுரம் ஸ்ரீ ஆர். சங்கரநாராயண ஐயர் பி. ஏ. எல். டி., அவர்களின் புதல்வர் ஸ்ரீ காசி B. E.


செம்மங்குடி சீனிவாசய்யர் சங்கீதக் கச்சேரி செய்ய ஆரம்பித்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. சென்னை சங்கீத வித்வத் சபை ஆரம்பித்த வருஷத்தில் ஸ்ரீ சீனிவாசய்யரும் கச்சேரி செய்ய ஆரம்பித்தார். அந்த மாபெரும் ஸ்தாபனம் கர்நாடக சங்கீதத்துக்குச் செய்திருக்கும் அளவு சேவையை ஸ்ரீ சீனிவாசய்யரும் செய்து வந்திருக்கிறார். காவேரிக் கரையில் பிறந்து வளர்ந்த தூய கர்நாடக சங்கீதத்தில் பற்றுக் கொண்ட ஆயிரக் கணக்கான ரஸிகர்கள் செம்மங்குடியின் சங்கீத பாணியில் மோகம் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுவது மிகையாகாது. இவர்களில் பல அன்பர்கள், இந்த வருஷம் செம்மங்குடி கச்சேரி செய்ய ஆரம்பித்து இருபத்தைந்தாவது ஆண்டு என்பதை முன்னிட்டு வெள்ளி விழாக் கொண்டாட வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் செம்மங்குடி தமது சீமந்த புத்திரிக்குத் திருமணம் நடத்தப் போகிறார் என்று அறிந்தால் அவர்களுடைய உற்சாகத்துக்குக் கேட்க வேண்டுமா! இந்தத் திருமண வைபவம் ஒரு சங்கீத உற்சவமாகவே நடைபெறும் என்று எண்ணி ஆர்வத்துடன் திருமணத் தேதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

முக்கியமாக, ரஸிகர் கோஷ்டியின் சௌகரியத்தை முன்னிட்டே செம்மங்குடி சீனிவாச அய்யர் குற்றால நாதரின் சந்நிதானத்தில் தமது குமாரியின் திருமணத்தை நடத்தினார்.

கர்நாடக சங்கீத உலகில் பிரபலமடைந்து விளங்கும் சங்கீத ரத்னாகர அரியக்குடி ராமானுஜய்யங்கார், சங்கீத கலாநிதி முசிரி சுப்பிரமணிய ஐயர், சங்கீத கலாநிதி பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை, பாலக்காட்டு மணி ஐயர், ஸ்ரீ கோதண்டராமய்யர், ஆஸ்தான வித்வான் பிடில் டி. என். கிருஷ்ணன், மாயவரம் ஸ்ரீ கிருஷ்ணையர், ஸ்ரீமதி பிருந்தா, ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி, ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் முதலியவர்கள் இந்தத் திருமணத்துக்கு விஜயம் செய்து சிறப்பித்தார்கள். திருவிடைமருதூர் ஸ்ரீ வீருசாமிப் பிள்ளை தமது கோஷ்டியுடன் வந்து நாதஸ்வரம் வாசித்து மகிழ்வித்தார். திருவிதாங்கூர் முதல் பம்பாய் வரையில் உள்ள சங்கீத ரஸிகர்களும், செம்மங்குடியின் நண்பர்களும், பிரமுகர்களும் சுமார் ஐந்நூறு பேருக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள். இந்த ரஸிகர் கோஷ்டிக்குக் குற்றாலத்து முனிவரும் ரஸிக மணியுமான ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தலைமை வகித்துத் திருமண முகூர்த்தத்துக்கும் சங்கீதக் கச்சேரிகளுக்கும் விஜயம் செய்து சிறப்பளித்தார்.

கும்பகோணத்தி லிருந்து வந்திருந்த சமையல் வித்வான்கள் தங்களுடைய கைத் திறமையைப் பூரணமாய்க் காட்டிச் செம்மங்குடி குமாரியின் திருமணத்துக்கு வந்திருந்த ரஸிகர் கோஷ்டிக்கு அறுசுவை உண்டி விருந்து அளித்தார்கள்.

இவ்வளவு கோலாகலமாகவும் ஆனந்த மயமாகவும் நடந்த வைபவத்தில் திருமணம் புரிந்து கொண்ட ஸ்ரீ காசியும், ஸ்ரீமதி சாந்தாவும், சுருதியும் லயமும் போலவும் சங்கீதமும் சாஹித்தியமும் போலவும் வீணையும் நாதமும் போலவும் அருவியும் மலையும் போலவும் அரியக்குடி பாணியும் செம்மங்குடி பாணியும் போலவும் நீடூழி இல் வாழ்க்கை இனிது நடத்தி மகிழ வேண்டும் என்று குற்றாலத் துறையும் கூத்தனாகிய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.



வட்ட மேஜை

தஞ்சை பிழைக்குமா?

ஏப்ரில் 16ம் தேதி இதழில் சொல்லி இருந்தது போல் தஞ்சை ஜில்லாவில் காங்கிரஸ் தோற்றதற்குக் காரணம் கொள் முதல் அதிகாரிகள் மட்டுமல்ல; காங்கிரஸ் எதிரிகளின் பிரசாரமும் காரணம் ஆகும். மாகாண காங்கிரஸ் கமிட்டி பிரசாரத்தைச் சரிவர நடத்தவில்லை. கடந்த நான்கு ஆண்டுகளாக திராவிடக் கழகம் செய்திருக்கும் பிரசாரம் அபாரமானது. அந்தப் பொய்ப் பிரசாரத்துக்கு எதிராகக் காங்கிரஸ் பிரசாரமே செய்யவில்லை. பொதுத் தேர்தல் நெருங்கிய உடனே அவசர அவசரமாகப் பிரசாரத்தைத் தொடங்கினால் நான்கு ஆண்டுகளாக உருவேற்றி மக்கள் மனதில் பதிந்திருக்கும் விஷத்தை உடனே மாற்றுவது எங்ஙனம் சாத்தியமாகும்! பொதுத் தேர்தலுக்குப் பிறகு, தஞ்சையில், திராவிடக் கழகமும், கம்யூனிஸ்ட் கட்சியும் எட்டுப் பொதுக் கூட்டங்கள் கூட்டியிருக்கின்றன. ஆனால் காங்கிரசோ இதுவரையில் மூன்று அல்லது நான்கு பொதுக் கூட்டங்கள்தான் கூட்டி இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் தற்போது பிரசாரம்தான் தேவை. ராஜாஜியின் கீழ் அமைந்திருக்கும் மந்திரி சபையைப் பொதுவாக எல்லோரும் வரவேற்றிருக்கின்றனர். ராஜாஜி பதவி ஏற்றதும் திராவிடக் கழகமும், கம்யூனிஸ்ட் கட்சியும் முழு மூச்சுடன் பிரசார வேகத்தில் இறங்கி இருக்கின்றன. இதற்குத் தகுந்தபடி காங்கிரஸ் சார்பிலும் பிரசாரம் செய்ய வேண்டும். ராஜாஜி பதவி ஏற்றதும் நெற்களஞ்சியமாகிய தஞ்சை ஜில்லாவில் ஏற்பட்ட தீயின் சக்தி குறைந்து இப்போது ஓரளவு புகைந்துகொண்டிருக்கிறது. கோஷ்டிப் பூசல்கள் மறைந்து, காங்கிரஸ்காரர்கள் ஒற்றுமைப்பட்டு, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் டாக்டர் சுப்பராயன் அவர்களுடன் ஒத்துழைத்தால், புகைந்துகொண்டிருக்கும் அந்தத் தீயையும் ஒரேயடியாக அணைத்துவிடலாம். தஞ்சையும் பிழைத்துவிடும்.

தஞ்சாவூர்
26—5—52
டி. வி. ரமணி

★

நன்றி மறவோம்!

"இந்த மட்டும் விட்டார்களே!" என்னும் உப தலையங்கத்தைக் கண்டு சிந்தை சோர்ந்தேன். கள்ளிக்கோட்டை என். ஜி. ஓ. சங்கம் ஒரு சிறு கிளை ஸ்தாபனமேயாகும். அதன் செய்கை எதுவும் இந்த மாகாணத்தில் உள்ள அஸ்திவார உத்தியோகஸ்தர்களைக் கட்டுப்படுத்தாது. வந்தனத் தீர்மானத்தைத் தோற்கடித்த அற்பமான செய்கையைக் குறித்து வருந்துகிறேன்.

கர்நூலில் சென்ற வாரம் நடைபெற்ற என். ஜி. ஓ. மாகாண மகாநாட்டில் ராஜாஜி சர்க்கார் வழங்கியுள்ள சலுகைகளை மனங்குளிர வரவேற்று ஓர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்ளும்" பண்பு என். ஜி. ஓ. மத்திய சங்கத்துக்கும் பொறுப்புள்ள கிளைச் சங்கங்களுக்கும் உண்டு. திறமை செறிந்த அரசியல் ஞானியான ராஜாஜி அவர்களின் நல்லெண்ணம் என்றைக்கும் என். ஜி. ஓ. சங்கத்துக்குத் தேவை. அரசாங்கமும் ஊழியர்களும் தந்தையும் மக்களும் போல இணக்கமாக விளங்கவேண்டும் என்பதைச் சங்கம் மறந்துவிடாது.

சென்னை
30—5—52
பி. ஆர். எஸ். மணி

★

ஞாபகப் படுத்துகிறேன்!

ஏப்ரல் 29-ந் தேதி அன்று தங்கள் வீட்டுக்கு வந்து, மழை பெய்வதற்காக வருண ஜபம் பண்ணினால் 41 நாட்களுக்குள் மழை பெய்யும் என்று சொல்லியிருந்தேன். நான் சொல்லி இன்று 22 நாள்தான் ஆகிறது. எங்கள் வீட்டில் எங்களால் முடிந்த வரையிலும் ஜபம் பண்ணினோம். ஈஸ்வர அனுக்ரஹத்தினால் என் வாக்குப் பலித்தது.

அக்னி நட்சத்திர நாளில் மழை இதுவரையிலும் பெய்ததில்லை என்பதை ஞாபகப் படுத்துகிறேன்.

மயிலாப்பூர்
21—5—52
பரூர் சுந்தரம் ஐயர்

★

மறக்க முடியுமா?

சற்று முன்பு ரேடியோவில் இரவு 9 மணியிலிருந்து 9-15 வரை வந்த செய்தி அறிக்கையில் சென்னையில் 11 அங்குலம் மழை, அதாவது இன்று காலை 8-மணி வரையில், பெய்ததாகக் கேட்டோம். உடனே நம் முதன் மந்திரி ராஜாஜியின் ஞாபகம் எங்களுக்கு வந்தது.

ராஜாஜி வந்தார், மழை வந்தது. இதை யாராலும் மறுக்க முடியுமா!

சேலம்
21—5—52
கே. குப்புசாமி, குருசாமி,
எஸ். கிருஷ்ணமூர்த்தி

★

மழை இறக்குமதி!

"உங்கள் தலைவர் ராஜாஜியைப் பின்பற்றி நீங்களும் பஜகோவிந்தம் பாடுங்கள். உடனே மழை பெய்து விடும்!" என்று கேலி செய்து தோழர் ஜீவா பேசி முடித்த சில மணி நேரத்துக்கெல்லாம் மழை உண்மையாகவே பிடித்துக் கொண்டு விட்டது. இந்த மழையை வரவழைத்தது ராஜாஜியின் 'பஜகோவிந்த'மா, வருண பகவானின் கருணையா அல்லது சென்னை நகரின் புண்ணியமா என்ற ஆராய்ச்சி நமக்கு வேண்டாம். எதுவாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். யார் வேண்டுமானாலும் எந்தக் காரணத்தை வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும். மழை நமக்கு அவசியம். மழை பெய்தது நல்லது. அது குறித்துச் சந்தேகமில்லை.

மழை இல்லாமற் போனதற்குக் காங்கிரஸ்தான் காரணம் என்று சொல்லி வந்த நமது கம்யூனிஸ்ட் அன்பர்கள் இப்போது மழை பெய்ததற்குத்

தாங்கள் தான் காரணம் என்று சொன்னாலும் அதைப் பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏன்! மழையைத் தாங்கள் ரஷ்யாவிலிருந்து கொண்டு வந்து சென்னையில் இறக்குமதி செய்ததாகத் தோழர்கள் சொன்னாலும் சொல்வார்கள்!

சென்னை
21—5—52 ராகவன்

★

பாராட்டுகிறோம்

சென்னையில் பொழிந்த மழையை வியாஜமாகக் கொண்டு, தாங்கள் வேத மந்திரங்களின் தாயெனப் போற்றப்படும் காயத்ரீ மஹாமந்திரத்தின் உள்ளொளியை நாஸ்திகர், ஆஸ்திகர் என இருவகைப்படும் மாந்தர்களும் ஒப்புக் கொள்ளக் கூடிய ரீதியில் நிரூபணம் செய்துள்ளீர்கள். அதன் பயனாக நாஸ்திகர்கள் மனமாற்றம் அடைந்து ஆஸ்திகர்களாகவும்,—ஆஸ்திகர்கள்—வேஷம் மாத்திரம் ஆஸ்திகர்களல்லாமல், உண்மையான தர்மம், ஸத்யம், தியாகம் என்ற ஆத்மீயப் பண்புகளைப் பயின்று, உண்மை ஆஸ்திகர்களாகவும் மாறக் கூடுமென்று நம்புகிறேன்.

'பண்புடையார் பட்டுண் டுலகம்' என்று பொய்யாமொழி நாவனார் கூறுகிறார். சிறந்த பண்புடைமை பூண்டுள்ள ராஜாஜி போன்ற சான்றோர்களால் நமது பண்டையக் காலத்து வேதமறிந்த ராஜரிஷிகளின் மரபு இன்றும் காப்பாற்றப்பட்டு வருவதை நாங்கள் நன்றியுடன் பாராட்டுகிறோம்.

தென்னூர், திருச்சி
28—5—52 க. பஞ்சாபகேசன்

★

இந்திர விழா!

சென்ற இருபதாந்தேதி தமிழ் நாட்டிலே மழை பொழிந்தது என்பதை அறிந்து மகிழ்கின்றேன். நம் அரும் பெரும் தலைவர் இராஜாஜியின் வாக்கு தேவவாக்கென்பதை உலகறிய வருண பகவானே நிரூபித்து விட்டார்.

மாமூலில் போற்றின் வான் மழை பொழியும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உள்ள ஓர் உண்மை என்பதை உணர்த்தி விட்டார் ராஜாஜி. அன்னாரின் நடுவு நிலை அரசாங்க நிர்வாகம் மக்களுக்கு மழை கொடுக்கு மென்பதில் ஐயமில்லை. சிலப்பதிகார மகாநாடு, கம்பர் மகாநாடு, பாரதி விழா என்பன போன்ற விழாக்களை நடாத்துவது போல் இந்திர விழாவையும் ராஜாஜியின் தலைமையில் நடத்தித் தமிழ் நாட்டில் புது வாழ்வு மலரச் செய்ய வேணும். காவிரிப்பூம் பட்டினத்தில் சோழ மன்னர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் இந்திர விழா நடத்தி மழையை வருவித்தார்கள் நம் முன்னோர்கள்!

இலங்கை
25—5—52 பா. பஞ்சநதம்

★

எங்கள் நம்பிக்கை

இன்றைய மாணவர்களாகிய எங்களுக்கு என்னளவும் எத்துணையும் ஐயமில்லை, இந்தியாவின் எதிர்கால ஏற்றத்தைப் பற்றி! பலர் இந்தியத் தாயின் வருங்கால வாழ்வு பயங்கரமானது என்கிறார்கள். ஆனால் எங்கட்கு இம்மியளவும் நம்பிக்கை குறையவில்லை. மகோன்னதத் தாய் நாட்டைக் காணத்தான் போகிறோம்.

இந்தியாவிலேயே இணையற்ற ஓரே உயர்ந்த பதவியை வகித்தவர் ராஜாஜி. நாங்களோ கலாசாலையில் கற்கும் மாணவர்கள். நாங்கள் அவர்களை ஈரோட்டு ரயில்வே நிலையத்தில் சந்தித்து, ஈரோட்டுக்கு வந்து பேசும்படி அழைத்தோம். அவர் அளித்த பதில் எங்களை நெக்குருகச் செய்து விட்டது.

"ஈரோடு நிரம்பப் புத்திசாலிகள் நிறைந்த ஊர். காவிரி பாயும் ஊர். இதில் நான் பேசலாமா....!" என்றெல்லாம் அவர் சிரித்துக் கொண்டே எங்களுடன் பேசிக் கொண்டிருந்தார்.

மிக மிக உன்னதமான பதவியை வகித்த உத்தமர், அன்புடனும் ஆதரவுடனும் பன்னாட்கள் பழகியவர் போல் நடந்து கொண்டார். இதைக் கண்ட பிறகு நம் தாய் நாட்டின் வருங்கால ஏற்றத்தைக் குறித்த நம்பிக்கை எங்கள் உள்ளத்தில் பசுமரத்து ஆணிபோலப் பதிந்து விட்டது.

ஈரோடு ஏ. சே. இராகவேந்திரன்
27—5—52 ரா. கோபாலகிருஷ்ணன்



திண்டுக்கல் எஸ். ராதாகிருஷ்ணய்யரின் குமாரனும் மதுரை பாண்டியன் பாங்க் இன்ஸ்பெக்டர் ஆர். வி. நாத் அவர்களின் சகோதரருமான ஸ்ரீ சுவாமிநாதனுக்கும் மத்திய சர்க்கார் உணவு விவசாய இலாகா வைச் சேர்ந்த ஸ்ரீ எம். வி. ஸ்ரீனிவாசனின் சகோதரி சௌபாக்கியவதி ராஜலக்ஷ்மிக்கும் 8 - 5 - 1952ல் லால்குடியில் வெகு சிறப்பாக விவாகம் நடந்தது. அவ்வமயம் ஜனாதிபதி ராஜன் பாபுவிடமிருந்தும் நண்பர்கள், உற வினர்கள் முதலியோரிடமிருந்தும் ஏராள மான ஆசிகளும் வாழ்த்துக்களும் வந்தன.

வாழ்க மணமக்கள்!

உதவி செய்தான்



சாமா

சுந்தரம் பிள்ளை ஜாக்கிரதையாகத் தம் வீட்டு ஜன்னல் கண்ணாடியைத் தண்ணீர் விட்டுத் துடைத்துக் கொண்டிருந்தார். அந்த வழியே பூனையுடன் சென்ற வேணு, "மாமா, மாமா! அப்படித் துடைத்தால் கண்ணாடி சுத்தம் ஆகாது. அந்த வாளித் தண்ணீரை என்னிடம் கொடுங்கள்!" என்று கூறி அவரிடமிருந்து வாளியை வாங்கித் தண்ணீரைக் கண்ணாடி மேல் ஓங்கி அடித்தான். அவ்வளவுதான்! வாளி கை நழுவிக் கண்ணாடி மேல் தாக்கிக் கண்ணாடி சுக்கு நூறாக உடைந்தது. சுந்தரம் பிள்ளைக்குக் கோபம் தாங்காமல் வந்து விட்டது. ரௌத்திரத் தாண்டவம் ஆடத் தொடங்கினார். கண்ணாடியில் அடிபட்ட வாளி உருண்டு, வேணுவின் பூனை மேல் விழுந்தது. பூனை அதற்குள் அகப்பட்டு வெளி வர முடியாமல் தவித்து பட, படவென்று அங்கும் இங்கும் ஓட ஆரம்பித்தது.

இதற்குள் வேணு அவரைச் சமாதானப்படுத்த, பக்கத்தில் உள்ள கடையிலிருந்து ஒரு கண்ணாடி வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தான்.

வாளியில் அகப்பட்ட பூனை கண் தெரியாமல் மாமாவின் கால்களின் மேல் பாய்ந்தது. மாமாவும் கீழே உருண்டார்.

அங்கும் இங்குமாக வாளியுடன் ஓடிய பூனை கண்ணாடியுடன் வந்த வேணுவின் மேலும் மோதியது. வேணு கண்ணாடியை மாமாவின் தலைமேல் போட்டுக் கொண்டு 'தொபுகடீர்' என்று விழுந்தான். கண்ணாடி சுக்கு நூறாக உடைந்தது. மாமாவுக்கு அளவு கடந்த கோபம் வந்தது. "பிடி அந்தப் பயலை! நொறுக்கி விடுகிறேன்!" என்று மாமா கத்தினார்.

வேணு, "மாமா, அங்கேயே இருங்கள், அந்தப் பூனையைப் பிடித்துவிட்டு வாளியை உங்களிடம் கொடுத்து விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே பூனையைத் துரத்தினான்.






மீண்டும் பாதி விலைக்குக் குறைவான சலுகை!


15 நாட்களுக்கு மட்டும்

புகழ் வாய்ந்த ஸ்விஸ் பாக்டரியில் தயாரித்த கைக் கெடிகாரங்கள்.


ஒவ்வொன்றும் ஐந்து வருட உத்திரவாதம் கொண்டவை.




	ஒரிஜனல் விலை	தற்போது விலை
ஜெர்மன் பாக்கெட் வாட்ச்	24/-	11/-
" உயர் ரகம்	28/-	13/-
இங்கிலீஷ் அலாரம் டைம்பீஸ்	40/-	19/-

No. 525  Size 9¾'''

15 ஜுவல் ரோல்டு கோல்டு	96/-	45/-
15 ஜுவல் 20 மைக்ரோன்ஸ்	100/-	48/-

No. 526  Size 10½'''

15 ஜுவல் ரோல்டு கோல்டு	98/-	48/-
15 ஜுவல் 20 மைக்ரோன்ஸ்	110/-	52/-

No. 527  Size 5¼'''

பிராந் ஷேப்

5 ஜுவல் க்ரோம் கேஸ்	45/-	22/-
5 ஜுவல் ரோல்டு கோல்டு	52/-	25/-

இரண்டு கடிகாரங்கள் ஆர்டர் செய்பவர்களுக்கு தபாற் செலவு இலவசம்.

PIONEER WATCH Co
POST BOX NO 11428 CALCUTTA

உயருங்கள்



2" முதல் 6" வரை உயரத்தை அதிகரிக்கச்செய்யலாம்.

உயர்ந்துவளர்ந்த ஆரோக்கியசாலிகள் வாழ்க்கையின் எல்லாத் துறையிலும் வெற்றி பெறுகிறார்கள்.

ஆனால் குள்ளமான, கட்டையான நபர்கள் கவனிக்கப்படாமல் தோல்வியுறுகின்றனர்.

உயரமானவர்களுக்கே கம்பீரமான தோற்றம் இருக்கிறது. அவர்களே உயர்ந்த பதவிகளுக்கும், உத்தியோகங்களுக்கும், விளையாட்டுகளுக்கும் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். அவர்களுக்கே அநுகூலமும், உத்தியோக உயர்வும் கிடைக்கிறது.

நீங்கள் குள்ளமாயிருந்தால் (ஜலந்தர் ஸிடி - அமெரிக்கன் டிரேடிங் கம்பெனியிலிருந்து மட்டுமே கிடைக்கக்கூடிய) "ஹைட்டோ" ஒரிஜினல் பதினறே நாட்களுக்குள் உங்கள் உயரத்தை அதிகரிக்கச் செய்யும். "ஹைட்டோ" முறை மிக சுலபமானது. தீமையற்றது. கஷ்டமான தேகப் பயிற்சி இல்லை. ஆயிரக்கணக்கானவர்களுக்கு "ஹைட்டோ" வெற்றி அளித்திருக்கிறது. எங்கள் புதிய அல்ட்ரா டிராப்பிகல் ஸ்மார்ட் பாக்கிங்குக்கு இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

பெட்டி ஒன்றுக்கு
(ரெகுலர் சைஸ்) ரூ. 5-8-0

இரண்டு பெட்டிகள்
(பூரா முறை) ரூ. 9-12-0

IMPERIAL CHAMBER OF SCIENCE
P. B. 61 (D-289/13) AMRITSAR



விக்கிரமனும் குமாரியும் குழந்தைப் பருவத்திலிருந்து இணைபிரியாமல் இருந்தார்கள். விக்கிரமன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் தான் குமாரி இருந்தாள். குமாரி வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் தான் விக்கிரமன் இருந்தான். ஆனால் அவர்கள் இரண்டு பேரும் ஏதாவது ஒரு வீட்டில் தான் இருப்பார்கள். தனித்தனியாக அவர்களைப் பார்க்க முடியாது. விக்கிரமனுக்குப் பத்து வயது. குமாரிக்கு ஏழு வயது.

சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களானாலும் விக்கிரமனும் குமாரியும் எப்போதும் ராஜா–ராணி விளையாட்டுத்தான் விளையாடுவார்கள். அதற்கு ஏற்றாற் போல் அவர்களுக்கு வைக்கப்பட்ட பெயர்களும் பொருத்தமா யிருந்தன.

"விக்கிரம ராஜா!" என்று அவனை அழைத்துக் குமாரி கலகலவென்று சிரிப்பாள். பதிலுக்கு "ராஜகுமாரி!" என்று அழைத்து விக்கிரமனும் கடகடவென்று சிரிப்பான்.

ஒரு நாள் விக்கிரமனும் குமாரியும் அந்த ஊர்க் கோவில் மதில் பக்கமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். விக்கிரமன் தலையில் முண்டாசு கட்டிக் கொண்டு ராஜகுமாரனைப் போல நின்றான். குமாரி தன்னுடைய பட்டுத் தாவணியை எடுத்துப் பின் தலையை மூடிக் கொண்டு ராணி மாதிரி அவனுக்குப் பக்கத்தில் நின்றாள். விளையாட்டுச் சுவாரஸ்யத்தில் அவர்களுக்குப் பொழுது போனதே தெரியவில்லை. சூரியன் அஸ்தமனம் ஆகிவிட்டது.

அப்பொழுது திடீரென்று இரண்டு மூன்று முரடர்கள் அங்கே வந்து குமாரியைத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள்.

குமாரியினால் பலமாகக் கத்தக்கூட முடியாமல் அந்த முரடன் அவள் வாயை இறுகப் பொத்தி விட்டான். பாவம், விக்கிரமன் என்ன செய்வான்? 'ஓ' வென்று கதறி அழுதான். தன்னால் முடிந்த வரையில் தடுத்துப் பார்த்தான். அந்த முரடர்களில் ஒருவன் விக்கிரமன் கன்னத்தில் பளீர் என்று ஒரு அறை கொடுத்தான். அவ்வளவுதான். விக்கிரமன் நினைவு தப்பிக் கீழே சாய்ந்தான்.

வெகு நேரம் கழித்து விக்கிரமன் கண் விழித்துப் பார்த்த போது, தன் வீட்டில் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான். அவன் அப்பாவும் அம்மாவும் மிகவும் கவலையோடு கட்டிலுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். குமாரியின் தகப்பனாரும் தாயாரும் அங்கே உட்கார்ந்துகொண்டிருந்தார்கள்.

"விக்கிரமா, உன்னோடு விளையாடிக் கொண்டிருந்த குமாரி எங்கே? அவளுடைய அப்பாவும் அம்மாவும் அவளைக் காணாமல் மிகவும் வருந்துகிறார்கள்!" என்று அவன் தகப்பனார் சொன்னார்.

"அப்பா, நானும் குமாரியும் வழக்கம் போல் கோவில் மதில் சுவருக்குப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது இரண்டு மூன்று முரட்டு ஆட்கள் ஓடி வந்து குமாரியைத் தூக்கிக் கொண்டு போனார்கள். நான் அவர்களைத் தடுத்து நிறுத்த என்னால் ஆனமட்டும் முயன்றேன். அப்பொழுது அவர்களில் ஒருவன் என் கன்னத்தில் பளீரென்று அறைந்தான். நான் பொறி கலங்கி, அடி விழுந்து கீழே சாய்ந்து விட்டேன். அப்புறம் கண் திறந்து பார்த்த போது நான் நம் வீட்டில் இருக்கிறேன்!" என்றான்.

உடனே எல்லோருக்கும் கவலை அதிகமாய்ப் போய் விட்டது. குமாரியைத் தேடுவதற்கு வேண்டிய முயற்சிகளை விக்கிரமனின் தகப்பனாரே மிகவும் சிரத்தையுடன் எடுத்துக் கொண்டார். ஆனால் பலன் இல்லை.

நாட்கள், வாரங்கள், மாதங்கள் எல்லாம் கடகட வென்று சென்றன. பிறகு வருஷமும் சென்றது. குமாரியைப் பற்றிய ஒரு தகவலும் தெரியவில்லை.

விக்கிரமன் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படித்துப் பெரியவனான பின்பும், குமாரியைப் பற்றிய நினைவு அவன் மனசை விட்டுக் கொஞ்சமும் அகலவில்லை. படிப்பு முடிந்ததும் அவன் குமாரியைத் தேடுவதையே தன்

முக்கியமான வேலையாகக் கொண்டான்.

தேச தேசமெல்லாம் சுற்றித் திரிந்த விக்கிரமன், விஜயபுரம் என்னும் அழகான நகரத்துக்கு வந்து சேர்ந்தான். அங்கே அரண்மனை நந்தவனத்துக்குள் பின்பக்கமாகப்புகுந்து அங்கிருந்த சலவைக் கல் மேடையில் உட்கார்ந்தான்.

அரண்மனை நந்தவனத்தில் பலவிதமான பறவைகள் இருந்தன. அவைகள் அற்புதமான கீதம் பாடின. அப்பொழுது ஒரு அழகான மயில் சோர்வோடு சாய்ந்து சாய்ந்து நடந்து அந்தப் பக்கமாக வந்தது. விக்கிரமன் அந்த மயிலைக் கவனமாய்ப் பார்த்தான். அந்தச் சமயம், மயில் மிகவும் சோகக் குரலில் ஒரு காலைத் தூக்கிக்கொண்டு கத்தியது. பறவைகளின் பாஷையை அறிந்த விக்கிரமன் அதைக் குறிப்பாய்க் கேட்டான். அதன் பொருள் அவனுக்கு நன்றாய் விளங்கியது. உடனே அவன் சலவைக் கல் மேடையி



இருக்கச் சொ[illegible]கள். இது ராணியின் உத்தரவு'' என்றான்.

விக்கிரமனுக்குப் பயமாகப் போய்விட்டது. தான் செய்த நல்ல காரியத்தைப் புரிந்து கொள்ளாமல் தன்னைச் சிறையில் வைத்து விடுவார்களோ என்று பயந்தான். ஆனால் சற்று நேரத்துக்கெல்லாம் அங்கே வந்து சேர்ந்தார்கள் ராணியும் இளவரசியும்.

''ஏன் ஐயா, மயிலின் காலை எப்படிச் சொஸ்தப்படுத்தினீர்? அதன் காலில் தொந்தரவு இருப்பதை எப்படிக் கண்டுபிடித்தீர்? அரண்மனை வைத்தியனாலேயே கண்டு பிடிக்க முடியாததை நீர் எப்படிக் கண்டு பிடித்தீர்?'' என்று ராணி மிக்க ஆவலுடன் கேட்டான்.

''என் குழந்தைப் பருவம் முதல் என்னுடன் விளையாடிப் பழகிய குமாரியைத் தேடிக் கொண்டு காடுமேடெல்லாம் சுற்றினேன். அவள் கிடைக்கவில்லை. ஆனால் பறவை, மிருகம் இவற்றின் பாஷைகளை நன்





பியர்ஸ் டால்கம் பௌடர் உபயோகியுங்கள்
முகத்திற்கு — இளம் சிவப்பு நிறம், மிருதுவானது, மிக நேர்த்தியான தூள்
உடலுக்கு — வியர்வையை உறிஞ்சுகிறது, ஆறுதலளிக்கிறது, புத்துணர்ச்சியைத்தருகிறது
குழந்தைக்கு — போரிக் பௌடர் சேர்ந்தது. சருமத்தில் புண், எரிச்சல் ஏற்படாமல் தடுக்கிறது
பியர்ஸ்
டால்கம்
பௌடர்
ஒன்றில் 3 பௌடர்கள் சேர்ந்தது
மகிழ்ச்சிதரும் நறுமணம் கொண்டது
பியர்ஸ்
அழகுதரும்
அசல் கிளிசரின் சேர்ந்த சோப்
PEARS
TALCUM
POWDER

அருவிக்கரை ஆசிரமம்

சுதர்சன்

மொழிபெயர்ப்பு ரா.வீ



6. எட்டு எண்பதாயிற்று!

ஸ்டெலா சென்றதும் நான் என் இருப்பிடத்துக்கு வந்து என் அறையிலிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் சிகரெட்டுக் குடிக்கலானேன். நான் குடித்துக் கொண்டிருந்த சிகரெட்டுப் புகையின் வழியே ஸ்டெலாவின் உருவம் தோன்றி என் உள்ளத்திலே புகுந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் அது, மற்ற சிந்தனைகளையெல்லாம் என் உள்ளத்திலிருந்து அகற்றிவிட்டு என் உள்ளம் முழுவதையும் ஆட்கொண்டு விட்டது. அன்று நியாய ஸ்தலத்தில் என் தரப்பில் சாட்சியம் சொல்லாமல், அவள் என்னை அலட்சியம் செய்தது அவ்வளவு நாட்களும் என் உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்தது. என் உயிருக்குயிராக நேசித்த இவள் இப்படிச் சமயத்தில் காலை வாரிவிட்டு விட்டாளே என்று இவ்வளவு நாட்களும் எண்ணிப் பொருமிக் கொண்டிருந்தேன். அவளுடைய நினைவையே அடியோடு மனத்திலிருந்து அகற்றிவிட வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருந்தேன். அன்று நியாயஸ்தலத்தில் ஏற்பட்ட அநுபவமும், இந்தியர்கள் என்னை ஓரேயடியாகப் புகழ்ந்து உயர்வானில் உட்கார வைத்து விட்ட நிகழ்ச்சியும் அவளை மறக்க ஓரளவு எனக்கு உதவி புரிந்தன.

அவ்வளவு நாட்களும் அவளுடைய நினைவே இல்லாமல் இருந்த நான் அன்று ஹோட்டல் வாசலில் அவளைக் கண்டதும் மனம் இளகி எதற்குத்தான் செக் எழுதிக் கொடுத்தேனோ, தெரியவில்லை!

என் உள்ளத்திலே புகுந்த ஸ்டெலா பழைய இன்ப நினைவுகளையெல்லாம் கிளறி விட்டு வேடிக்கை பார்க்கத் தொடங்கி விட்டாள். அந்த இன்ப நினைவுகளிலே இருதயத்தைப் பறி கொடுத்த நான், 'என்ன இருந்தாலும் அவள் பெண். ஏதோ தெரியாமல் அப்படிச் செய்து விட்டாள். அதற்காக எல்லாம் தெரிந்த நாம் அவள் மனத்தை இப்படிப் புண்படுத்தலாமா? நாம் செய்ததுதான் கல்நெஞ்சத்தனமான காரியம்!' என்று என்னை நானே குறை கூறிக் கொள்ளத் தொடங்கினேன்.

அதற்குள்ளாக துயரமே உருவான அவளுடைய உருவம் என் மனக் கண் முன் தோன்றியது. 'பாவம் அவளுக்கு என்ன துயரமோ? தன் துயரத்தைச் சொல்லக்கூட அல்லவா அவளுக்கு நா எழவில்லை? அவளுடைய துயரத்தை அறிந்து தீர்த்து வைக்க வேண்டியது நம் கடமை அல்லவா? அப்படிச் செய்யாமல் நாம் அசிரத்தையாக வெறும் செக் எழுதிக் கொடுத்து வந்தது நியாயமாகுமா?' என்று எண்ணமிட்டேன்.

இம் மாதிரிச் சிந்தனையில் ஏறக்குறைய ஒரு மணி நேரம் சென்றிருக்கலாம். என் அறையின் கதவு திறந்தது. பாங்கிச் சிப்பந்திகளில் ஒருவன் ஸ்டெலாவையும் கூட அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான். அவன் என் அருகில் வந்ததும் ஸ்டெலாவுக்கு நான் கொடுத்திருந்த செக்கை என் கையில் கொடுத்து, "இந்தச் செக் சரியானதுதானா? பார்த்துச் சொல்லுங்கள்!" என்றான்.

என் இருதயம் 'படபட' வென்று அடித்துக்கொண்டது. செக்கில் எட்டுக்குப் பதி



லாக எண்பது என்று திருத்தி யிருந்தது. ஆங்கில எண்ணான எட்டுக்குப் பின்னால் ஒரு பூஜ்யத்தைப் போட்டால் எண்பது ஆகி விடுகிறது. ஆகவே, எண்ணில் உள்ள எட்டை எண்பதாக்குவது ஒரு பிரமாதம் அல்ல. அதே போல எழுத்தில் எழுதி யிருக்கும் பகுதியிலும் எட்டு என்னும் பொருள் தரும் எய்ட்டுக்குப் பின்னால் ஒய் என்னும் ஒரே எழுத்தைச் சேர்ப்பதற்கு எத்தனை நேரம் பிடிக்கப் போகிறது? ஆகவே, நான் எட்டு என்று எழுதியது எண்பதாக ஆக்கப்பட்டதில் அதிக வியப்பில்லை அல்லவா?

சகோதரா! நான் அப்பொழுது நினைத்திருந்தால் ஸ்டெலாவுக்குக் கைவிலங்கு கால் விலங்கு பூட்டிச் சிறைக்கு அனுப்பி யிருந்திருக்கலாம். அவள் செய்த அந்தக் குற்றம் சாதாரணமானதல்லவே! அவள் அதற்குரிய தண்டனை அனுபவிப்பதிலிருந்து ஒருநாளும் தப்ப முடியாது. அவள் என்னை அலட்சியமாக நடத்திய நிகழ்ச்சிகள் எல்லாம் என் கண்களெதிரே நிழல் படம் போல வந்தன. உள்ளத்திலே பேயுணர்ச்சி விழித்தெழுந்து பழி வாங்குமாறு என்னைத் தூண்டலாயிற்று. அவளைப் பிடித்துக் கொடுத்து விட்டால் என்ன என்று கூட ஒரு கணம் எண்ணினேன்.

ஆனால் அதை அடுத்தாற்போலவே, 'என்ன இருந்தாலும் இவள் பெண். பெண் என்றால் பேயும் இரங்கும்' என்று சொல்வார்கள். பெண்களின் உள்ளம் பலஹீனமானது; பூப் போன்றது. அவர்களுடைய எண்ணங்களும் கூடச் சிறுமையானவை. எந்தக் காரணத்தினால் இவள் எனக்கு நம்பிக்கைத் துரோகம் இழைக்கத் துணிந்தாளோ, தெரியவில்லை. இவள் மிகவும் துயரத்தில் சிக்கியவளாகத்தான் தோன்றுகிறாள். இவள் முகம் கண்ணீரினால் நனைந்திருக்கிறதைப் பார்த்தால் இவளுக்கு ஏதோ கேடு நேர்ந்திருக்க வேண்டும் என்றுதான் தோன்றுகிறது. இல்லாவிட்டால் இப்படித் துயரமே உருவாக இவள் காட்சி அளிக்கக் காரணம் என்ன? அது மட்டும் அல்ல; இவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்ய இவளுக்குத் துணிவுதான் எங்கிருந்து ஏற்பட்டிருக்க முடியும்? ஏதோ ஆபத்தில் சிக்கிப் புத்தி தடுமாறித்தான் இவள் இச் செய்கையில் ஈடுபட்டிருக்கிறாள். செத்த பாம்பைத் திரும்பத் திரும்ப அடிப்பதில் ஆண்மை ஏது? ஆண்மையுள்ளவனுக்கு அது அழகுதான் தருமா?' என்ற எண்ணம் எழுந்தது. உடனே நான் மறுபடியும் ஒரு முறை அவள் உள்ளத்தைப் படித்துப் புரிந்து கொள்ளும் நோக்கத்துடன் கூர்ந்து கவனித்தேன். அவள் மருந்து கிட்டிக் கப்பட்ட துப்பாக்கிக் கெதிரே நிற்கும் குதிரையைப் போலப் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தாள். அவள் வாய் திறந்து ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவளுடைய கண்கள் பலவித பாவங்களைப் பிரகாசமான கண்ணாடியைப் போல் பிரதிபலித்தன. 'நான் உன்னை ஏமாற்றத் துணிந்தது என்னவோ உண்மைதான். ஆயினும் ஒருகாலத்தில் நான் உன்னுடையவளாக இல்லையா? அதற்காகவாவது என் மானத்தைக் காப்பாற்ற மாட்டாயா?' என்று காலில் விழுந்து என்னைக் கெஞ்சிக் கேட்பது போலிருந்தன.

அந்த விழிகளே என் உள்ளத்தில் மாறுபட்டு எழுந்து கொண்டிருந்த எண்ணங்களையெல்லாம் தவிடுபொடியாக்கின. பழி வாங்கும் எண்ணம் மிகவும் கீழ்த்தரமானதாகப் பட்டது. ஆகவே, அதைக் கைவிட்டேன்.



நான் செக்கிலிருந்து கண்களை அகற்றிப் பாங்கிச் சிப்பந்தியைப் பார்த்து, "ஏன்? சரியாகத்தானே இருக்கிறது!" என்றேன்.

"ஆனால்..." என்று அவன் இழுத்தான்.

"நீங்கள் எடுத்துக் கொண்ட முன் ஜாக்கிரதை மெச்சத் தக்கதுதான். நான் முதலில் எட்டுப்பவுன் என்று எழுதினேன். அப்புறம் அதையே எண்பதாக்கி விட்டேன். சரி, இதோ திருத்தத்துக்கு இங்கே கையெழுத்திட்டுத் தந்து விடுகிறேன். அப்பொழுதே இணைவாக நான் கையெழுத்திட்டுத் தந்திருந்தால், இந்த அம்மாள் இவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளாக நேர்ந்திராது. இதற்காக நான் மனம் வருந்துகிறேன்!" என்றேன்.

இதைச் சொன்னதும் அந்தச் செக்கில் எங்கெங்கெல்லாம் எழுத்துக்கள் அதிகரிக்கப் பட்டிருந்தனவோ, அங்கெங் கெல்லாம் கையெழுத்திட்டுச் செக்கைச் சிப்பந்தியின் கையில் திருப்பிக் கொடுத்தனுப்பினேன்.

7. இந்திய நண்பர்

மறு நாள் என்னைப் பார்க்க இந்தியக் கனவான் ஒருவர் வந்திருந்தார். அவருடன் அவருடைய மனைவியும் வந்திருந்தாள். அன்று நடந்த தியேட்டர்ச் சம்பவம் எனக்கு எத்தனையோ இந்திய நண்பர்களை உண்டாக்கியிருந்தது. அவர்களில் ஒருவராகத்தான் அவரும் எனக்கு அறிமுகமானார். ஆனால் அவருடைய அறிமுகத்துக்கும் மற்றவர்களுடைய அறிமுகத்துக்கும் வித்தியாசம் என்ன என்றால் அவருடைய அந்த அறிமுகம் நாளடைவில் சிறுகச் சிறுக எங்களிடையே வலுவுற்று நெருக்கமான தொடர்பாக உருப்பெற்றுவிட்டது. அந்த நண்பரின் பெயர் ரூப்சந்த். அவருடைய மனைவியின் பெயர் தேவகி. இருவரும் பெருந்தன்மை வாய்ந்தவர்கள்; பிறருடன் நெருங்கிப் பழகும் பெருங் குணமும் படைத்தவர்கள். அவர்களுடைய அறிமுகம் கிட்டியது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது.

தேவகி நல்ல அழகி. அவள் இந்தியப் பண்புக்கு உகந்தவாறு புடவை உடுத்தியிருந்தாள். அவளுடைய அந்த உடை அவளுடைய உடல் அழகுக்கு ஒரு தனி அழகை அளித்தது. வெண்கல விளக்குக்கு மெருகு





டெலிபோன் ஆப்பரேட்டர் (போனில் பேசிக் கொண்டிருப்பவரைக் குறுக்கிட்டு):—என்ன ஸார், இது? இருபது நிமிஷங்களுக்குமேல் ஆகிறது, நீங்கள் ரிஸீவரைக் கையில் எடுத்து! ஆனால் 'சரி, சரி' என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே ஒழிய ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே!

பேசுபவர்:—ஆமாம், ஸார்! நான் என் மனைவியுடன் பேசிக் கொண்டிருக்கிறேன்!

ஏற்றினாற்போல. அவளுடைய உடலில் அநாவசியமான அதிகமான ஆபரணங்கள் ஏதும் ஏறவில்லை. முகத்தில் பௌடர் அப்பியிருக்கவில்லை. ஆயினும் அவளைப் பார்த்த மாத்திரத்திலே மனத்தில் தானாகவே ஒரு பெரு மதிப்பு ஏற்பட்டது. அவள் பார்ப்பதற்கு இந்த மண்ணுலகத்தவளாகவே எனக்குத் தோன்றவில்லை. அவளுடைய கண்களிலே கபடமின்மை தாண்டவமாடியது; முகத்திலே சூது-வாது அற்ற எளிமை தாண்டவமாடியது. அவள் வாய் திறந்து பேசும் பொழுது, அவள் வாயிலிருந்து மென் மலர்கள் உதிர்வது போலவோ, முத்துக்கள் உதிர்வது போலவோதான் தோன்றியது.

நான் மேல் நாட்டுப் பெண்மணிகள் எத்தனையோ பேருடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவர்கள் முகத்துக்குப் பவுடர் பூசி, உதட்டுக்குச் சிவப்புச் சாயம் அடித்துச் செயற்கைச் சாதனங்களைக் கொண்டு தங்களை அலங்கரித்துக் கொள்வது போலவே பேச்சிலும் செயற்கையைக் கையாண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசும் ஒவ்வொரு பேச்சும் எனக்கு உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதாகத்தான் பட்டது. ஆனால் தேவகியின் பேச்சில் அம்மாதிரி பாவமே தொனிக்கவில்லை. ஆளை மயக்கித் தங்கள் கையில் போட்டுக் கொள்வதற்காக மேல் நாட்டு நாகரிக நங்கைகள் செய்வது போல், அவள் வார்த்தைக்கு வார்த்தை தலையை அசைக்கவோ, கழுத்தைச் சுளுக்கவோ, புருவத்தை நெளிக்கவோ, கண்களை அடிக்கவோ செய்யவில்லை. ஏன்? இதுபோன்ற எந்த விதமான கவர்ச்சிச் சாதனத்தையுமே கையாளவில்லை. ஆயினும் அவளுடைய ஒவ்வொரு சொல்லிலும், சொல்லின் பாவத்திலும், ஒரு கவர்ச்சி, ஒரு மந்திர சக்தி இருந்தது. ஆனால் அந்தக் கவர்ச்சியிலோ மந்திர சக்தியிலோ மனத்தை மசப்பி உள்ளத்திலே ஒரு புயலை எழுப்பி விடும் உபத்திரவப் பான்மை சிறிதும் தலைகாட்டவில்லை. அழகின் கவர்ச்சியைக் காட்டிலும் மேலானதொரு கவர்ச்சி அவளிடம் இருந்தது. அது அவளிடம் நம்மையறியாமலே அன்பையும் அபார மதிப்பையும் உண்டு பண்ணக் கூடிய வலிமை பெற்றிருந்தது. அந்தக் கவர்ச்சி எதாக இருக்கலாம் என்று எண்ணிப் பார்த்தேன். கடைசியில் அது, தன்மானம், கற்பு இவற்றினால் ஏற்படும் கவர்ச்சியாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.

எனக்கு அன்றுதான் முதல் முறையாக, இந்திய அழகுக்கெதிரே மேல் நாட்டு அழகு மங்கலானது, சிறக்காதது, தாழ்வானது என்ற எண்ணம் உறுதிப்பட்டது. ஆனால் அதையெல்லாம் விட மேலானதாக அழகுக்கெல்லாம் அழகு செய்வதாகத் தோன்றிய பொருள் என்ன தெரியுமா? அவளிடம் குமிழியிட்டுக் கொப்புளித்துக் கொண்டிருந்த நாணம்தான். என் கண்கள் அவள் காலடிகளில் கவிழ்ந்தனவே ஒழிய நேருக்கு நேர் நிமிர்ந்து அவள் முகத்தை நோக்கும் துணிவைப் பெறவில்லை. அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற் பெருங் குணங்கள் பெண்களிடம் இருக்க வேண்டும் என்பது பற்றி இந்தியக் கதைகளிலே நான் படித்திருக்கிறேன். இந்தியக் கலாசாரத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இராமாயணக் கதையிலே, கற்புக்கரசி சீதையின் கால் நகங்களைத் தவிர நான் வேறு எதையும் கண்டதில்லை என்று லட்சுமணன் சொல்வதாக ஒரு கட்டம் வருகிறது என்பதையும் நான் அறிவேன். ஆனால் அப்பொழுது அதையெல்லாம் நான் பொய்யாக, கனவிலும் நடக்கக் கூடாத கட்டுக் கதையாகத் தான் எண்ணி வந்தேன். ஆனால் அந்த நிகழ்ச்சி அன்று என் விஷயத்திலேயே உண்மையாகி விடவே, அது உண்மையாகத் தான் இருந்திருக்க வேண்டும் என்று உணர்ந்தேன்.

அன்று அவர்கள் சில மணி நேரம் என்னுடன் இருந்தார்கள். எத்தனையோ விஷயங்களைப் பற்றி எங்களிடையே லோகாபிராமமாகப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது தான் எனக்குத் தேவகி எவ்வளவு கெட்டிக்காரி, மேதாவி என்னும் விஷயம் விளங்கியது. நான் எந்த விஷயத்தை எடுத்தாலும், என்னை மடக்கிப் பேச முடியாமல் அடித்து விடுவாள். நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சுடச்சுடப் பதில் அளித்து என் வாயை அடக்கி விடுவாள். அவள் கேட்கும் கேள்விகளுக்கு நான் பதில் சொல்லத்

தெரியாமல் விழிப்பேன்; திக்கு முக்காடித் திகைத்துத் திணறிப் போவேன்.

'இந்தியப் பெண்கள் சுத்தப் பட்டிக் காடுகள், படிப்பு வாசனை யற்றவர்கள், பண்பாடு தெரியாதவர்கள், பழகத் தெரியாதவர்கள் என்றெல்லாம் சொல்லிக் கொள்ளுகிறார்களே, இவர்களைப் பற்றித்தானா? படிப்பு வாசனை குறைவாயிருக்கும் பொழுதே இவர்கள் இவ்வளவு அறிவுள்ளவர்களாயிருக்கிறார்களென்றால், படித்து விட்டால் இன்னும் எவ்வளவு நுண்ணறிவு பெற்றவர்களா யிருப்பார்கள்? இவர்களுக்கு நல்ல முறையில் கல்வியறிவு புகட்டப்படவில்லை யென்றால், நாகரிகமுள்ளவர்களாக நடந்து கொள்ளச் சொல்லிக் கொடுக்கவில்லை என்றால் அது அவர்களுடைய குற்றமாகுமா?' என்று சிந்தனையில் ஆழ்ந்தேன்.

அவர்கள் விடை பெற்றுக் கொண்டு புறப்படத் தொடங்கவே, எனக்கு வருத்தம் உண்டாயிற்று. என்னை யாரும் மந்திரம் மாயம் செய்து மயக்கிவிடவில்லை; மருந்து கொடுத்து வசியப் படுத்தி விடவில்லை. ஆயினும் என் இருதயம் ஏன்தான் அப்படி என் வசம் இழந்து விட்டதோ, தெரியவில்லை! நான் குனிந்து தரையைப் பார்த்த வண்ணமே, தயங்கியவாறு, "நீங்கள் அடிக்கடி என் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருப்பீர்கள் என்று நான் நம்பலாம் அல்லவா?" என்று குரலில் கனிவு ததும்பக் கேட்டேன்.

ரூப்சந்த் இலேசாகச் சிரித்தார். இதற்கு அவர் மறுமொழி ஒன்றும் கூறவில்லை. ஆனால் தேவகி மெதுவான குரலில், "கட்டாயம்! உங்களை இந்தியராக்குவதற்காகவாவது நாங்கள் வந்து போவோம்!" என்றாள்.

அப்பப்பா! அந்தச் சொற்களில் தான் என்ன கேலி! என்ன பரிகாசம்! என்ன குத்தல்! அது என் உள்ளத்தைச் சுட்டது; உடலைத் தகித்தது. என் மனக் கடலிலே ஒரு புயலையே எழுப்பி விட்டது. 'இன்று வரை இந்தியர்களை வெறுத்து வந்தோமே! இது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்?' என்று என்னை நானே நொந்து கொண்டேன். 'இந்தியர்கள் இவ்வளவு பழகத் தெரிந்தவர்களாகவும், சதா சிரித்த முகம் படைத்தவர்களாகவும் பண்பட்டவர்களாகவும் இருப்பார்கள் என்பது முன்னமேயே தெரிந்திருந்தால் நான் ஏன் வெட்கப்பட்டிருக்கப் போகிறேன்? அல்லது இந்தியர்களை ஏளனமாகத் தான் நினைத்திருக்கப் போகிறேன்?' என்று பிறகு என்னை நானே தேற்றிக் கொண்டேன்.

அவர்களுடன் ஏற்பட்ட அந்த இரண்டொரு மணி நேரத்து அறிமுகம் என் மனத்திலே ஒரு பெரிய மாறுதலை உண்டு பண்ணிச் சென்றது. ஆகவே, இனி ஸ்கூலாவை அறவே மறந்து விடுவது என்றும் ரூபசந்த்-தேவகி இவர்களுடன் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்று விடுவது என்றும் நான் மனத்தில் முடிவு கட்டிக்கொண்டேன். (தொடரும்)



"இரண்டு வருடங்களாக எனது முகத்தில் பருக்களும், தடிப்புகளும் நிறைந்து இருந்தன. கைக்குக் கிடைத்த எல்லாவிதமான தைலங்களையும், க்ரீம்களும், களிப்புகளும் உபயோகித்தும் யாதொரு பலனும் சிறிதும் காணாததனால் பெரிதும் கவலையுற்றேன். கடைசியில் அதிர்ஷ்டவசமாக "க்ருஷென்" உபயோகிக்கத்தீர்மானித்தேன். ஆச்சரியம்! ஆறு வாரங்களில் எனது முகம் யாதொரு களங்கமுமின்றி ஆனதோடு இதுவரை ஒருவிதமான பருவோ, புள்ளிகளோ வந்தில்லை. தினந்தோறும் "க்ருஷென்" உட்கொள்ளும் நான் அது இல்லாமல் ஒரு நாளும் இருக்க மாட்டேன்." —Mrs. J.A.


முகத்திலுள்ள பருக்களையோ அவலட்சணமான புள்ளிகளையோ மறைக்க முயலாதீர்கள். இரத்த அசுத்தியே இவற்றிற்குக் காரணமாதலால் உட்புற சிகிச்சையே இவற்றின் மூல காரணத்தைத் தாக்கும். "க்ருஷென்" இரத்தத்திலுள்ள அசுத்தங்களை வெளியேற்றட்டும்; உடனே சருமத்தின்மேலுள்ள சகலவித களங்கங்களும் அகன்றுவிடும். தினந்தோறும் உட்கொள்ளும் ஒரு சிறு அளவு "க்ருஷென்" உங்களது இரத்தத்தைச் சுத்தமாய் வைத்திருப்பதோடு சருமத்தை ஆரோக்கியமாயும், தெளிவாயும் வைத்திருக்கிறது.

"க்ருஷென்" உங்கள் ஆரோக்யத்திற்கும் ஆனந்தத்திற்கும் உற்ற உதவி

மேனகையின் தோல்வி!

ஹிந்திக் கதை: விஷ்ணு பிரபாகர்

மொழிபெயர்ப்பு: வாஞ்சி



ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வந்த வீணுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. யாரைக் கண்டாலும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

வீட்டுக்குத் திரும்பி வந்ததும் வீணு வெகு வேகமாய் நேராக மாடி அறைக்குச் சென்றாள். அவளைத் தொடர்ந்து அவளுடைய இரண்டு குழந்தைகளும் சென்றன.

அறைக்குள் எட்டிப் பார்த்தாள். அங்கு ஹேமேந்திரா வழக்கம் போல் கட்டிலில் படுத்து வாசித்துக் கொண்டிருந்தான். வீணு ஏதோ முணுமுணுத்துக் கொண்டே விடு விடு என்று கீழே இறங்கி வந்து விட்டாள்.

குழந்தைகள் மாத்திரம் அறைக்குள் நுழைந்தனர். கட்டிலுக்கு அருகில் போய் நின்றனர்.

ஹேமேந்திரா திரும்பிக் குழந்தைகளைப் புன்முறுவலுடன் பார்த்தான்.

''அப்பா, அம்மாவின் கைவிரலை எடுத்து விடும்படி நேரலாம் என்று டாக்டர் சொல்லுகிறார்'' என்றாள் ஸுஜாடை.

''அப்படியா! சரி, நீங்கள் என்னைத் தொந்தரவு செய்யாமல் கீழே போய் விளையாடிக் கொண்டிருங்கள்'' என்றான் ஹேமேந்திரா.

யாதொரு பரபரப்பும் இல்லாமல் ஹேமேந்திரா அவ்வாறு கூறியதைக் கேட்ட ஸுஜாடைக்குக் கோபம் உண்டாயிற்று.

''அப்பா, நான் சொன்னது உன் காதில் விழவில்லையா! அம்மாவின் கைப் புண்ணுக்கு மருந்து போட்ட டாக்டர், ஜாக்கிரதையாக இராவிட்டால் விரலை வெட்டி விடும்படி நேரும் என்று சொல்லுகிறார் அப்பா'' என்று ஸுஜாடை கூறி விட்டு அழத் தொடங்கினாள்.

''சரி, நான் அதைக் கவனிக்கிறேன். நீங்கள் கீழே போய் விளையாடுங்கள். நான் வாசித்துக் கொண்டிருக்கிறேன் அல்லவா! என்னைத் தொந்தரவு செய்யக் கூடாது'' என்றான் ஹேமேந்திரா.

இதைக் கேட்டதும் ஸுஜாடை திரும்பிச் செல்ல யத்தனித்தாள். உடனே அவள் தம்பி அதுல், ''ஸுஜாடை, கீழே போகாதே. அப்பாவுக்குத் தான் வாசிக்கத் தெரியுமோ! நாமும் இங்கேயே வாசித்துக் கொண்டிருப்போம்'' என்றான்.

உடனே இரண்டு குழந்தைகளும் அங்கு கிடந்த புத்தகங்களில் ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டு ஹேமேந்திராவைப் போல் படுத்து வாசிக்கத் தொடங்கினர்.

அவர்களுடைய குறும்புத் தனத்தைக் கவனித்த ஹேமேந்திரா தனக்குள் சிரித்துக் கொண்டே தன் கையிலிருந்த புத்தகத்தை மேற் கொண்டு வாசிக்கலானான்.

சில நிமிஷங்கள் சென்றன. வீணு ஒரு டம்ளர் பாலை எடுத்துக் கொண்டு மாடிக்கு வந்தாள். அவள் சோகமே உருவெடுத்தவள் போல அறைக்குள் வந்து, ''இந்தப் பாலைச் சாப்பிடுங்கள்'' என்று கூறினாள்.

ஹேமேந்திரா புன்முறுவலுடன் அவளைப் பார்த்தான். அவனுடைய சாந்தமும் புன்முறுவலும் வீணுவின் கோபத்துக்குத் தூபமாக அமைந்தன.

உடனே அவள் ''உங்களுக்குக் கீழே பால் வைத்திருக்கிறேன். ஓடிப் போய்ச் சாப்பிடுங்கள்'' என்று கூறியதும் குழந்தைகள் கையிலிருந்த புத்தகங்களை எறிந்துவிட்டுக் கீழே ஓடிவிட்டார்கள்.

''இன்று வீட்டில் சமைப்பதற்கு எதுவும் இல்லை'' என்றாள் வீணு உணர்ச்சி எதுவும் இல்லாமல்.

''ஓஹோ'' என்றான் ஹேமேந்திரா.

'''ஓஹோ' என்றால் சாப்பாடு வந்து விடுமா!'' என்று கேட்டாள் வீணு. அவளுடைய வார்த்தைகளில் கோபம் ததும்பியது.

ஹேமேந்திரா பால் டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டான். ''வீணு, நீ பால் சாப்பிட்டு விட்டாயோ!'' என்று கேட்டான்.

''வீட்டில் சமைப்பதற்கு ஒன்றும் இல்லை'' என்று உரக்கக் கத்தினாள் வீணு மறுபடியும்.

ஹேமேந்திரா யாதொரு பதட்டமும் இல்லாமல் பாலைச் சாப்பிட ஆரம்பித்தான்.

வீணுவின் கோபம் எல்லையை அடைந்தது. ''இப்படியே வீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தால் சாப்பாடு வாயில் வந்து விழுமா! ஏதாவது உத்தியோகத்துக்கு வழி தேடுங்களேன்! இவ்விதம் எத்தனை நாள் காலம் தள்ள முடியும்! வேலை எதுவும் செய்யாமல் வீட்டில் சோம்பேறியாக உட்கார்ந்திருப்பவர் எதற்காகக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்! பேசாமல் காட்டுக்குச் சென்று தவம் செய்யலாமே! என்னால் இனி மேல் பொறுக்க முடியாது. நான் உங்கள் வீட்டை விட்டு எங்கேயாவது ஓடிவிடப் போகிறேன்.''

வீணு இவ்வாறு தன் கணவன் ஹேமேந்திரா மீது வந்த கோபத்தை யெல்லாம் ஒரே மூச்சில் கொட்டித் தீர்த்து விட்டாள்.

"என் வீடா! என் வீடு என்று யார் சொன்னார்கள்!'' என்றான் ஹேமேந்திரா.

''இதுபோன்ற வறண்ட பேச்சைக் கேட்டுக் கேட்டு என் காது புளித்து விட்டது...இன்று உங்களுக்கு ரொட்டி வேண்டுமென்றால், கடைக்குப் போய் மாவு வாங்கிக்கொண்டு வாருங்கள். இல்லாவிட்டால் எல்லாரும் பட்டினி கிடக்க வேண்டியதுதான்.''

''மாவுதானே வேண்டும்! கடவுள் கொடுப்பார்'' என்றான் ஹேமேந்திரா.

''கடவுள் கொடுப்பார்தான். ஆனால் உங்களைப் போன்ற சோம்பேறிகள் விஷயத்தில் கடவுள்கூட இரங்க மாட்டார்!''

''வீணா, இன்று என் நண்பர் ஒருவர் சாப்பிட வருவதாகச் சொல்லியிருக்கிறார்.''

ஹேமேந்திரா இவ்வாறு கூறியதைக் கேட்ட வீணாவுக்கு மறுபடியும் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

''என்ன ஆனாலும் சரி; இன்று ஒரு முடிவுக்கு வந்து விடவேண்டும்'' என்று சீறினாள் வீணா.

''என்ன முடிவுக்கு வரவேண்டும்!'' என்று கேட்டான் ஹேமேந்திரா.

''நீங்கள் வேலைக்குச் செல்லப் போகிறீர்களா, இல்லையா! நீங்கள் ஒரு நிமிஷமாவது சிந்தித்துப் பார்த்திருந்தால்...''

இச்சந்தர்ப்பத்தில் ஹேமேந்திரா இடைமறித்தான். ''வீணா! நான் சிந்தித்துப் பார்க்கவில்லை என்று சொல்லுகிறாய். நான் இந்த வாழ்க்கையின் இரகசியத்தைப் பற்றி, மர்மத்தைப் பற்றி எப்போதும் சிந்தித்த வண்ணமாகத் தானே இருக்கிறேன்! என்னுடைய வேலை அதுதானே!'' என்றான் சாந்தமாக.

''நீங்களும் உங்கள் சிந்தனையும்! இந்த வீட்டுக்குத் தீவைக்க வேண்டுமாயின் நெருப்புக் குச்சியைக் கிழிக்க வேண்டுமே என்று கஷ்டப்படுவீர்கள் அவ்வளவு சோம்பேறித்தனம் உங்களுக்கு!''

''வீணா, நீ சொல்வது முற்றிலும் சரி. நெருப்புக் குச்சியைக் கிழித்துப் பிரகாசத்தை உண்டு பண்ணும் சக்தி எனக்கு இருந்தால், நான் இப்படி வாழ்க்கையாகிற அந்தகாரத்தில் வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருப்பேனா!''

இவ்விதம் ஹேமேந்திரா கூறிய பிறகு வீணா அவ்விடத்தில் நிற்க விரும்பவில்லை. ஹேமேந்திராவுடன் அர்த்தமில்லாமல், பலனில்லாமல் பேசிக் கொண்டிருந்தால் சாப்பாடு கிடைத்து விடுமா! போதாக்குறைக்கு அவளுக்கு வீட்டு வேலை ஏராளமாக இருந்தது. பாத்திரங்களைத் தேய்த்துச் சுத்தம் செய்ய வேண்டும். யார் வீட்டுக்காவது சென்று மாவு கடனாக வாங்கிக்கொண்டு வர வேண்டும். ஹேமேந்திராவுக்கும் அவனது நண்பனுக்கும் சமைக்க வேண்டும். வீட்டில் உள்ள நிலைமையை ஹேமேந்திரா உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லையே!


எனவே, ஹேமேந்திரா பால் சாப்பிட்டு விட்டுத் தன் கையில் வைத்திருந்த டம்ளரை வீணா வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு, வெகு வேகமாகக் கீழே இறங்கிப் போய்விட்டாள்.

அவள் சமையல் அறையை எட்டிப் பார்த்ததும் திடுக்கிட்டாள். அங்கு ஒரு டம்ளர் பால் கீழே கொட்டிக் கிடந்தது. ஸுஜாடை தன் டம்ளரில் இருந்த பாலை அதுலுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''பாலைக் கீழே கொட்டியது யார்!'' என்றாள் வீணா கோபத்துடன்.

''கால் தடுக்கி விழுந்ததில் நான்தான் அம்மா கொட்டி விட்டேன்'' என்றான் அதுல்.

''ஸுஜாடை, அதுலுக்கு நீ கொடுக்கும் பால் எது!'' என்று கேட்டாள் வீணா.



"என்னுடைய பாலைக் கொடுக்கிறேன், அம்மா'' என்றுகூறினாள்.

ஸுஜாடை, தான் சாப்பிட வேண்டிய பாலைச் சாப்பிடாமல் அதை அதுலுக்குக் கொடுத்ததை நேரில் பார்த்த வீணாவுக்குக் கோபம் சிறிது தணிந்தது.

''அதுல், நீ பார்த்து நடக்கக் கூடாதா! பால் கங்கா நதியிலிருந்து வேண்டிய அளவு இலவசமாகக் கிடைக்கிறது என்று எண்ணிக் கொண்டிருக்கிறாயா! ஸுஜாடை, உன் பாலை அவனுக்குக் கொடுத்து விட்டாயே! நீ என்ன செய்யப் போகிறாய்!'' என்று வீணா பரிதாபமாகக் கேட்டாள்.

''எனக்குப் பால் வேண்டாம், அம்மா. எனக்குப் பசிக்கவில்லை'' என்றாள் ஸுஜாடை.

இதைக் கேட்ட வீணா புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டே அப்பால் சென்று விட்டாள்.


சிறிது நேரம் கழித்து வீணா சமையல் அறைக்குள் வந்து, ''ஸுஜாடை. சைலா அத்தையின் வீட்டுக்குச் சென்று கொஞ்சம் மாவு வாங்கிக் கொண்டுவா'' என்று கட்டளை யிட்டாள்.

4 காரணங்கள்-

ஏன் நேஷனல்-எக்கோ ரேடியோக்களே உங்களுக்கு வாங்க மிகச் சிறந்தவை

● புதிய மலிவான விலைகள்


அதிகரித்த திறமையுடன் அதிக அளவில் தயாரிக்கப்படுவதனால், சிறப்போங்கும் நேஷனல்-எக்கோ ரேடியோக்களை நீங்கள் எப்பொழுதையும்விட அதிக மலிவான விலைகளில் வாங்கக்கூடும்.



'சோமுக்' A-154—நேஷனல்-எக்கோ ரேடியோக்களில் தலைசிறந்து விளங்குவது இதுவே. 5-வால்வு, பாண்ட்ஸ்ப்ரெட் சூப்பர்ஹெட்...ஏஸி கரண்டுகளுக்கு...சுமாரான விலை

● நம்பிக்கை அதிகம்


கோளாறு எதுமின்றி இயங்கும்—ஏனெனில், இந்த ரேடியோக்களின் அமைப்பில், நேஷனல்-எக்கோ என்ஜினியர்களின் மிகக் கடுமையான சோதனைகளில் தேறும் பாகங்களே உபயோகிக்கப்படுகின்றன. தேறாத பாகங்கள் அறவே நீக்கம். இவ்வளவு கண்டிப்பும் கவனமும் இதர ரேடியோக்களில் காண்பதரிது



A-146 ஏஸி; U-146 ஏஸி-டீஸி; B-146 டிரை பாட்டரி....நடுத்தர விலையுடைய பாண்ட்ஸ்ப்ரெட், 5-வால்வு செட்டுகள்

● "மான்சூனைஸ்ட்"


நேஷனல்-எக்கோ செட்டுகள் மழைக் காலங்களிலும் தவறாமல் இயங்கும்—ஏனெனில் எல்லா பாகங்களும் வழக்கமாயுள்ளதைக் காட்டிலும் 16-மடங்கு அதிக செம்மையாக வெதர்ப்ரூப் செய்யப்படுகின்றன. அதுவே 'மான்சூனைஸேஷன்' எனப் படுவது



B-132-1....மலிவான விலையில் குறைந்த அளவு சக்தியே உபயோகிக்கும் டிரை பாட்டரி செட்...4-வால்வு, 3-பாண்ட்

● எளிதில் வாங்கலாம்

எந்த நேஷனல்-எக்கோ ரேடியோ வாங்கும்போதும் நீங்கள் பூரா விலையும் ரொக்கம் கொடுக்கவேண்டுமென்பதில்லை. விலையில் ஒரு சிறிய பகுதியைக் கட்டி ரேடியோவை வீட்டுக்கு கொண்டுவந்து விடலாம். மீதிப் பணம் ஒரு எளிய வாய்தா திட்டத்தின் பேரில் சுலபமான மாதத் தவணைகளாக கொடுக்க வசதியுண்டு.



"குமார்"—மலிவான விலையிலுள்ள 5-வால்வு சூப்பர்ஹெட், 3-பாண்ட்; ஏஸி மற்றும் ஏஸி-டீஸி

நேஷனல்-எக்கோ ரேடியோ

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட். தொழிற்சாலை பிரதிநிதிகள்

"அத்தையிடம் என்ன சொல்லிக் கேட்பது!" என்றான் ஸுஜாடை.

"'அம்மா இரண்டு சேர் மாவு வாங்கிக் கொண்டு வரச் சொன்னாள்' என்று சொல்லு."

"சரி" என்று தயக்கத்துடன் சொல்லிவிட்டு ஸுஜாடை ஓட்டம் பிடித்தான்.

சில நிமிஷ நேரத்தில் திரும்பி வந்த ஸுஜாடை வீணாவுக்கு அருகில் வந்து மௌனமாக நின்றான்.

"ஏன் மாவு வாங்கிக் கொண்டு வரவில்லை!" என்று கேட்டாள் வீணா.

"அம்மா, சைலா அத்தை மாவு கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டாள்."

"அவள் என்ன சொன்னாள்! சொன்னதை அப்படியே சொல்லு" என்றாள் வீணா.

"நான் தவறாமல் நான் அவளை ஏதாவது கடன் கேட்டுக் கொண்டேயிருக்கிறேனாம்."

வீணாவுக்குக் கோபம் பொங்கியது. "'உன்னிடம் கடனாகக் கேட்டு வாங்கிய சாமானை என் அம்மா எப்போதாவது திருப்பிக் கொடுக்காமல் இருந்தது உண்டா!' என்று அத்தையை நீ கேட்கவில்லையா!"

"இல்லை, அம்மா" என்று மெதுவாகக் கூறினான் ஸுஜாடை.

"உன் அப்பாவைப் போல் நீயும் உபயோக மற்றவன். 'தர்மத்துக்குக் கேட்கவில்லை. கடனாகத்தானே கேட்கிறேன்' என்று நீ அவளிடம் சொல்லக் கூடாதா!"

இவ்வாறு சொல்லி விட்டு வீணா நேராகச் சைலாவின் வீட்டுக்குச் சென்றாள்.

"உங்களுக்கு இஷ்டமில்லையானால், நீங்கள் மாவு கொடுக்க வேண்டாம். ஏன், அனாவசியமான வார்த்தைகளைக் கூறி என் மனதைப் புண்படுத்துகிறீர்கள்! உங்களிடம் கடனாக வாங்கிக் கொண்டு போன சாமானை நான் திருப்பிக் கொடுக்காமல் இருந்தது உண்டா!" என்று உரக்கக் கத்தினாள்.

"வீணா, நீ உன் கோபத்தை என்னிடம் காட்டாதே. உன் கோபத்துக்கு ஆள் நான் அல்ல. நான் மாவு தர மாட்டேன் என்று சொல்லவில்லை. ஹேமேந்திரா ஏன் ஏதாவது ஒரு வேலைக்குப் போகக்கூடாது! இப்படியே எவ்வளவு காலம் சோம்பேறியாக வீட்டில் உட்கார்ந்திருப்பது என்றுதான் கேட்டேன்" என்று பதில் அளித்தாள் சைலா.

"உங்கள் வாயை மூடுங்கள். அவரைப் பற்றி இழிவாக நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம். தினந்தோறும் நீங்களா அவருக்குச் சாப்பாடு போடுகிறீர்கள்! அவரைச் சோம்பேறி என்று சொல்லும் துணிச்சல் உங்களுக்கு எப்படி வந்தது! அவரை ஊர் ஜனங்கள் யாவரும் புகழ்கிறார்கள். நீங்கள் அவருடைய சகோதரி என்ற உரிமையினால்தான் நான் உங்களிடம் மாவு வாங்கி வரச் சொன்னேன். இப்படி நீங்கள் உபதேசம் செய்ய முற்படுவீர்கள் என்று தெரிந்தால், ஸுஜாடையை இங்கு அனுப்பியே இருக்க மாட்டேன்."

இவ்விதம் வீணா சரமாரியாகக் கூறி விட்டு, சைலாவின் பதிலை எதிர்பார்க்காமலேயே வேகமாக வீட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டாள்.

பிறகு வீணா தன்னுடைய சிநேகிதி ஒருத்தியின் வீட்டுக்குச் சென்று மாவு வாங்கிக் கொண்டு வந்தாள். அவள் வந்த போது சைலாவின் மகன் ஒரு பெரிய பை நிறைய மாவை வைத்துக் கொண்டு காத்திருந்தான்.

"உங்கள் மாவு எனக்கு வேண்டவே வேண்டாம் என்று உன் அம்மாவிடம் சொல்லி விடு" என்று கூறி வீணா கோபத்துடன் அவனைத் திருப்பி அனுப்பி விட்டாள்.

மாடியிலிருந்து கீழே இறங்கி வந்த அதுல், "அம்மா, சாப்பாட்டுக்கு இன்னும் மூன்று பேர் வந்திருப்பதாக அப்பா சொல்லச் சொன்னார்" என்றான்.

"இது என்ன சத்திரமா! மாடியில் படுத்துக் கொண்டு அதிகாரம் செய்தால் சாப்பாடு வந்து விடுமா! அவரை இங்கு அழைத்து வா."

இவ்விதம் வீணா கூறி விட்டுச் சமையல் அலுவல்களை மும்முரமாகக் கவனிக்கத் தொடங்கினாள்.

"இந்த அவல வாழ்வுக்கு முடிவு இல்லையா! எவ்வளவு காலம் இவ்விதம் காலத்தைத் தள்ளுவது! இதற்கு ஏதாவது ஒரு வழி செய்துதான் தீர வேண்டும்" என்று அடிக்கடி முணுமுணுத்துக் கொண்டே வீணா வீட்டு அலுவல்களைக் கவனிக்கலானாள்.

அச்சமயம் மதன் வாசற்படியைப் பிடித்துக் கொண்டு வீணாவையே கவனித்துக் கொண்டிருந்ததை அவள் பார்க்கவில்லை.

வீணா தற்செயலாகத் திரும்பிய போது மதன் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டு திடுக்கிட்டாள். தன் உணர்ச்சிகளையும் வருத்தத்தையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், "ஏன் நிற்கிறீர்கள்! உங்களுக்கு என்ன வேண்டும்!" என்று கேட்டாள்.

மதன் ஹேமேந்திராவின் நண்பர்களில் ஒருவன். அவன் வீணாவின் வீட்டுக்கு அடிக்கடி வருவது உண்டு.

"வீணா, மாடியில் நாலு ஐந்து பேர்கள் இருக்கிறார்களே; அவர்கள் எல்லோரும் இங்கேயே சாப்பிடப் போவதாக ஹேமேந்திரா சொன்னான். ஆனால், அவர்களுக்குச் சமையல் தயாராக இல்லை போல் இருக்கிறதே!" என்றான் மதன்.

"நான் என்ன செய்வது! மேற்கொண்டு மூன்று பேர் சாப்பாட்டுக்கு வந்திருக்கிறார்கள் என்று இப்போதுதான் அதுல் வந்து சொன்னான்" என்றாள் வீணா தழதழத்த குரலில்.

"வீணா! இந்த நாடகத்துக்கு முற்றுப் புள்ளி வைத்து விட வேண்டும். இன்று ஒன்றுமே சமைக்காதே. என்ன நடக்கிறது என்று பார்க்கலாம். பல நாட்களாக இவ்விஷயத்தை உன்னிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். வீட்டில் உட்கார்ந்து கொண்டு அதிகாரம் செய்தால் நீ என்ன சாப்பாட்டைச் சிருஷ்டித்து விட முடியுமா!" என்று தூபம் போட்டான் மதன்.

"நான் என்ன செய்வது! என் தலை சுற்றுகிறது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை."

"உன் கஷ்டம் தீர வேண்டுமாயின் நீ இந்த வீட்டை விட்டு வெளியேறி விட வேண்டும். நான் உனக்கு எவ்வித உதவியும் செய்யத் தயார்."



இவ்விதம் மதன் கூறியதைக் கேட்ட வீணா வின் தேகம் அவளை அறியாமலே நடுங்கியது. அதே சமயம் அவளுக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது.



"நீங்கள் இப்போது எனக்கு ஓர் உதவி செய்வீர்களா?" என்றாள்.

மதனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. வீணா விஷயத்தில் தான் வெகு காலமாகக் கொண்டுள்ள துர் எண்ணம் எவ்வித முயற்சியும் இல்லாமல் இவ்வளவு எளிதில் கைகூடும் என்று அவன் நினைக்கவேயில்லை.

"வீணா, உனக்காக நான் எதுவும் செய்யத் தயார். உன்னை நினைத்து நினைத்து என் மனமும் உடலும் உருகிக் கொண்டிருக்கின்றன" என்று மதன் கூறி வீணாவை விழுங்கி விடுபவன் போல் பார்த்தான்.

"ஹோட்டலுக்குச் சென்று ஐந்து அல்லது ஆறு பேருக்குச் சாப்பாடு எடுத்துக் கொண்டு வருவீர்களா?" என்றாள் வீணா.

"இதோ ஒரு நொடியில் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு மதன் புறப்பட்டான்.

வீணா அவ்வளவு சுலபமாகத் தன் வலையில் விழுந்து விடுவாள் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. எனவே, அவன் தான் செய்யத் துணிந்துள்ள காரியத்தைப் பற்றிப் பலவிதமாகச் சிந்தித்துக் கொண்டே ஹோட்டலுக்குச் சென்றான்.

ஹோட்டலிலிருந்து சாப்பாடு கொண்டு வந்ததும் மதன் வீணாவிடம் மெதுவாக, "இன்றிரவு பத்து மணிக்கு மேல் வருகிறேன். தயாராக இரு" என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டான்.

வீணாவின் ஹிருதயத்தில் புயல் வீசத் தொடங்கியது. எனினும் அதை அவள் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. சாப்பாட்டில் பெரும் பகுதியை அவள் மாடிக்கு அனுப்பியபோது, ஹேமேந்திரா அதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தான். அவ்வளவு சீக்கிரத்தில் வீணா அத்தனை சாதனங்களை எப்படித் தயாரித்தாள் என்பதை அவனால் ஊகிக்க முடியவில்லை! இதற்கு முன் ஒருநாளும் அவன் ஹோட்டலிலிருந்து சாப்பாடு தருவித்ததில்லை அல்லவா!

மீதியிருந்த சாப்பாட்டை வீணா ஸுஜடைக்கும் அதுலுக்கும் போட்டாள். அதைக் கவனித்த ஸுஜடை, "அம்மா, உனக்குச் சாதம் வைத்துக் கொள்ளவில்லையே!" என்றாள்.

"நான் பால் சாப்பிட்டு விட்டேன். எனக்குப் பசிக்கவில்லை" என்று பதில் கூறினாள் வீணா.

"இந்த ஜன்மத்துக்குச் சாப்பாடு வேண்டுமா!" என்றது அவளுடைய மனம்.

ஸுஜடையும் அதுலும் வீணாவை அடிக்கடி பார்த்தனர். வீணாவிடம் தென்பட்ட ஒருவித மாறுதல் அவர்களுடைய மனதில் இனம் தெரியாத பீதியை உண்டாக்கியது.

* * *

நேரம் ஆக ஆக வீணாவின் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. அன்றிரவு குழந்தைகள் தூங்கிய பின் ஹேமேந்திரா தூங்கிவிட்டானா என்று பார்ப்பதற்காக வீணா மாடி அறைக்குச் சென்றாள். அங்கு யாரோ ஒரு பெண்ணுடன் ஹேமேந்திரா பேசிக் கொண்டிருந்ததைக்

கேட்ட அவளுடைய ஹிருதயம் அப்படியே நின்று விடும் போல் இருந்தது.

"நான் இனி என் கணவனுடன் வசிக்க முடியாது. நான் இங்கேயே வந்து விடுகிறேனே!" என்றாள் அந்தப் பெண்.

"மேனகா! உன் கணவன் என்னுடைய நண்பன் என்பதை நீ மறந்து விடக் கூடாது. இந்த வீட்டில், என் ஹிருதயத்தில் வீணாவைத் தவிர வேறு எந்தப் பெண்ணுக்கும் இடமில்லை."

இவ்வாறு ஹேமேந்திரா கூறியதைக் கேட்ட வீணாவுக்குத் தலை சுற்றியது. அவள் மிகவும் கஷ்டப்பட்டுத் தைரியத்தைத் தருவித்துக் கொண்டாள்.

"எனக்கு என் தந்தை எழுதி வைத்துள்ள சொத்து ஏராளமாக இருக்கிறது. என்னிடம் ஏராளமான உயர்ந்த நகைகளும் இருக்கின்றன. என் சரீரத்தையும் அந்தச் சொத்துக்களையும் நான் உங்களுக்கே அர்ப்பணம் செய்யத் தீர்மானித்து விட்டேன்" என்றாள் மேனகா.

"அவற்றை ஏற்றுக் கொள்ள நான் தயாராக இருக்க வேண்டாமா!" என்றான் ஹேமேந்திரா நிதானமாக.

"இங்கு நான் வருவதில் தங்களுக்கு இஷ்டமில்லையெனில், இரண்டு பேருமாக எங்கேயாவது வேறு ஊருக்குச் சென்று விடுவோமே. நீங்கள் எங்கு வரச் சொன்னாலும் நான் வருவதற்குத் தயாராக இருக்கிறேன்!"

"மேனகா! என் வாழ்வும் கெட்டு, உன் வாழ்வும் கெடுவதற்கு இதைக் காட்டிலும் சிறந்த யோசனை இருக்க முடியாது!"

"வீணா உங்களை வெறுக்கிறாள், அறவே வெறுக்கிறாள் என்பது எனக்கு மாத்திரமல்ல, எல்லோருக்கும் தெரியும். ஒரு நாள் வீணா உங்களை விட்டு ஓடி விடப் போகிறாள் என்றுகூட ஊரார் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்டவளை விரட்டி விட்டு என்னை ஏற்றுக் கொள்ளுங்களேன்."

"மேனகா! என் பொறுமையைச் சோதிக்காதே. நீ என்னைப்பற்றி என்ன சொன்னாலும் நான் பொறுப்பேன். ஆனால் என் அருமை வீணாவைப் பற்றி ஒரு வார்த்தை அவதூறாகச் சொன்னாலும் என்னால் பொறுக்க முடியாது. வீணா ஒரு தெய்வப் பிறவி. அமிர்தத்துக்கும் விஷத்துக்கும், பாலுக்கும் கள்ளுக்கும் எவ்வளவு வேற்றுமை உண்டோ, அவ்வளவு வேற்றுமை வீணாவுக்கும் உனக்கும் உண்டு. பேசாமல் இந்த க்ஷணமே இந்த வீட்டை விட்டுப் போய் விடு. போ......உன் கணவனுக்கு, என் நண்பனுக்குத் துரோகமாக எதுவும் செய்து விடாதே. உன் அழகையும் உன் சொத்துக்களையும் நான் மண்ணுக்குச் சமமாகக் கருதுகிறேன்" என்று கத்தினான் ஹேமேந்திரா.

எப்போதும் மெதுவாகவும் சாந்தமாகவும் படபடப்பில்லாமலும் பேசும் ஹேமேந்திரா அவ்வாறு உரக்கக் கத்தியது இதுதான் முதல் தடவை.

ஹேமேந்திரா தன்னைப் பற்றிக் கூறியதை நினைத்தபோது வீணாவுக்கு ஒருபுறம் எல்லையற்ற ஆனந்தமும் மற்றொரு புறம் தாங்க முடியாத துக்கமும் உண்டாயின.

உடனே அவள் கீழே இறங்கி வந்தாள். தங்கள் குல தெய்வமான மகாகாளியை நினைத்துக் கொண்டு மனம் உருகினாள்.

"தாயே! படுபாதாளத்தில் விழுவதற்கு இருந்த இந்தப் பாவியைக் காப்பாற்றினாயே! தேவி! உனக்கு அனந்த கோடி நமஸ்காரம்! இனி எனக்கு ஹேமேந்திராதான் உடல், பொருள், உயிர் எல்லாம். இன்றிலிருந்து என் வாழ்க்கை இன்பமயமாகி விட்டது. என் குழந்தைகள் என்னுடைய இரு கண்கள். அன்று ஒரு மகரிஷியை மேனகை வென்று கொண்டாள். ஆனால், இன்றோ இந்த ஞானியிடம், என் பர்த்தாவிடம் இந்த மேனகை தோல்வியுற்றாள்" என்று வீணா முணுமுணுத்தாள். அவள் கண்கள் தாரை தாரையாக ஆனந்த பாஷ்பத்தைச் சொரிந்தன!

இரண்டு நண்பர்கள்!

அந்தச் சாலையில் இருவர் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தனர். அவர்கள் சிரித்துப் பேசிக் கொண்டும் முதுகில் ஒருவரை யொருவர் தட்டிக் கொடுத்துக் கொண்டும் போனதிலிருந்து இருவரும் மிகுந்த அந்நியோந்நிய சிநேகிதர்கள் என்பது நன்றாகத் தெரிந்தது. இப்படிப் போய்க்கொண்டிருக்கும் பொழுதே, ஒருவன் திடீரென்று தன் சைக்கிளிலிருந்து இறங்கிப் பின் சக்கரத்தின் காற்றைத் திறந்து விட்டான். அதைக் கண்ட அவன் நண்பன் ஆச்சர்யமடைந்து, "என்ன அப்பா! என் பின் சக்கரத்தின் காற்றைத் திறந்து விட்டு விட்டாய்? இனி, மேலே நாம் எப்படிப் போவது என்று நினைந்துக் கொண்டாய்?" என்று கேட்டான்.

"என் சைக்கிளில் உட்காரும் 'ஸீட்' ரொம்ப உயரமாக இருக்கிறது. அதனால் சைக்கிளை ஓட்டச் சிரமப்படுகிறேன். ஆகவேதான் காற்றைத் திறந்து விட்டு விட்டேன்" என்றான் அவன்.

அதைக் கேட்ட அவன் நண்பனுக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. "சக்கரத்தின் காற்றைப் பிடுங்கிவிட்டு விட்டாயே! இனிமேல் நாம் சைக்கிள் சவாரி செய்தாற் போலத்தான்! ஆகவே, நான் உன்னைப்போன்ற முட்டாளுடன் வரத் தயாராயில்லை. திரும்பிப் போகிறேன், போ!" என்று கூறிவிட்டுத் தன் பையிலிருந்த 'ஸ்பானரை'க் கையில் எடுத்துக் கொண்டான்.

"எதற்கு அப்பா 'ஸ்பானரை' எடுக்கிறாய்?" என்று கேட்டான் அவன்.

"திரும்பிப் போகத்தான். முன் சக்கரத்திலிருக்கும் 'ஹாண்டில்பாரை'க்கழற்றி 'ஸீட்' இருக்கும் இடத்தில் வைத்துக் கொண்டால்தானே வந்தவழியே திரும்பிப் போக முடியும்?" என்றான் நண்பன்.

இப்படிப் பேசிக்கொண்ட இரு நண்பர்களுடைய காரியமும் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றுகிறதல்லவா? இருவருமே பைத்தியங்கள்தானே, ஐயா! —பீ. எஸ்.



அவள் மேல் உயிர்

'இருந்தா என் சம்சாரம் போலன்னா இருக்கணும்' என்கிறார் அவர். அவருடைய சம்சாரம் குறிப்பறிந்து நடப்பதுதான் அதன் காரணம்.

நல்ல புத்திசாலி அவள். காலையில் அவர் ஆபீஸிற்கு அணிந்து செல்வதற்காக சலவைத்துணிகளை தயாராக எடுத்து வைப்பாள்; மாலையிலோ அவர் வந்தவுடன் ஒரே நொடியில், அதிக செலவில்லாது தயாரிக்கக்கூடிய 'டீ'யைக் கொடுப்பாள்.

அவளுடைய புன்னகையைப்போல் அவள் தயாரிக்கும் 'டீ'யும் கணவனை ஏன் வசீகரிக்காது? (அவள் மேல் அவர் உயிரை வைக்கமாட்டார்?) அவள் அன்புக்கு அவர் அடிமை—இதில் வியப்பென்ன?

மந்திர சக்தியுள்ள 'டீ'யைக் குடியுங்கள்.



சென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.

CTB 69



இன்னொரு இலட்சுமணசாமியார்!



பகீரதன்

டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் அவர்களின் பெயர் தமிழ் நாட்டில் பிரசித்தமானது. சென்னை சர்வ கலாசாலையின் உப அத்யட்சகராக நீண்ட காலமாக இருந்து கல்வித் துறையில் தொண்டாற்றி வருகிறார்.

அவ்வளவு பிரசித்தியில்லாத இன்னொரு லட்சுமணசாமியாரும் கல்விக்குத் தொண்டாற்றி வருகிறார். இவருடைய சேவை வைஸ் சான்ஸலர் இலட்சுமணசாமியாரின் சேவைக்குக் குறைந்தது அன்று. சின்னஞ்சிறு குழந்தைகளுக்குக் கல்வி புகட்டும் தொண்டில் இவர் ஈடுபட்டிருக்கிறார். சுதந்திர இந்திய நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் இருக்கக் கூடாது என்ற கொள்கைக்கு இணங்க காந்தி மகானின் பெயருடன் அவருக்கு ஒரு சிறந்த ஞாபகார்த்தமாக விளங்கும் பாடசாலையை நடத்தி வருகிறார்.

சாதாரணமாகக் குழந்தைகளுக்கு ஒரு நல்ல பெயர் எப்பொழுதுமே உண்டு. அவர்கள் சதா அடம் பிடிப்பார்கள். அவர்களைப் பள்ளிக்கூடம் போகச் சொல்லுவதற்குள் போதும் போதும் என்றாகிவிடும். அப்படியே சிரமப்பட்டு அவர்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைத்தாலும் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போவார்களா என்றால் மாட்டார்கள். எங்கேயாவது கோலிக் குண்டு விளையாடுவார்கள். இல்லாவிட்டால் கொய்யா மரத்தில் ஏறிக் கொய்யாப் பழங்களைப் பறித்துத் தின்று விட்டுப் பள்ளிக்கூடம் விடும் வேளைக்கு வீட்டுக்குத் திரும்பி வருவார்கள்.

இப்படிப்பட்ட இயல்பு படைத்த சின்னஞ் சிறு குழந்தைகளை நாலு மணி நேரத்துக்கு மேல் ஓரிடத்தில் அமைதியாக உட்காரச் செய்து, அத்துடன் புரியாத விஷயங்களைப் பற்றிய பிரசங்கங்களையும் கேட்கப் பண்ணுவது என்றால், அது எவ்வளவு விந்தையான சாதனை!

சென்ற மேமீ 10ட யன்று ஸ்ரீ பெ. க. லட்சுமணசாமி அவர்களால் நடத்தப்பட்டு வரும் விழுப்புரம் மகாத்மா காந்தி பாடசாலையின் ஆண்டு விழாவில் இந்த அற்புதத்தைக் கண்டேன். சுமார் எழுநூற்று ஐம்பது சிறுவர் சிறுமியர்கள் பண்பட்ட பெரியவர்கள் போல அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். அழகாகத் தலைவாரிக் கொண்டு சொக்காய்களை அழுக்குப் பண்ணிக் கொள்ளாமல் மணல் தரையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். நான்கு மணி நேரம் ஒழுங்கு கெடாமல் உட்கார்ந்து மேற்படி பள்ளிக்கூட ஆண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்.

காந்தி பாடசாலையைச் சேர்ந்த மாணவ மாணவிகள் சிலர் விழாவில் பங்கு எடுத்துக்கொண்டு பாராட்டுதலையும் பெற்றார்கள். பாட்டுப் பாடி, ஆட்டமாடி, கும்மி யடித்து, குரவைக்கூத்து ஆடி, கோபுரம் கட்டி, கொடி வணக்கம் செய்து விழாவுக்கு வந்திருந்த பெற்றோர்களையும், தலைமைவகித்த "கல்கி" ஆசிரியரையும் மெய்மறக்கச் செய்து விட்டார்கள்.


தலைமை வகித்த "கல்கி" ஆசிரியரைப் போலவே தான் சபையோரும் குதூகலத்துடன் இருந்தனர். அன்று நடந்த விழாவைப் போல் இதற்கு முன் நடந்த ஆண்டு விழாக்கள் இத்தனை அழகாகவும் விமரிசையாகவும் நடந்ததில்லை என்று அந்தப் பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர்களும் வைர்வாசிகளும் சொல்லிக் கொண்டார்கள்.

மாலை ஆறு மணி இருக்கும். மேற்படி மகாத்மா காந்தி பாடசாலை ஆண்டு விழாவில் கலந்துகொள்ளச் சென்றுகொண்டிருந்தோம்.

எங்கள் கார் ஒரு மேட்டில் ஏறி ஒரு வளைவான திருப்பத்தில் திரும்பி ஒரு சிறிய சந்துக்குள் நுழைந்து வந்தது. அந்தச் சந்து முனையில் ஒரே கூட்டம். கூட்டத்தில் ஒரு சிலர் கையில் நீளமான கழிகளை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்தவுடன் எங்கள் கார் 'டக்' கென்று நின்று விட்டது. நீளமான கழிகளை வைத்திருந்தவர்கள் அக் கழிகளை உயர்த்தினர். சென்ற சில மாதங்களில் தினப் பத்திரிகைகளில் சில இடங்களில் காரை நிறுத்தி வழிப்பறி செய்கின்றனர் என்று வெளியாகி யிருந்த செய்தி மின்னல் வேகத்தில் என் நினைவுக்கு வந்தது. நான் ஆசிரியர் "கல்கி" அவர்களைக் கவலையோடு பார்த்தேன். மூங்கில் கழிகளை வைத்திருந்த அக் கூட்டத்துக்கு அருகில் ஆசிரியர் "கல்கி" அவர்கள் செல்லச் செல்ல என் நெஞ்சு மத்திம காலத்திலும் பிறகு துரித காலத்திலுமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டது. ஏதோ மடியில் இருப்பதைப் பிடுங்கிக் கொண்டாலும் பாதகமில்லை. ஆசிரியருக்கு ஒன்றும் நேர்ந்து விடக்கூடாதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

அத்தனை பேரும் கையிலிருந்த கழிகளைத் தலைக்கு மேல் தூக்கினார்கள். எனக்கு மூச்சு நின்று விட்டது. அடுத்த கணம் அக்கூட்டத்தினர் இரு புறமும் வரிசையாக நின்று தலை வணங்கி மரியாதை செய்து மலர் மாலை சூட்டி வரவேற்றனர். எனக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. பிறகுதான் விஷயம் புரிந்தது. மகாத்மா காந்தி பாடசாலையைச் சேர்ந்த சாரணச் சிறுவர்கள் விழாத் தலைவரை அப்படி மரியாதையுடன் வரவேற்றனர் என்று அறிந்து மகிழ்ந்தேன்.

"கல்கி" ஆசிரியரை மகாத்மா காந்தி பாடசாலையின் தலைமை ஆசிரியரும் நிர்வாகியுமான ஸ்ரீ பெ. க. லக்ஷ்மணசாமி வரவேற்று அழைத்துச் சென்றார். அங்கிருந்த



நாடக ஆசிரியர்
ஸ்ரீ வெ. கோவிந்தராஜ்

ஒரு சில கீற்றுக் கொட்டகைகளைக் காண்பித்து "இவைகள் தான் மகாத்மா காந்தி பாடசாலையின் கட்டிடங்கள்" என்றார். முதலில் இருந்த ஒரு கொட்டகைக்குள் நுழைந்தோம். அங்கு காந்தி மகானின் திரு உருவச்சிலை ஒன்று இருந்தது. அதைப் பார்த்தவுடன் எனக்கு மெய் சிலிர்த்தது. காந்தி மகான் உயிருடன் இருக்கும்போதும் நமக்காக பாடுபட்டுக் கொண்டிருந்தார். உயிர் விடும் போதும் நமக்காகவே உயிர் விட்டார். இன்று சிலை உருவிலும் நமக்காகவே நின்றுகொண்டிருக்கிறார் என்று நினைந்தேன்.

"இது மாணவர்களின் கைத்தொழில் வகுப்பு" என்றார் ஸ்ரீ லட்சுமணசாமி. அங்கு ஒரு அச்சுச்சாலை இருந்தது. மாணவர்கள் அதில் அச்சுத் தொழில் பயின்று கொண்டிருந்தனர். இன்னொரு பக்கத்தில் மாணவர்கள் தறியில் துணி நெய்து கொண்டிருந்தனர். வேறு ஒரு இடத்தில் சிறுவர்கள் புத்தகம் நோட்டு முதலியவைகளைப் பைண்டு செய்து கொண்டிருந்தனர். எழுத்துப் படிப்போடு வாழ்க்கைக்கு வேண்டிய கைத்தொழிலையும் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து வரும் மகாத்மா காந்தி பாடசாலையின் நிர்வாகியை மனத்துக்குள் பாராட்டிக் கொண்டேன். இந்தச் சமயத்தில்,

"ஒவ்வொரு மாணவரும் கைத் தொழிலில் தேர்ச்சி பெற்றிருப்பது அவசிய மாதலால் அச்சு, தறி, பைண்டிங் ஆகிய மூன்று தொழில்களையும் அதற்கு வேண்டிய சாதனங்களுடன் நிறுவி, தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது" என்றார் ஸ்ரீ லட்சுமணசாமி.

பிறகு அங்கிருந்து "கல்கி" ஆசிரியர் அவர்களைப் பள்ளிக்கூடத்துக்குப் பின்னால் இருந்த திறந்த வெளிக்கு அழைத்துச் சென்று "இந்த இடம் பள்ளிக்கூடத்துக்குச் சொந்தமானதுதான். இதில்தான் பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய கட்டிடங்களைக் கட்டவேண்டும்" என்று கூறிவிட்டு விழா நடக்க வேண்டிய இடத்துக்கு ஆசிரியர் 'கல்கி' அவர்களை அழைத்து வந்து விழாவுக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்.

சுமார் எழுநூற்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் அமைதியாக உட்கார்ந்திருந்ததையும், அவர்களுக்கு மத்தியில் வாலைக் குழைத்துக்கொண்டு வந்த ஒரு நாய் சாந்தமாகப் படுத்துக் கொண்டு நிகழ்ச்சிகளைக் கவனிப்பதற்குத் தயாராக இருப்பதையும் பார்த்த "கல்கி" ஆசிரியர் "மகாத்மா காந்தி பாடசாலையின் நிர்வாகி குழந்தைகளைத் தான் நன்றாக ஒழுங்குடன் பழக்கி யிருக்கிறார் என்றால், இங்குள்ள நாய்கூட அல்லவா தன் சுபாவத்துக்கு விரோதமாக அமைதியுடன் இருக்கிறது!" என்றார். அச் சபையில் 'கொல்'லென்று ஒரு பெரும் சிரிப்பொலி எழுந்து மறைந்தது.



(வேலைக்காரன்—
கே. என். தனலக்ஷ்மி)

அந்த நாய் அப்பொழுது தலையைத் தூக்கி "என்ன விசேஷம்!" என்று கேட்பது போல் ஒரு தடவை பார்த்து விட்டு, மறுபடியும் தலையைக் கீழே போட்டது. எல்லார் சொற்பொழிவுகளும் முடிந்த பிறகுதான் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டது!

"இந்தப் பள்ளிக்கூட விழாவுக்குத் தலைமை வகிக்கும்படி மூன்று வருஷங்களாக என்னை அழைத்துக்கொண்டிருந்தார்கள். ரயில் பிரயாணம் செய்யும்போதெல்லாம் நள்ளிரவிலே தான் விழுப்புரம் ரயில் நிலையத்தைத் தாண்டிச் செல்லுவது வழக்கம். ஆகையால் விழுப்புரத்தை 'இராத்திரி நகர'மாகவே கருதி யிருந்தேன். இரவு நகரமான விழுப்புரத்துக்குப் பகலில் எப்படிப் போவது என்று தட்டிக் கழித்து வந்தேன். இந்த வருஷம் சகோதரப் பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ திரிலோக சீதாராம் என்னை வந்து அழைத்தார். திருச்சியில் இருக்கும் இவருக்கும் விழுப்புரத்துக் காந்தி பாடசாலைக்கும் என்ன சம்பந்தம் என்று விசாரித்தபோது ஸ்ரீ சீதாராம் விழுப்புரத்தின் மாப்பிள்ளை என்று கேள்விப்பட்டேன். மாப்பிள்ளையின் கௌரவத்தைக் காப்பாற்றிவிட வேண்டியதுதான் என்று விழாவுக்குத் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டேன்" என்று 'கல்கி' ஆசிரியர் கூறியபோது சபையோர் சிரித்து ஆரவாரம் செய்தனர்.

பின்னர் ஸ்ரீ திரிலோக சீதாராமைப் பேசும்படி தலைவர் கேட்டுக் கொண்டார்.

"சிவாஜி"ப் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ திரிலோக சீதாராம் தமக்கே உரிய தனியான பாணியில் பாரதியாரின் பாடல் ஒன்றைப் பாடிவிட்டு அங்கிருந்த எல்லாரையும் தம்முடைய வாக்கு வன்மையால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் அழைத்துச் சென்றார்.

அரசகுமாரன் சித்தார்த்தனைக் காண்பித்தார். அவன் படித்ததையும் விளையாடியதையும் காண்பித்தார். எல்லாரும் பார்த்தோம். பிறர் துன்பப் படுவதைப் பார்த்துத் துயரப்படும் சித்தார்த்தனைக் காட்டினார். அதைப் பார்த்து நாங்களும் கஷ்டப்பட்டோம். சித்தார்த்தனுக்குத் திருமணம் நடந்தது. அவனுக்குக் குழந்தை பிறந்தது. அதைப் பார்த்து மகிழ்ந்தோம். சித்தார்த்தனோ மக்களின் துன்பத்துக்கு ஒரு வழி காண முயன்றுகொண்டே யிருந்தான்.



(சிறுவர்கள்—
திருநாவுக்கரசு, பத்மநாபன்)

கடைசியில் தங்கச் சிலை போன்ற தன் மனைவியையும் அருமைக் குழந்தையையும் விட்டு விட்டு சித்தார்த்தன் புறப்பட்டு விட்டான். அவனுடன் திரிலோக சீதாராம் சென்றார். நாங்களும் சென்றோம். அங்கு ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அதன் அடியில் சித்தார்த்தன் உட்கார்ந்தான். அதுவரைதான் திரிலோக சீதாராம் எங்களை அழைத்துச்



இந்தியாவின் தலைசிறந்த
சைக்கிள் டயர்
சூப்பர்
இந்தியா
சிவப்பு வளையத்தைக் கவனித்து வாங்கவும்



'சிற்பி' நாடகத்தில் நடித்த நடிகர்கள். நடுவில் கண்ணாடியும் கதர் ஜிப்பாவும் அணிந்து உட்கார்ந்திருப்பவர்தான் விழுப்புரம் மகாத்மா காந்தி பாடசாலை நிர்வாகி ஸ்ரீ பெ. சு. இலட்சுமணசாமி.

சென்றார். இப்பொழுது சித்தார்த்தனுக்கும் அவருக்கும் மத்தியில் ஒரு திரை விழுந்து விட்டது. சித்தார்த்தன் புத்தபிரான் ஆகிவிட்டார். அவரிடம் செல்ல முடியவில்லை. எங்களை எல்லாம் மீண்டும் விழுப்புரத்துக்கே அழைத்து வந்தார். ''அன்பு செய்யுங்கள். அன்பு ஒன்றால்தான் இன்பமாக வாழ முடியும்'' என்று கூறித் தம் அழகிய சொற்பொழிவை முடித்துக் கொண்டார்.

பிறகு பேசிய விழாத் தலைவர் ஸ்ரீ கல்கி அவர்கள் மகாத்மா காந்தி பாடசாலைச் சிறுவர்களுக்குக் காந்திமகான் வாழ்க்கையில் ஒரு ரஸமான சம்பவத்தை அழகாக எடுத்துக் கூறினார். காந்திமகான் சம்பரான் ஜில்லாவில் முதன் முறையாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் 144-வது சட்டத்தை மீறியதையும் அப்பொழுது ஆண்டு வந்த பிரிட்டிஷார் அதைக் கண்டு திணறியதையும் அருமையாக எடுத்துச் சொன்னார். குழந்தைகள் திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தனர். பெரியோர்கள் உணர்ச்சி வசமாயினர். சம்பரான் கலெக்டர் காந்திஜியைப் பார்த்துக் கதிகலங்கிய சம்பவத்தையும் அப்பொழுது கலெக்டர் வீட்டுச் சேவகன் தவித்ததையும் கூறிய போது சபை அநுபவித்து மகிழ்ந்தது.

''நம் எல்லாரையும்விட இந்தக் குழந்தைகள் பாக்கியசாலிகள். நாம் அடிமை தேசத்திலே பிறந்தோம். இந்தக் குழந்தைகளில் சிலர் சுதந்திர நாட்டிலே பிறந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் இந்நாட்டு மன்னர்கள்; தலைவர்கள். நாம் எதைப் போற்றுகிறோமோ அதுதான் வளரும். எதை ஆதரிக்கிறோமோ அதுதான் வளர்ச்சி பெறும். அறிவுடையோர்களையும், தலைவர்களையும் போற்றாத நாட்டில் அறிவுடையோர்களும் தலைவர்களும் தோன்ற மாட்டார்கள். ஆகையால் எதிலும் குறை காண்பதும் குறைப்படுவதுமா யிருப்பதில் பயனில்லை. நல்ல காரியங்களையும் நல்ல காரியங்களைச் செய்வோரையும் பாராட்ட வேண்டும். அப்போதுதான் தேசம் முன்னேற்றமடையும். இந்தப் பள்ளிக்கூடத்தின் நிர்வாகி ஸ்ரீ லக்ஷ்மணசாமி அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்களின் ஊக்கத்தையும் உழைப்பையும் எல்லாரும் பாராட்ட வேண்டும். அவர் எடுத்ததற்கெல்லாம் குறைப்பட்டுக் கொண்டிருந்தால் ஐந்து வகுப்பு வரை இருந்த இந்தப் பள்ளிக்கூடத்தை எட்டாம் வகுப்பு வரை உயர்த்தி இருக்க முடியுமா? எழுநூற்றுக்கு மேம்பட்ட குழந்தைகளைத்தான் சேர்த்து விட முடியுமா! மனிதன் முயற்சியால் இந்த உலகத்தில் ஆகாத காரியமில்லை. அவருடைய முயற்சிக்கு நாம் எல்லாரும் ஆதரவு தந்தால் இன்னும் சில வருஷங்களிலேயே அவருடைய கனவை நனவாக்கி விடலாம்'' என்றார்.

ஆம்! இப்பொழுது சின்னஞ் சிறு ஓலைக் கொட்டகைகளில் நடந்துவரும் மகாத்மா காந்தி பாடசாலைக்குச் செங்கல் கட்டிடம் கட்டுவதற்குப் பணம் வேண்டும். நல்ல காரியங்களுக்கு எப்பொழுதுமே ஆதரவு கொடுக்கும் தமிழ் நாட்டில் இது ஒரு பிரமாதமான காரியமில்லை. இந்தப் பள்ளிக்கூடத்துக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மணசாமி இருக்கும்போது விரைவில் மகாத்மா காந்தி பாடசாலை கண்ணைக் கவரும் மூன்றடுக்கு மாளிகையில் நடந்து தமிழ் நாட்டின் வள்ளன்மைக்கு ஒரு ஞாபகார்த்தமாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் பாடசாலையின் கட்டிட நிதிக்குத் தாராளமாகப் பொருள் வழங்கவேண்டும் என்று சபையோரைக் கேட்டுக் கொண்டு தம் தலைமை உரையை முடித்தார் ''கல்கி'' ஆசிரியர். மகாத்மா பாடசாலையின் நிர்வாகி ஸ்ரீ லட்சுமணசாமி வந்தனோபசாரம் கூறினார். ''இன்று இரவு பாடசாலைக் கட்டிட உதவி நிதிக்காகப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களே நடிக்கும் சிற்பி என்ற நாடகத்துக்கு வரவேண்டும்'' என்று எல்லாரையும் அழைத்தார்.

மாணவிகள் இனிமையான குரலில் வெகு சுத்தமாக "வாழிய செந்தமிழ்!" என்ற தமிழ்நாட்டு வாழ்த்துப் பாடலையும் "ஜன கண மன" என்ற தேசிய கீதத்தையும் பாட, விழா இனிது முடிந்தது. நாங்களும் ஸ்ரீ லட்சுமணசாமியின் அழைப்புக்கு இணங்க 'சிற்பி' நாடகம் பார்ப்பதற்குக் கிளம்பினோம்.

* * *

இந்த நாடகத்தைப் பார்த்தபோது மகாத்மா காந்தி பாடசாலையின் நிர்வாகியான ஸ்ரீ லட்சுமணசாமியின் உயர்ந்த பண்பாட்டையும், மாணவ மாணவிகளின் திறமையையும், இந்தச் சிற்பி நாடகத்தைத் தயாரித்த ஸ்ரீ வெ. கோவிந்தராஜ் அவர்களையும் எப்படிப் பாராட்டுவது என்று தெரியாமல் திணற வேண்டியதாயிற்று. நாடகம் அவ்வளவு உயர்வாக இருந்தது.

நாடகத்தைத் தயாரித்த ஆசிரியர் ஸ்ரீ கோவிந்தராஜ் மிகச் சக்தி வாய்ந்ததாயும், உணர்ச்சி மிகுந்ததாயும், குழந்தைகள் ஏற்று நடிப்பதற்குத் தகுந்ததாயும் நாடகத்தை இயற்றியிருக்கிறார். இதையெல்லாம் விட முக்கியமானது காதல், கீதல் ஒன்றுமில்லாமல் விரசமான சம்பவங்களோ மட்டரகமான சம்பாஷணைகளோ இல்லாமல் குழந்தைகளின் மனத்தில் கலை உணர்ச்சியையும், தியாக எழுச்சியை உண்டாக்க வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தையும் வைத்து நாடகத்தை எழுதியிருக்கிறார்.

கலையுணர்ச்சி இல்லாமல் சிற்பக் கலையில் படித்துப் பட்டம் பெற்ற ஜமீன்தார் மகன் விஜயன் கிராமத்துக்கு வருகிறான். எங்கிருந்தோ வந்த ஏழைச் சிற்பி ரமணன் என்பவனும் அந்த ஊரில் இருக்கிறான். அவன் குழந்தைகளுக்குப் பொம்மைகள் செய்து கொடுத்துக் குழந்தைகளின் உள்ளத்தில் அழியா இடம் பெற்று விடுகிறான். இதை உணர்ந்த ஜமீன்தார் மகன் ஏழைச் சிற்பி ரமணன் மீது கோபங்கொண்டு தன் வேலைக்காரன் மூலமாக அவன் செய்து வைத்திருந்த பொம்மைகளை உடைத்து விடுகிறான். ரமணன் ஜமீன்தாரிடம் முறையிடுகிறான். ஜமீன்தார் விஜயனைக் கண்டித்துவிட்டு ரமணனுக்கு ஆறுதல் சொல்லி அனுப்புகிறார். கோபமடைந்த விஜயன் தன்னுடைய சிலையைச் செய்து திறப்பு விழா நடத்துகிறான். அவன் பொறாமை உள்ளத்தில் ரமணனே இருந்ததால் தன் சிலைக்குப் பதில் ரமணனின் சிலை உருவானதைக் காண்கிறான். இதைக் கண்டு சினமடைந்த விஜயன் அந்தச் சிலையை உடைத்துக் காட்டிலே எரியும்படி செய்கிறான். தன்னால் கிராமம் இரண்டு படுவதை யறிந்த ஏழைச் சிற்பி ரமணன் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் எங்கேயோ சென்று விடுகிறான். ஜனங்கள் ரமணனைக் காணாது வருத்தப்படுகின்றனர். விஜயனால் காட்டில் எறியப்பட்ட ரமணன் சிலையைக் கொண்டு வந்து ஊரில் வைத்துக்கொண்டிருக்கின்றனர். ஜமீன்தார் தம் மகன் விஜயனுக்குப் புத்தி புகட்டுகிறார். இதைக் கண்ட குழந்தைகள் குதூகலமடைகின்றனர்.



(ஏழைச் சிற்பி ரமணன் — வி. கமலம்)

நாடகத்தைப் பார்த்தபோது நாடகத்தையே தொழிலாகக் கொண்ட தொழில்நடிகர்கள்கூட இவ்வளவு சிறப்பாக நடிக்க முடியாது என்று சொல்லி வியந்து பாராட்டும்படி இருந்தது.

* * *

நாடகத்துக்குத் தலைமை வகித்து நன்றாக நடித்த குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கிய ஆசிரியர் 'கல்கி' அவர்கள் சொன்னார்: "நாடகத்துக்குத் தலைமை வகிப்பது ஒரு தர்ம சங்கடமான காரியம். ஏனென்றால் நாடகத்தைப் பூராவும் பார்க்கவேண்டியிருக்கும். எல்லா நாடகங்களையும் பார்க்க முடிகிறதா! ஆனால் இந்த நாடகத்தைப் பார்த்தபோது நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்தேன்" என்றார். இதை யைத் தயாரித்த நாடக ஆசிரியர் ஸ்ரீ கோவிந்தராஜ் அவர்களையும் ஸ்ரீ லட்சுமணசாமி அவர்களையும் நாடகத்தில் பங்கு கொண்டு நடித்த குழந்தைகளையும் அவர்களுக்கு ஊக்கமளித்த பெற்றோர்களையும் பாராட்டினார்.

நாடகத்தின்போது எல்லாருக்கும் நன்றி தெரிவித்துப் பேசிய ஸ்ரீ லட்சுமணசாமி அவர்கள் மகாத்மா காந்தி பாடசாலைக் கட்டிட நிதிக்குப் பண உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வள்ளல் குணம் படைத்த தமிழ் மக்களின் காதுகளில் விழுப்புரம் மகாத்மா காந்தி பாடசாலை நிர்வாகி ஸ்ரீ பெ. சு. லட்சுமணசாமி அவர்களின் குரல் விழுந்திருக்கும் என்று நினைக்கிறேன். அவர் போதும் போதும் என்று சொல்லும்படி தமிழ் மக்கள் மேற்படி பாடசாலைக் கட்டிடத்துக்கு அள்ளிக் கொடுத்துத் திணற அடிப்பார்கள் என்று நம்புகிறேன்.

★ புத்திசாலிகள்!

இரண்டு பேர் மீன் பிடிக்கச் சென்றார்கள். நடுக் கடலில் ஓரிடத்தில் நிறைய மீன்கள் கிடைத்தன. இருவரும் திரும்பினர். படகில் வந்து கொண்டிருக்கும் போது, ஒருவன் மற்றவனைப் பார்த்து "நாம் இப்பொழுது மீன் பிடித்த இடத்தை மறுபடியும் கண்டு பிடிக்க ஏதாவது அடையாளம் வைத்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

"ஓ! அந்த இடத்தில் இருந்த போதே ஞாபகத்துக்காகப் படகில் ஒரு குறி போட்டு விட்டேன்" என்று பெருமையுடன் கூறினான்.

"போடா முட்டாள்! இதே படகை நாம் மறுபடியும் மீன் பிடிக்க எடுத்துச் செல்லுகிறோம் என்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டு மற்றவன் 'படீர்' 'படீர்' என்று தலையிலடித்துக் கொண்டான்.

ஹெர்குலஸ் சைகிள்கள் இந்தியாவில் சிறந்த நிலைமையில் வருகின்றன என்பது எவ்விதம்

முப்பது வருஷகால அனுபவத்தின் பயனாகக் கையாளப்படும் விசேஷ பாக்கிங் முறையினால் சற்றும் அப்பழுக்கற்ற நிலையில் ஹெர்குலஸ் சைகிள்கள் உங்களுக்கு வந்து சேருகின்றன. சேர வேண்டிய இடத்தில் சுலபமாகவும் பத்திரமாகவும் இரமமாகவும் சைகிள்களைப் பூட்டும் வண்ணம் அதன் பாகங்களனைத்தும் ஒழுங்காகக் கூட்டப்பட்டு உறுதியான பெட்டிகளில் மிக ஜாக்கிரதையாக வைத்து அனுப்பி வைக்கப் படுகிறது.



ஹெர்குலஸ் சைக்கிள்களை பாக் செய்து வெளியே அனுப்பப்படும் இலாகாவின் தோற்றம்



இன்றைய சைகிள்களில் மிகவும் சிறந்தது

Hercules

ஹெர்குலஸ்

THE HERCULES CYCLE & MOTOR COMPANY LTD.
BIRMINGHAM ENGLAND.

எல்லா பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும்

EAS/13/54/t

அவள் உத்தமி

வசு

மகாதானபுரம் பெண்கள் பாடசாலையில் நான் உபாத்தியாயினியாக வேலையில் அமர்ந்து கிட்டத்தட்ட ஒரு வருஷமாகி யிருந்தது. உத்தியோகத்தில் அமர்ந்ததும் எனக்குத் துணையாக ஊரிலிருந்து என் அத்தையைக் கூட்டிக் கொண்டு வந்திருந்தேன். ஆமாம்; நான் உத்தியோகம் பார்ப்பதற்காகப் படிக்கவில்லை. கலியாணமாகும் வரை காலேஜில் படித்துக் கொண்டிருக்கட்டும் என்று என்னை என் பெற்றோர்கள் அனுமதித்ததின் பயனாக நான் பி. ஏ. பரீட்சையில் தேறினேன். ஆனால் என் பி. ஏ. படிப்பு முடிந்ததும் கையில் மாலையுடன் ஒரு கணவன் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார் என்று என் தகப்பனார் எதிர்பார்த்தது பகற் கனவாகவே முடிந்தது. ஒருகாலத்தில் எனக்கு வாய்க்க விருக்கும் வரனுக்குக் கொடுப்பதற்காக வரதட்சிணைப் பணமாக ஒதுக்கி வைத்திருந்த ரூபாய்களை என் படிப்புச் செலவுக்காகக் கரைத்த பின், கடைசியில் நான் தனி மரமாக நின்றதை எண்ணி ஏக்கமடைந்தனர் என் பெற்றோர். படித்த படிப்பைப் பயன்படுத்த வேண்டுமென்று நினைத்து என் பெற்றோர்களுக்கு அவ்வளவு விருப்பமில்லாத போதிலும் பிறந்த ஊரை விட்டு வெளிக் கிளம்பி உத்தியோகத்தை நாடி மகாதான புரத்துப் பெண் பள்ளியில் வேலைக்கு அமர்ந்தேன்.

நான் வந்த சில நாட்களுக்குப் பிறகுதான் அவ்வூர் ஆஸ்பத்திரியில் டாக்டர் தமயந்தி வேலை ஒப்புக் கொண்டாள். அத்தைக்கு ஒரு தடவை சற்றுக் கடுமையான காய்ச்சல் வரவே, தமயந்தியின் வீட்டிற்குப் போய் அவளை அழைத்துக் கொண்டு வரும் அவசியம் எனக்கு ஏற்பட்டது. அது முதல் நானும் தமயந்தியும் மனம் விட்டு நெருங்கிப் பழக ஆரம்பித்தோம்.

வயதில் என்னைவிடத் தமயந்தி குறைந்தது பத்து வயதாவது மூத்தவளாக இருப்பாள் என்று மதிப்பிட்டேன். கனிவமான சுபாவம் படைத்தவள். அநேகமாக எப்பொழுதுமே கலகலப்பாக இருப்பாள். இருந்தாலும் அவளுடைய கலகலப்பின் நடுவே சஞ்சலத்தின் ரேகை ஒன்று ஊடுருவிப் பாய்வதுபோல் எனக்கு அடிக்கடி ஒருவித பிரமை தட்டுவதுண்டு. சுமங்கலிகளின் சுப சின்னமான மாங்கல்யம் அவள் கழுத்தில் திகழ்வதிலிருந்து தமயந்தி கல்யாணமானவள் என்று மட்டும் ஊகித்தறிந்தேன். தமயந்தியின் பிரத்தியேக வாழ்க்கையைப் பற்றி அவளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுவதற்கு எனக்கு விருப்பமிருந்த போதிலும், அவளே அதைப் பற்றி என்னிடம் கூறாதபோது நானாகக் கேட்பது அவ்வளவு நாகுக்காக இருக்காது என்று நினைத்து அதைப்பற்றி நான் அவளிடம் பேசுவதற்குத் துணியவில்லை. ஒரு விஷயத்தில் மாத்திரம் தமயந்தியின் போக்கு எனக்குப் புரியாத புதிராக இருந்தது. ஒவ்வொரு சனிக்கிழமை மாலையிலும் அவள் வீட்டில் தங்குவதில்லை. நான்கு மணிக்கே தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு வெளியே கிளம்பி விடுவாள். இரவு எட்டு அல்லது ஒன்பது மணிக்குத்தான் திரும்பி வருவாள். ஞாயிற்றுக்கிழமை முழுவதும் அவள் வதனத்தில் வேதனை கலந்து இருக்கும். திங்கட்கிழமை வழக்கம்போல் ஆஸ்பத்திரிக்குச் சென்று அவள் அலுவல்களைக் கவனிக்க ஆரம்பித்ததும் மறைந்திருந்த அவளுடைய உற்சாகம் தலையைத் தூக்கும். சனிக்கிழமையன்று சற்று அளவுக்கு அதிகமாகவே அவள் முகத்தில் ஆனந்தம் ததும்பும். ஆனால் ஞாயிற்றுக்கிழமை வந்ததும் பழைய கதைதான். இதற்குரிய காரணத்தை என்னால் அறிய முடியவில்லை.

அன்றொரு நாள் மாலை பள்ளிக்கூடம் விட்டதும் நேராக வீட்டுக்கு வந்தேன். வந்ததும் முகத்தைக் கழுவிக் கொண்டு, தலையை வாரி, நெற்றியில் திலகமிட்டு முடித்தபின், வெளியே கிளம்பினேன். போகும்போது அத்தையிடம் "அத்தை! நானும் தமயந்தியும் சினிமா பார்க்கப் போகிறோம். நான் திரும்பி வர நாழிகையாகும். எனக்காகச் சாப்பாட்டுக்குக் காத்திருக்க வேண்டாம்" என்று கூறி விட்டுப் புறப்பட்டேன்.

நான் எதிர்பார்த்தபடி அத்தை "சரி, போய் விட்டு வா" என்று சொல்லவில்லை. அதற்குப் பதிலாக "பவானி, நான் சொல்லுகிறேன் என்று கோபித்துக் கொள்ளாதே. நீ அந்த லேடி டாக்டருடன் நெருங்கிப் பழகுவது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அவளைப் பற்றி என்ன வெல்லாமோ என் காதில் விழுகிறது. ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளியூரிலிருந்து யாரோ ஒருவன் அவளைப் பார்க்க வருகிறானாம். இவள் அவனை ரயில்வே ஸ்டேஷனில் சந்தித்து அவனுடன் கை கோத்துக் கொண்டு பக்கத்திலிருக்கும் மைதானத்தில் உலாவ ஆரம்பித்து விடுகிறாளாம். ஒவ்வொரு சமயம் ரயில்வே ஸ்டேஷன் பக்கத்திலிருக்கும் ஹோட்டலில் இரண்டு பேருமாகச் சாப்பிட்டு விட்டுச் சினிமாவுக்குக் கூடப் போய் விடுகிறார்களாம். அவனை இவள் இருக்கும் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வரும் அளவுக்கு அவளுக்கு இன்னும் தைரியம் வரவில்லை. அதையும் கொஞ்ச நாளில் செய்து விடுவாள் போலத் தோன்றுகிறது. தமயந்தி கலியாணமானவள் என்று நீ சொல்லியிருக்கிறாய்; அவள் இப்படி யெல்லாம் நடப்பது என் மனத்துக்கு என்னமோ மாதிரி படுகிறது. நாளை முதல் அவசியம் இருந்தால் தவிர அவளைப் பார்ப்பதற்கு அவள் வீட்டிற்கோ ஆஸ்பத்திரிக்கோ போக வேண்டாம். பிறகு உன் இஷ்டம்" என்றாள் அத்தை படபடப்பாக.

அத்தை சொன்ன தகவல் என்னைத் திடுக்கிட வைத்தது. ஒரு வேளை அத்தை சந்தேகித்த மாதிரி டாக்டர் தமயந்தியும் இருக்கலாமோ என்று ஒரு கணம் சந்தேகித்தேன். ஆனாலும் தமயந்தியை அவ்விதம் சந்தேகிப்பது அடாதது என்று உள் மனத்திலிருந்து மற்றொரு குரல் என்னை எச்சரித்தது. எவ்விதமாவது ஒரு சனிக்கிழமையன்று தமயந்தியைப் பின் தொடர்ந்து அவளைக் காண வரும் ஆடவனையும் அவர்கள் பழகும் விதத்தையும் பார்த்து விட்டு வரவேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தேன். அதை மனத்தில் வைத்துக்கொண்டு "அத்தை, உங்களுக்கு இஷ்டமில்லாத காரியத்தில் நான் பிரவேசிக்க விரும்பவில்லை. ஆனாலும், நாம் நிர விசாரியாமல் ஏதோ வதந்தியை நம்பி, தமயந்தியின் மேல் அபாண்டமான பழியைச் சொல்லக் கூடாது" என்று கூறி முடித்தேன்.

2

அடுத்த ஒருவாரம் நான் தமயந்தியை அவள் வீட்டிலோ ஆஸ்பத்திரியிலோ சந்திக்கவில்லை. அந்த வாரம் வெள்ளிக்கிழமை யன்று என்னைத்

தேடிக்கொண்டு தமயந்தி நான் வேலையாயிருக்கும் பள்ளிக்கூடத்துக்கே வந்து விட்டாள். அவள் என்னைத் தனியாகச் சந்தித்ததும் ''என்ன பவானி, ஒரு வாரமாக நீ என் கண்ணில் படவேயில்லை. உன் உடம்புக்கு ஏதாவது அசௌகரியமா? ஒரு வேளை உன் அன்புக்கு நான் உகந்தவள் இல்லை என்று நினைத்து என்னை ஒதுக்கிவைத்து விட்டாயா!'' என்று அவள் நெஞ்சம் நெகிழ்ந்து குரல் கரகரக்க என்னிடம் கேட்டபோது என்ன பதில் சொல்லுவதென்று தெரியாமல் திகைத்தேன். பிறகு சமாளித்துக் கொண்டு' ''டாக்டர், இப்பொழுதெல்லாம் எனக்குப் பள்ளிக்கூடத்தில் வேலை அதிகம். அதன் காரணமாக எனக்கு வெளியே போய்வர அதிக அவகாசம் இருப்பதில்லை'' என்று காரணம் சொல்லி அப்போதைக்குத் தமயந்தியின் சந்தேகத்தைப் போக்கினேன்.

அடுத்த நாள் சனிக்கிழமை. அன்று நான் ஏற்கெனவே திட்டம் போட்டிருந்தபடி நேராகப் பிற்பகல் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக எண்ணியிருந்தேன். ஆனால் சற்றும் எதிர்பாராத விதத்தில் அத்தைக்குக் குளிர் ஜுரம் வந்து விட்டது. அன்று இரவு சமையலைத் தயாரிக்கும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. சமையலை முடித்து வைப்பதற்குள் இரவு எட்டு மணியாகி விட்டது. வழக்கமாகத் தமயந்தி அதற்கு முன்பு வீட்டிற்குத் திரும்ப மாட்டாள் என்று எனக்குத் தெரியுமாதலால், சுமார் ஒன்பது மணிக்கு அத்தைக்கு மருந்து வாங்கிக்கொண்டு வருவதற்காகத் தமயந்தியின் வீட்டை அடைந்தேன். தமயந்தியைக் காணவில்லை. ஆஸ்பத்திரி தாதி ஒருத்திதான் அங்கே இருந்தாள். ''டாக்டரம்மா, அவசரமாக ஒரு பிரசவ கேசைப் பார்க்கப் போயிருக்காங்க'' என்றாள். காய்ச்சலோடு வீட்டில் அத்தை தனியாக இருந்ததால், தமயந்திக்கு அவள் திரும்பி வந்ததும் ஜுரத்துடன் இருக்கும் என் அத்தையை வந்து பார்க்கும்படி ஒரு குறிப்பு எழுதி அந்தத் தாதியிடம் கொடுத்து விட்டுக் கிளம்பும் சமயம் நடுத்தர வயதுடைய ஒருவர் உள்ளே நுழைந்தார். வீட்டுக்குள் வந்ததும் தாதியிடம் தமயந்தியைப் பற்றி விசாரித்தார். எனக்குக் கிடைத்த பதில் அவருக்கும் கிடைக்கவே, அவர் அந்தத் தாதியிடம் அவசரமாக ஒரு குறிப்பு எழுதிக் கொடுத்து அதை ஞாபகமாக தமயந்தியிடம் கொடுக்கும்படி சொல்லிவிட்டு வெளியேறினார். அவர் போனதும் அந்த வேலைக்காரி அவர் கொடுத்த கடிதத்தை என்னிடம் கொடுத்து ''அம்மா, எந்தத் தெருவுக்கு என்ன கேசைப் பார்க்க வரவேணும் என்று எழுதியிருக்கார். பாருங்க. இதுவும் பிரசவக் கேசா இருந்தால் நான் ஆஸ்பத்திரிக்கு ஓடிப்போய் முதலில் ஒரு மருத்துவச்சியை அந்த வீட்டுக்கு அனுப்பிவைக்கணும். டாக்டரம்மா திரும்பி வந்ததும் அங்கே போகச் சொல்லணும்' என்றாள். அவள் கொடுத்த கடிதத்தை வாங்கிப் படித்ததும் ஆச்சரியத்தால் ஒரு கணம் என் மூச்சே நின்று போய்விடும் போலிருந்தது. அந்தக் கடிதத்தில் கண்டிருந்த விஷயம் இதுதான்.

'மறுபடியும் அடுத்த சனிக்கிழமை உன்னைச் சந்திக்கிறேன். ரயில்வே ஸ்டேஷனில் வெகு நேரம் வரை காத்திருந்தும் நீ வராததால் இங்கே வந்தேன். இரவு பத்து மணி ரயிலுக்கு ஏமாற்றத்துடனேயே திரும்பிப் போகிறேன்.'

என்று எழுதியிருந்தது. அதற்கு அடியிலிருந்த கையெழுத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆமாம்! தமயந்தியைப் பற்றி அத்தை தெரிவித்த தகவல்கள் அனைத்தும் உண்மை. தமயந்தியின் இங்கிதமான பழக்கமும், இனிமையான பேச்சும் இனிமேல் என்னை மயக்க முடியாது! தமயந்தி தேர்ச்சி பெற்ற ஒரு சாகசக்காரிதான் என்ற முடிவுக்கு வந்தேன். அடுத்த கணம் 'இது ஒன்றும் அவசரக் கேசு இல்லை' என்று கூறி அந்தக் குறிப்பை அந்தத் தாதியிடம் திருப்பிக் கொடுத்து விட்டுத் திரும்பினேன்.

இரவு சுமார் பத்து மணிக்குத் தமயந்தி என் வீடு தேடி வந்து அத்தைக்கு மருந்து கொடுத்துவிட்டுப் போனார். அத்தையின் உடம்பு சரியாகும் வரை மருந்து வாங்கிக் கொண்டு வருவதற்காகச் சில தடவைகள் டாக்டர் தமயந்தியைப் பார்க்கும் நிர்ப்பந்தம் எனக்கிருந்தது. அது முடிந்ததும் கொஞ்சம் கொஞ்சமாகத் தமயந்தியிடம் பழகுவதைக் கட்டுப்படுத்தி இறுதியாக எப்பொழுதாவது தற்செயலாகத் தமயந்தியை நேருக்கு நேராகப் பார்த்து விட்டால் வேறு வழியின்றி இரண்டு வார்த்தைகள் பேசிச் சம்பாஷணையை முடிக்கும் அளவுக்கு வந்து விட்டேன்.

ஒருமாதம் சென்று மறைந்தது. ஒரு நாள் இரவு சுமார் 10 மணி இருக்கும். சாப்பாடானதும் அத்தை படுத்துத் தூங்கிவிட்டாள். அடுத்தநாள் வகுப்பில் நான் போதிக்க வேண்டிய பாடல்களைப் பற்றிக் குறிப்புகள் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தேன். மூடியிருந்த வாசல் கதவை யாரோ தட்டினார்கள். கதவைத் திறந்தேன். வாசலில் கார் ஒன்று நின்று கொண்டிருந்தது. அதிலிருந்து முதலில் இறங்கினவள் எனக்கு ஏற்கெனவே பரிச்சயமான தமயந்தியின் ஆஸ்பத்திரியிலிருந்த வேலைக்காரப் பெண், அவள் என்னிடம் 'டாக்டர் அம்மா இங்கே வந்தார்களா?' என்று வினவினாள். இல்லை என்ற பாவனையாக நான் தலையை அசைத்ததும் காரில் இருந்த இன்னொரு பெண் கீழே இறங்கினாள். அவள் முகத்தில் சோகம் கவிந்திருந்தது. 'அம்மா, டாக்டர் தமயந்தியை எப்படியாவது பார்த்து என்னுடன் அழைத்துப்போக வேண்டும். ஊரெல்லாம் தேடியும் தமயந்தியைக் காணவில்லை' என்றாள் கலவரம் கலந்த குரலில். வந்தவளுக்கு என்னாலான உதவியைச் செய்யலாம் என்று நினைத்துத் தமயந்திக்கு அறிமுகமான குடும்பங்களின் வீடுகளுக்கு நானும் அதே காரில் ஏறிக்கொண்டு தமயந்தியைத் தேடுவதில் முனைந்தேன். ஒன்றும் பயனில்லாமல் ஒருமணி கழித்து நான் மட்டும் வீடு திரும்பினேன். காரில் வந்தவள் தமயந்தியை அவசரமாகக் காண வேண்டுமென்று தெரிவித்தாளே தவிர, யாருக்கு என்ன வியாதி என்று அவளும் சொல்லவில்லை. நானும் கேட்கவில்லை.

அடுத்த நாள் காலையில் தற்செயலாக ஆஸ்பத்திரி கம்பவுண்டரைப் பார்த்துத் தமயந்தியைப் பற்றி விசாரித்தபோது இரண்டு நாள் அவசர லீவு எடுத்துக் கொண்டு, தமயந்தி முந்திய நாள் இரவு ஏழு மணிக்கே ஆஸ்பத்திரியிலிருந்து போய்விட்டாள் என்று தெரிந்து கொண்டேன். அதனால் என்னுடைய வியப்பு இன்னும் அதிகமாகியது.

3

இரண்டு நாட்கள் கழிந்தன. பள்ளிக்கூடத்திலிருந்து நான் வீட்டுக்குத் திரும்பி வந்ததும் தமயந்தியின் ஆஸ்பத்திரி சேவகன் என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுச் சென்றான். கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். தமயந்தி தான் எழுதியிருந்தாள். ''இன்னும் சில தினங்


SWASTIK OIL MILLS LTD
BOMBAY
SWASTIK
777
SOAP
777 சோப்புகள்
சிறப்பாகவும்
சிரமமின்றியும்
சிக்கனமாகவும்
சலவை செய்கின்றன
உங்களது துணிமணிகளுக்கு
நீண்டகாலம் உழைப்பை அளிக்கின்றது
777
'பார்களும், மிக நேர்த்தியான கேக்குகளும்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., வாடாலா, பம்பாய்
S.O.M. 174



அருணோதயம் முதல்
நட்சத்திரம் உதிக்கும்
வரையில் – நாள்முழுவதும்
இனிய வாசனையோடிருப்பீராக
டால்கம் பவுடர்
பள பள
வென்று ஜொலிக்கும்
புதுமைக்கு காஷ்மீர் புக்கே
டால்கம் பவுடரை உங்கள்
மேல் தாராளமாகத் தூவுங்கள்.
அது அதிகக் கசிவை உறிஞ்சுகிறது...எரிச்சலையும்
அரிப்பையும் அடங்கச் செய்கிறது . . . உங்களைக்
குளிமையுடனும் இனிய வாசனையுடனும், நாள
முழுவதும் புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.
காஷ்மீர் புக்கே
மானிடர்கள் விரும்பும் பரிமளத்துடன்

களுக்குள் இவ்வூரை விட்டுப் போய் விடுவேன். அதற்குள் உன்னைக் கண்டு பேசி, உன்னிட மிருந்து விடை பெற்றுக் கொள்ள வேண்டு மென்று விரும்புகிறேன். உனக்கு எப்பொழுது சௌகரியப்படும் என்று பதில் எழுதியனுப்பவும்'' என்று எழுதி யிருந்தது.

இவ்வளவு நாள் பழகியபிறகு தமயந்தி ஊரை விட்டே போகும் போது அவளைப் பார்த்துப் பேசி விட்டு வரவேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தேன். அன்றிரவே தமயந்தியைப் போய்ப் பார்த்தேன். என்னைக் கண்டதும் தமயந்தி ''பவானி! இன்னும் ஒரு வாரத்தில் இந்த ஊரை விட்டுப் புறப்பட்டுப் போய் விடுவேன். நாம் இருவரும் ஒரு காலத்தில் நெருங்கிப் பழகினோம். நடுவில் என்ன காரணத்தினாலோ நாம் ஒருவரை விட்டு மற்றொருவர் விலகிக் கொண்டே வந்தோம். நமக்குள் நிலவிய சிநேகத்தின் காரணமாக என்னைப் பற்றிய ஒரு முக்கியமான தகவலை உன்னிடம் தெரிவிக்க வேண்டு மென்று என் மனத்தில் தோன்றியது. அதற்காகத்தான் உன்னை இங்கே வரும்படி கடிதம் எழுதினேன். எனக்குக் கலியாணமாகிப் பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு அடுத்த வாரத்தில்தான் என் கணவருடன் முதன் முதலாக அவருடைய வீட்டுக்குப் போகிறேன்'' என்றாள்.

''விவாகமாகிப் பதினைந்து வருஷங்கள் கழித்து இப்பொழுதுதான் முதன் முதலாக உங்கள் புருஷர் வீட்டிற்குப் போகிறீர்களா!'' என்று மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டேன்.

''அதற்குச் சந்தர்ப்பம் இப்போதுதான் வந்தது'' என்று சொல்லி மேலும் தொடர்ந்தாள் தமயந்தி.

''என்னுடைய பதினைந்தாவது வயதில் எனக்குக் கலியாணம் நடந்தேறி




யது. அப்பொழுது நான் எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தேன். என் தகப்பனார் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு மிராசுதாரின் நிலங்களை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார். ஏதோ சுமாரான சம்பளமும் சாப்பாட்டுக்கு நெல்லும் வசிப்பதற்கு வாடகையில்லாமல் வீடு ஒன்றையும் கொடுத்திருந்தார் மிராசுதார். என்னுடைய துர்அதிர்ஷ்டம் மிராசுதார் ஏதோ கோர்ட்டு வழக்கில் என்னுடைய தகப்பனார் புத்திமதியையும் மீறி ஈடுபட்டார். அதன் பயனாக அவருடைய சொத்தில் பெரும்பாகம் கரைந்தது. அப்பாவுக்கும் அவருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்படவே அப்பா அந்த வேலையை விட்டு விட்டுக் குடும்பத்தோடு திருச்சிக்குப் போய் மிகவும் சொற்ப சம்பளத்தில் ஜவுளிக்கடை ஒன்றில் உத்தியோகத்தில் அமர்ந்தார். அப்பொழுது என் கணவர் பட்டணத்தில் எம். ஏ. படித்துக் கொண்டிருந்தார். என் புக்ககத்தாரின் குடும்பம் கோயமுத்தூரில் இருந்தது. அந்தச் சமயத்தில்தான் என்னுடைய கலியாணத்தின் போது என் தகப்பனார் பின்பு கொடுப்பதாக ஒப்புக் கொண்ட வரதட்சணையின் ஒரு பகுதியை உடனே கொடுக்கும்படி வற்புறுத்தி என் மாமனார் என் தகப்பனாருக்குக் கடிதம் எழுதினார். என் தகப்பனார் அப்பொழுது அவருடைய கஷ்டமான நிலைமையை விளக்கி, பணத்தைத் தருவதற்குச் சௌகரியமில்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொண்டார். இதே விஷயமாகச் சென்னையிலிருக்கும் என் கணவ



ருக்கு நானும் ஒரு கடிதம் எழுதினேன். நான் எழுதிய கடிதம் அவர் அந்த விலாசத்தில் இல்லை என்ற தபால் இலாகாவின் குறிப்புடன் எனக்கே திரும்பி வந்து விட்டது. சில நாட்கள் கழித்து என் மாமனார் எங்கள் வீடுதேடி வந்து அவருடைய பையனைப் பற்றி விசாரித்தார். உண்மையிலேயே என் கணவர் எங்கு சென்றிருக்கிறார் என்ற தகவல் தெரியாததால், நாங்களும் திகைப்படைந்து, எங்களுக்கு இதுபற்றிய விவரம் ஒன்றும் தெரியாது என்று சொன்னோம். ஆனாலும் எங்கள் வார்த்தையில் என் மாமனாருக்கு நம்பிக்கையில்லை. நாங்கள் வேண்டுமென்றே அவருடைய பிள்ளையைச் சென்னையிலிருந்து வேறு எங்கேயோ அனுப்பி விட்டதாகக் குற்றம் சாட்டிவிட்டுச் சென்றார். இந்தச் சம்பவத்தின் காரணமாக எங்கள் இரு குடும்பங்களுக்குள் இருந்த சௌஜன்யம் குறைந்து கொண்டே வந்தது.

நான் இண்டர் வகுப்பைப் படித்து முடித்ததும் மேலே என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது சென்னையிலிருந்த என் தகப்பனாரின் நண்பர் ஒருவர் என் தகப்பனாரிடம் வந்து ''உங்கள் மாப்பிள்ளை போன இடம் தெரியவில்லை. உங்கள் சம்பந்திகள் தமயந்தியை அவர்கள் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போக மாட்



"டாக்டர் ஸார், எனக்குத் தூக்கமே சரியாக வருவதில்லை. வெகு நேரம் சிரமப்பட்டு விட்டுத் தூங்குகிறேன். இராத்திரி வேளையில் ஒரு பூனை ஓடினால்கூட என் தூக்கம் கெட்டு விடுகிறது."

"அப்படியா? ஒரு பவுடர் தருகிறேன். எல்லாம் சௌகரியமாய்ப் போய்விடும்."

"அதை நான் எப்பொழுது சாப்பிட வேண்டும்?"

"அந்த மருந்து உங்களுக்கல்ல. பூனைக்கு இரண்டு நாள் கொடுத்தீர்களானால் அப்புறம் அது உங்கள் வீட்டுப் பக்கம் தலை காட்டாது!"

டார்கள். நீங்கள் உங்கள் பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டிருப்பதைவிட நீங்கள் எல்லோருமே சென்னைக்கு வந்து விடுங்கள். நான் தமயந்திக்கு இலவச சம்பளமும் ஹாஸ்டலில் சாப்பாடும் கிடைக்க ஏற்பாடு செய்து வைத்தியக் கல்லூரியில் சேர்த்து விடுகிறேன். இது உங்கள் பெண்ணுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் உரிய காலத்தில் உதவியாயிருக்கும்" என்று புத்திமதி சொன்னார். நானும் என் தம்பியும் பெற்றோர்களும் திருச்சியை விட்டுச் சென்னைக்கு வந்து சேர்ந்தோம். என் தகப்பனாருக்கு வியாபாரக் கம்பெனி ஒன்றில் உத்தியோகம் கிடைத்தது. நான் டாக்டருக்குப் படித்து பட்டம் பெற்றேன். நான் உத்தியோகத்தில் அமர்ந்து என் தம்பியின் படிப்பையும் கவனித்துக் கொண்டு வந்தேன். என் தம்பி எம். ஏ. பாஸ் செய்ததும் டெல்லியில் உயர்ந்த சம்பளத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து விட்டான். பிறகு நாங்கள் எல்லோரும் டெல்லிக்குப் போனோம். டெல்லியின் சீதோஷ்ண ஸ்திதி எனக்கு அவ்வளவாக ஒத்துக் கொள்ளவில்லை. ஆகையால் மறுபடியும் நான் மட்டும் தமிழ் நாட்டுக்குத் திரும்பி மாதச் சம்பளம் கிடைக்கும்படியான வைத்தியத் தொழிலில் இறங்கித் தொண்டு செய்ய ஆரம்பித்தேன்.

"ஒரு வருஷத்துக்கு முன்பு இந்த ஊரிலிருந்து இருபது மைலுக்கு வடக்கேயுள்ள ராசப்பேட்டையில் உத்தியோகத்தில் அமர்ந்த முதல் வாரத்திலேயே எனக்கு ஒரு சோதனை ஏற்பட்டது. ஒரு நாள் காய்ச்சலுடன் கூடிய நாலு வயதுக் குழந்தை ஒன்றைக் கூட்டிக்கொண்டு ஒரு வயதான சுமங்கலி வந்திருந்தார். குழந்தையைச் சிகிச்சை செய்வதற்காக ஆஸ்பத்திரியிலேயே அனுமதித்திருந்தேன். அதனால் அந்த வயது முதிர்ந்த அம்மாவிடம் அதிகம் பழக நேரிட்டது. பேச்சு வாக்கில் என்னிடம் ஒரு நாள் அவருடைய மாப்பிள்ளை ஏதோ நல்ல உத்தியோகத்தி லிருப்பதாகவும் ஆனால் சில சமயம் சித்தப்பிரமை பிடித்தவர்போல் ஆகிவிடுகிறார் என்றும், அதற்குக் காரணம் அவர் சிறு வயதில் கலியாணம் செய்து கொண்ட பெண் இறந்து போய் விட்டாள் என்று அவருடைய பெற்றோர்கள் அவரை நம்பச் செய்து இரண்டாவது தடவை அவருக்குக் கலியாணம் செய்து வைத்தார்களாம். பிறகு அவருக்குத் தற்செயலாக அவருடைய மூத்த மனைவி உயிரோடிருக்கிறாள் என்று தெரிந்து கொண்டாராம். அது முதல் அவர் சஞ்சலப்படத் தொடங்கினாராம். மூத்த மனைவியைத் தேடுவதில் அவர் மும்முரமாக இருக்கிறார் என்றும் தெரிவித்தார். அவருடைய மாப்பிள்ளையின் பெயர், பிறந்த ஊர், அவருடைய தகப்பனாரின் பெயர் இவைகளைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவருடைய மாப்பிள்ளை வேறு யாருமில்லை; சாட்சாத் என்னுடைய கணவர்தான்.

"இந்த நிலைமையை அறிந்ததும் நான் அவ்வூரில் இனிமேல் அதிக நாட்கள் தங்கக்கூடாது என்று தீர்மானித்தேன். என்னை ஒருவேளை என் கணவர் நேருக்கு நேர் பார்த்துவிட்டால் அதன் விளைவாக நான் அவருடன் போய்க் குடும்பம் வசிக்க நேரிடும். அதனால் அவருடைய இளைய மனைவியின் மனம் சஞ்சலப்படும். குடும்பத்தில் விரும்பத்தகாத சிக்கல்கள் ஏற்படலாம். இதையெல்லாம் தவிர்க்க நான் இந்தியாவை விட்டே மலேயாவுக்கோ, கொழும்புக்கோ போய்விட வேண்டியதுதான் என்று திட்டமிட்டேன். அதற்கெல்லாம் முதல் ஏற்பாடாக அந்த ஊரை விட்டு மாற்றிக்கொண்டு இந்த ஊருக்கு வந்தேன். ஆனாலும் விதி என்னை அவ்வளவு எளிதில் விட்டு விடவில்லை. இந்த ஊருக்கு வந்ததும் என் ஆஸ்பத்திரி அலுவலாகச் சில மருந்துகள் வாங்கி வர ராசப்பேட்டை ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தேன். அங்கேயிருந்த லேடி டாக்டர் எனக்கு ஏற்கெனவே பழக்கமானவள். அவருடைய அறையில் நான் உட்கார்ந்து கொண்டிருக்கும் போதுதான் என் கணவர் அவருடைய குழந்தையைப் பற்றி ஏதோ கேட்பதற்காக அங்கே வந்தார். வந்தவர் என்னைப் பார்த்ததும் சட்டென்று அடையாளம் கண்டுகொண்டு என் பெயரைச் சொல்லி அழைத்துவிட்டு அதிர்ச்சியில் மூர்ச்சையாகி விட்டார். நானும் அந்த லேடி டாக்டரும் சேர்ந்து அவருக்கு மூர்ச்சை தெளிவித்தோம்.

"அவருக்குச் சுய நினைவு வந்ததும் பதினைந்து வருஷங்களுக்கு முன் அவர், என் தகப்பனார் கொடுக்கவேண்டிய வரதட்சணைப் பாக்கியை எங்கள் குடும்ப நிலைமையை உத்தேசித்து வாங்க வேண்டாமென்று அவருடைய தகப்பனாரிடம் கேட்டுக் கொண்டாராம். அதற்கு அவர் தகப்பனார் சம்மதிக்காமல் போகவே ஒருவருக்கும் தகவலில்லாமல் உத்தியோகத்தை நாடி பர்மாவுக்குப் போய் விட்டாராம். அங்கு உத்தியோகத்தில் அமர்ந்ததும் எங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இதற்குள் நாங்கள் திருச்சியை விட்டுக் கிளம்பி விட்டதால் அவருடைய கடிதங்கள் ஒன்றாவது எங்களுக்கு வந்து சேரவில்லை. அதற்கு மேல் அவர் கோயமுத்தூரிலிருந்த அவருடைய பெற்றோர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அவர்கள் பர்மாவுக்குச் சென்று, ரயில் விபத்தில்

நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா ?



உங்கள் பற்களையும், ஈறுகளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையைக் கொண்டு காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதில் சொரசொரப்பான பொருள் ஏதுமில்லை. மிருதுவாகவே உங்கள் பற்களை பளபளப்பான வெண்ணிறம் உண்டாகும்படி சுத்தம் செய்யும். வாயில் ஊறும் அபாயகரமான புளிப்பு நீர்களைக் கரைத்து பல்சொத்தை பிடிப்பதைத் தடுக்கும்.

மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை மிகச் சுத்தமானது. உபயோகிப்பதற்கு ஆனந்தமாயிருக்கும். அதனால் தான் உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் தினமும் இருதடவை தங்கள் பற்களை மக்ளீன்ஸினால் துலக்குகிறார்கள்.

நான் எந்தப் பற்பசையை உபயோகிக்கிறேன் என்று இந்த வாரத்தில் எண்ணிறந்த பேர் வந்து கேட்டார்கள். ஏனெனில் என் பற்கள் அத்தனை வெண்மையாயிருக்கின்றன....

இன்றே மக்ளீன்ஸ் வாங்குக!



MTY-5 TAM.

வியாபார விவரங்களுக்கு: ஜே.எல். மாரிசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட், மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.



பக்கத்து வீட்டுக்காரர்:— நீங்கள் புது ரேடியோ வாங்கினதிலிருந்து எனக்குத் தலைவலி பொறுக்க முடியவில்லை!

வீட்டுக்காரர்:— அடடே, அப்படியா? நம்ம ரேடியோ அத்தனை சத்தம் போடுகிறதா, என்ன?

பக்கத்து வீட்டுக்காரர்:— இல்லை, ஸார்! உங்கள் மாதிரி என்னையும் ஒரு புது ரேடியோ வாங்கச் சொல்லி என் மனைவி அப்படித் தொண தொணக்கிறாள். கஷ்டம்!

என் தகப்பனார் பெயரை உடைய வேறு ஒருவர் குடும்பத்தோடு காலமாகி விட்ட செய்தியைப் பத்திரிகையில் இருந்து காட்டி என் கணவருக்கு இரண்டாவது கலியாணம் செய்து வைத்து விட்டுத் திரும்பி விட்டார்கள். இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமானபோது என் கணவரும் அவர் குடும்பமும் இந்தியாவுக்குத் திரும்பியது. அப்பொழுது ஒரு சமயம் என் குடும்பத்தைத் தெரிந்த ஒருவரை என் கணவர் சந்தித்தபோது, நான் படித்து டாக்டர் பட்டம் பெற்று உத்தியோகத்திலிருக்கிறேன் என்ற தகவலைத் தெரிந்து கொண்டாராம். அது முதல் என்னைத் தேடிக் கண்டு பிடிப்பதில் முனைந்திருக்கிறார். என்னைக் கண்டதும் தன்னுடன் வந்து இருக்கும்படி சொன்னார். நான் மனதிலிருந்த தீர்மானத்தை வெளியிடாமல் இன்னும் சில காலத்துக்கு நாங்கள் இருவரும் தனித்து இருப்பதுதான் நல்லது என்று மட்டும் தெரிவித்தேன்.

"அதற்கு அவர் சம்மதித்தார். ஆனாலும் என்னை வந்து பார்த்துப் போகவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நிலைமை தெளிவுபடும் வரையில் நான் அவரை என்னுடைய இடத்துக்கு அழைத்துக் கொண்டுவர விரும்பவில்லை. ஒவ்வொரு சனிக்கிழமையும் இவ்வூர் ரயில்வே ஸ்டேஷனில் சில மணி நேரம் சந்திக்க மட்டும் நான் ஒப்புக் கொண்டேன்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் அவரைப் பார்க்கப் போகும் ஆர்வத்தில் சந்தோஷமா யிருப்பேன். ஆனால் அவரைப் பார்த்துப் பேசிவிட்டு வந்ததும் அவருடைய இரண்டாவது மனைவிக்கு ஏதோ குற்றம் செய்துவிட்டது போல் என் மனத்திற்குப் படும். இந்த மாதிரி நிலைமையில் தான் நானும் அவரும் ஒரு வருஷ காலமாகப் பழகி வந்தோம். கடைசியாக போன வாரம் அவரிடம் என் இஷ்டத்தை வெளியிட்டு இவ்வூரை விட்டுக் கிளம்பி இந்தியாவுக்கு வெளியே புறப்பட வேண்டியது தான் என்ற முடிவுக்கு வந்தேன்.


"மறுபடியும் விதி குறுக்கிட்டது. சென்ற சனிக் கிழமை அவர் என்னைப் பார்ப்பதற்கு வரவில்லை. காரணம் தெரியாமல் நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது ராசப்பேட்டை லேடி டாக்டரிடமிருந்து என் கணவருக்குக் கடுமையான ஜுரம் என்றும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார் என்றும் தகவல் வந்தது. இரண்டு நாள் லீவு போட்டுவிட்டு அன்றைய சாயந்திரமே நான் புறப்பட்டுப் போனேன். ஜுரம் கொஞ்சம் மட்டுப்பட்டதும் இன்று காலை தான் இங்கே திரும்பி வந்தேன். இதற்கிடையில் தான் என்னுடைய புருஷர் இரண்டாவது தாரம் விவாகம் செய்து கொண்ட பெண் என்னைத் தேடிக் கொண்டு இங்கே வந்திருக்கிறாள். நீ அவளுக்குச் செய்த உதவியைப் பற்றி என்னிடம் சொன்னாள். அவள், அவளுடைய பெற்றோர், அங்கே வந்திருந்த என்னுடைய மாமனார், மாமியார் எல்லோரும் வற்புறுத்தியதின் பேரில் நான் மறுபடியும் அவர்கள் குடும்பத்தில் ஒருத்தியாகப் போய்விடுவதாக வாக்களித்து விட்டு வந்திருக்கிறேன். என்னுடைய இஷ்டத்தை நான் எடுத்துச் சொன்ன போது ஒருவரும் அதற்குச் சம்மதிக்கவில்லை. முக்கியமாக என் கணவருடைய மனோ நிலைமையை நான் கருத வேண்டும் என்று எல்லோரும் ஒரே பிடிவாதமாக என் வைராக்கியத்தைக் கைவிடுமாறு செய்துவிட்டனர்" என்று தன் கதையைச் சொல்லி முடித்தாள்.

தமயந்தி கூறிய வரலாற்றைக் கேட்டதும் என் மெய் சிலிர்த்தது. இவ்வளவு உன்னதமான பண்பைப் படைத்த ஒருவளைப் பற்றி ஒவ்வொரு சமயம் வேறு விதமாக நினைத்ததை எண்ணி உள்ளம் வெதும்பினேன். என் மனத்திலுள்ளதைத் தெரிவித்துக் கொள்ள முடியாமல் நோயாளி ஒருவர் தமயந்தியைத் தேடிக் கொண்டு வந்து விட்டதால் தமயந்தியிடம் விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினேன். அத்தையிடம் தமயந்தியின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லி முடித்து விட்டு "அத்தை, நான் தமயந்தியைப் பற்றித் தவறாக நினைத்ததற்கு என்ன பிராயச்சித்தம் செய்வது என்று தான் எனக்குப் புரியவில்லை" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே டாக்டர் தமயந்தி உள்ளே வந்தாள்.

"அதற்குச் சரியான பிராயச்சித்தம் நீயும் என் குடும்பத்தில் ஒருத்தியாக ஆகி விடுவதுதான்" என்று என்னைப் பார்த்துக் கூறிவிட்டு அத்தையை நோக்கி டாக்டர் தமயந்தி பேசத் தொடங்கினாள். "உங்கள் மருமாள் பவானியைப் பார்த்தவுடனேயே டெல்லியில் இருக்கும் என் தம்பிக்கு ஏற்ற மனைவியைத் தீர்மானித்து விட்டேன். நாளைக்கு என் தம்பி டெல்லியிலிருந்து இங்கே வருகிறான். அவனைப் பார்த்துப் பவானி ஒப்புக் கொண்டால் போதும்!" என்று சொன்னாள்.

கதையை வளர்த்துவானேன்! டாக்டர் தமயந்தியின் மனோரதம் நிறைவேறியது. அடுத்த சுப முகூர்த்தத்தில் நானும் தமயந்தியின் தம்பியும் தம்பதிகளானோம். முற்றிலும் எதிர்பாராத விதமாக என் மனதிற்கிசைந்த இல்வாழ்க்கைத் துணைவரை நான் அடைந்ததைப் பற்றி என் குடும்பத்தவர்களுக்கு எவ்வளவோ குதூகலம். ஆனாலும் நான் சம்பந்தப்பட்டவரை டாக்டர் தமயந்தியைப் போல ஒரு உத்தமியின் சகோதரருக்கு வாழ்க்கைப் பட்டதை எண்ணியே பெருமை அடைந்து வருகிறேன்.

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
***116-119*, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras**


"என் சருமத்தை லக்ஸ் டாய்லட் சோப்பினால்தான் பாதுகாத்துக்கொள்கிறேன்"
என்கிறார்
மங்களம்
LUX
இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப், உங்கள் சருமத்தை வசீகரமாகச் செய்யும்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 326-X30 TM

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon



HVM. 168-50 TM